# தென்மொழி

## கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்




### மற்போர் தொடங்குக!

கற்போரே செந்தமிழைக் கலக்குகின்றூர் ;
காசுபணம் பதவிநலம் தமக்கே மானம்
விற்போராய் வாழுகின்றூர் ; விளைவெல்லாம்
வீழ்த்துகின்றூர் ; இனிமேலும் அவர்பால்
சென்
சொற்போரால் மல்லாடிச் சோர்வுறுதல்
முறையன்று ; தமிழ்நினைவு சூம்பும் முன்
மற்போரைத் தொடங்கிடுவாய் ; எழுதமிழா !
மறுநொடியில் விளைவுபல மலிதல் காண்பா

கும்பம் (மாசி)
தி. பி. ககூகூஎ.

K.33, L.N.PURAM, BANGALORE-2

ரூ 50 காசு




கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 4 | மாசி தி. பி. 1997 (1966 பிப்ரவரி) | ஓலை 1

# தெ. பொ. மீ.யும் மதுரைப் பல்கலைக் கழகமும்

கூரைமேல் குரங்கை அமர்த்தியதைப் போல், தெ. பொ. மீ.யை மதுரையில் அமைக்கவிருக்கும் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராகத் தேர்ந்தெடுத்துள்ளது தமிழக அரசு. தமிழக அரசு என்று பொதுப் பெயராகக் குறிப்பிடப் பெற்றாலும், இப்பெயர் முழுவதும் தனிப்பட்ட ஒருவரின் வல்லாண்மைக்கும் சூழ்ச்சிக்குமே அடிப்படையாக அமைந்திருப்பதை இந்நாட்டிலுள்ள அனைவரும் அறிவர். அந்த ஒருவர்தாம் முதலமைச்சர் திரு. பக்தவத்சலமாகும். அவர் எண்ணமே தமிழக அரசின் எண்ணமாகவும், அவர் கூறியதே தமிழக அரசின் கூற்றாகவும், அவர் முடிவே தமிழக அரசின் முடிவாகவும் பறைசாற்றப் பெற்று வருவதைக் காணில், ஒருவேளை திரு பக்தவத்சலம் தமிழக அரசாட்சி முழுவதற்கும் தனி வல்லாண்மை பெற்றவரோ என்றே ஐயமேற்படுகின்றது. எத்துறைக்கும், எச்செயலுக்கும் அவரே முற்றுங் கற்ற முதறிவாளர் போல் முன்னின்று கருத்தறிவிப்பதும் செயல்படுவ

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-1.

தும், அவர் முடிவையே இங்கு அவரால் பதவியேற்றப்பெற்ற 'பேரறிஞர்', எனப்படுவோரும், 'அப்படியே அப்படியே' என்று தலையசைத்து வரவேற்பதும், இத் தமிழக அரசு நடத்தும் எல்லா நடைமுறை நாடகங்களிலும் பொதுவாக வரும் ஒரு காட்சியாகும். அவ்வகை நாடகக் காட்சிகளில் ஒன்றே திரு. தெ. பொ. மீ. மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமர்த்தப் பெற்றது.

திரு. பக்தவத்சலம் தெ. பொ. மீ.யை இப்பல்கலைக் கழகத்திற்குத் தலைவராக அமர்த்தியதற்குத் தலையாய காரணம் ஒன்று உண்டு. அவரைத் தவிர இப்பதவிக்கு இத் தமிழகத்தில் எவரும் தகுதியுடையவரல்லர் என்பதும், அவரறிந்த தமிழைவிடப் பேராசிரியர் எனப்படும் பிறர் அறிந்த தமிழறிவு எல்லாம் பயனில்லை என்பதும் அக்காரணமாக இருத்தல் முடியாது. ஏனென்றால் 'காவலர்' என்று வழக்கில் வந்து பொருந்தி, இப்பொழுதும் தமிழ் மக்கள் எல்லாருக்கும் எளிதில் புரிகின்ற சொல்லைப் 'போலீசு' என்று மாற்றியமைத்தல் வேண்டும் என்று விடாப்பிடியாக மாற்றியமைத்த திரு. பக்தவத்சலம் தமிழ் பற்றிக் கருத்தாராய்ச்சி செய்திருப்பார் என்றோ, தமிழர் நலம் பற்றிக் கவலைப் பட்டிருப்பார் என்றோ நாம் கருதிவிட முடியாது. ஆனால் இப்பொழுதிருக்கின்ற பேராசிரியர் எல்லாரையும்விட திரு. தெ.பொ.மீ.யே தாம் வாயால் சொல்வதைத் தலைமேல் ஏற்றுச் செய்யும் தகுதியும் அடிமைத்தன்மையும் வாய்ந்தவர் என்று முதலமைச்சர் கருதியிருக்க வேண்டும். சட்டமன்றத்தில் எழுப்பப்படும் எத்துணை பெரிய உண்மையான கேள்விகளுக்கும் 'அப்படி நாம் கேள்விப்படவில்லை' 'அதுபற்றி அரசினர்க்குத் தெரியாது', 'அரசு இப்படித்தான் கருதுகின்றது' என்று ஓரிரு சொற்களிலேயே விடைகூறி, எல்லா அரசியல், குமுகாய, பொருளியல் சிக்கல்களுக்கும் முற்றுப்புள்ளியிட்டு வெற்றி முரசு கொட்டித்திரியும் திரு. பக்தவத்சலத்தின் ஆய்வுக்கூடத்தில் இப்படிப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு நடந்ததைப் பற்றியோ, இனி நடப்பதைப்பற்றியோ எவரும் வியப்படைய வேண்டா. இல்லெனில் தமிழில் முதுகலை தேறியவர்கள்தாம் பல்கலைக் கழகத் தலைமை பெறலாம் என்ற பல்கலைக் கழக நெறிமுறையினையும் விட்டுக் கொடுத்துச் சந்து செய்து, அந்தச் சந்து வழி திரு. தெ. பொ. மீ.யை அவர் உள்ளே நுழைத்திருக்கமாட்டார். இவர்தம் முடிவையே தமிழகத்தில் உள்ள பேராசிரியப் பின்பாட்டுக்காரர்களும், கல்வித்துறைக் கைத்தாளக்காரர்களும் அப்படியே சொல்லும், அடியும், இசையும் பிறழாமல் பாடியிருக்கமாட்டார்கள்! இவ்வகையாகத் தாங்கள் கருத்திழந்து வரவேற்ற முடிவை. இத்தமிழகத்தில் உள்ள தமிழறிஞர் எல்லாரும்

ஒருவர்கூடத் தப்பாமல் வரவேற்றுக் கைதட்டினர் என்றொரு பச்சைப் பொய்யை அவிழ்த்திருக்கவும் மாட்டார்கள்?

அப்படித் தெ. பொ. மீ. தமிழுக்குச் செய்த அரிய பெரிய செயல்தான் என்ன? அவர் அமெரிக்கா சென்று ஆற்றிய சொற்பொழிவால் மேனாடுகள் எல்லாம் தமிழை வரவேற்றுப் போற்றுகின்றன என்ற பெருமிதமா? மறைந்துகிடக்கின்ற அரும் பெரும் தமிழ் நூல்களை வெளிப்படுத்தினரா? நேற்று முளைத்த இந்தி மொழிக்குக்கூட அரும் பெரும் முயற்சியால் கலைக் களஞ்சியங்களை வெந்ததும் வேகாததுமாக வெளியிட்டு வருகின்றதைப் போல் உயர்ந்த சிறந்த ஆராய்ச்சி முடிவு நிரம்பிய கலைக் களஞ்சியங்களையோ அகரமுதலிகளையோ வெளியிட்டுத் தொண்டுபுரிந்தாரா? மூலமும், வேரும், ஒலியும் நுண்ணிதாக அமைந்து ஆழ்ந்து, அகன்று பரந்த தமிழ் மொழிக் கடலுள் மூழ்கி அவர் எடுத்துக்காட்டிய முத்துகள் எத்தனை? கைநிறைய வாங்கும் சம்பளத்திற்காகவும், வாய் நிறையப்பாடும் புகழ்ச்சிக்காகவும் தமிழ்ப் பேராசிரியர் வேலையையே ஒழுங்காகச் செய்ய முடியாத அவர் செய்ததுதான் என்ன? தன்னலமற்ற தமிழ்த் தொண்டுகள்தாம் எவை? திரு. வையாபுரி வழிநின்று தமிழைக் கெடுத்தும், தமிழுரிமையைத் தடுத்தும் தமிழ் வரலாற்றுண்மையைத் திரித்தும் வருவதல்லால் அவர் தமிழ் மொழிக்கு நிலையாகச் செய்த நன்மைகள்தாம் எவை?—அரசினரும் அவரைத் தவிரத் தகுதியுடையவர் இத்தமிழகமெங்கணும் இல்லை என்று வாய்ப்பறையறையும் பேராசிரியர் பிறரும் இதற்குத் தக்க விடையிறுப்பரா? பன்மொழிப் புலவர் என்று பாராட்டப் பெறும் தெ. பொ. மீ.தான் இதற்குத் தன்னடக்கம் சான்ற மறுமொழி தருவாரா?

மொழித்துறையிலும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சியிலும், பிறமொழியறிவிலும், தமிழ்ப்பற்றிலும் தலைசிறந்து, தம் செம்மாந்த போக்கால் பிறர் கூறும் புன்மொழிக்கெல்லாம் தலையசைக்காத ஓரிரு பேரறிஞர்கள் இத்தகையார் கண்களிற் படாமைக்குக் காரணம் என்ன? முதலமைச்சரின் மூளை என்ன உருசிய அறிவியல் அறிஞர்களின் ஆய்வுக்கூடமா? அவர் கண்ட முடிவே முடிவென்று தலையசைக்க இங்குள்ள அறிஞர்கள் எல்லாருமா வடநாட்டிற்கு அடிமையாகப் போய் விட்டனர்? வடக்கே திரு. சுனித்குமார் சட்டர்சிக்கும், தெற்கே தெ. பொ. மீ.க்கும் தவிர, பிறர் ஒருவருக்கும் திரவிட மொழியாராய்ச்சி அறிவும், தமிழறிவும் இல்லை என்று திரு. பக்தவத்சலம் கருதிக் கொண்டாரோ? கல்வித்துறையைச் சேறாகக் கலக்கிக் கொண்டிருக்கும் தம் அறியாமையை இவர் இங்கும் வெளிப்படுத்தியது தமிழகத்தின் போகூழே! இவ்

விடத்தில் எல்லாரும் ஓர் உண்மையை மறந்துவிடலாகாது. தமிழ் வளர்ச்சித் துறைக்கு அக்கறை காட்டுவார் போலவும் நன்மை செய்வார் போலவும் தம் முந்திரிக்கொட்டைத் தன்மையால் வரைதுறையின்றித் தம் கருத்துகளையும் செயல்களையும் ஆற்றித் தமிழக ஆட்சிக் குட்டையைச் சேறுகக் குழப்பிக் கொண்டிருக்கும் திரு. பக்தவத்சலம், தமிழாசிரியர்களெல்லாரும் சேர்ந்து பட்டாளத்துறைக்கோ, காவல் துறைக்கோ படைத்தலைவர் ஒருவரையோ, தலைமை அதிகாரி ஒருவரையோ அமர்த்துவதை ஏற்றுக்கொள்வாரோ? அப்படியிருக்க, தாம் கற்றுத்துறை போகாத தமிழ்த்துறையில் திறந்த வீட்டில் குக்கல் நுழைவது போல் நுழைந்து கருத்தறிவிப்பதும் செயலாற்றுவதும் எப்படிப் பொருந்துவதாகும்? தமக்கிருக்கும் அரசியல் ஆட்சி முறைகளையே சரிவர இயக்கத் தெரியாத இம் முதலமைச்சர் பல்கலைக் கழகத் தலைவரை அத்துறையில் வல்லார்தம் ஒப்போலைகள் வழி தேர்ந்தெடுக்காமல், தாமே எல்லாரினும் வல்லவர் போல் தலையிட்டுத் தேர்ந்தெடுத்ததை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறேம். அரசியல் தலைவர்களும், பிறதுறை அறிஞர்களும் தங்கள் தங்கள் துறைகளைவிட்டுப் பிற துறைகளில் வெளுத்துக் கொண்டிருக்கின்ற இக்கொடும் பழக்கம் இத்தமிழகத்தை விட்டு என்று ஒழியுமோ, அன்றே தமிழ்க்கும், தமிழ் மக்களுக்கும், தமிழகத்திற்கும் நல்ல காலம். அக்காலத்தை நோக்கித் தமிழர்கள் நடையிடுவார்களாக!

—பெருஞ்சித்திரன்

# இந்திராவும் இந்தியாவும்

திரு. நேருவுக்குப்பின் தலைமையமைச்சர் பதவிக்கு எப்படிப் போட்டியும் பூசல்களும் இருந்தனவோ, அப்படியே திரு. சாத்திரிக்குப் பின்னும் அவ்விடத்திற்குப் போட்டியும் பூசல்களும் இருந்தன. இறுதியில் வென்றன சூழ்ச்சியும் விரகாண்மையுமே! பேராயக்கட்சி பதவியில் உள்ளவரை இப்போட்டி பூசல்கள் ஓயப்போவதில்லை. எனவே அவற்றைப் பற்றி நாம் இனிப் புதிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. ஆனல் திரு. நேருவுக்குப்பின் தலைமையமைச்சரின் பதவித் திறன் படிப்படியாகக் குறைந்து போவதை மட்டும் நாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இக்கால் புதிய தலைமையமைச்சராகப் பதவியேற்றிருப்பவர் ஒரு பெண் என்பதைத் தவிர, அரசியலைப்பொறுத்தோ, அதன் நடைமுறைத் தில்லுமுல்லுகளைப் பொறுத்தோ எவ்வகையான புதுமையோ மாற்றமோ ஏற்பட்டு விடவில்லை.

தலைமையமைச்சர்கள் மாறுவதால் பேராயக் கட்சியின் அமைப்பு மாறிவிடப் போவதுமில்லை. அக்கட்சியை ஆட்டிப் படைக்கும் சிலரின் கொள்கைகள் என்றென்றும் பழைய படிகளிலேதாம் இனியும் அளக்கப்படும் என்பதில் எவர்க்கும் எள்ளளவு ஐயமும் வேண்டியதில்லை. அறவுணர்வும், நாவன்மையும், துணிவும், வெளிநாட்டார் பிணைப்பும் ஒருங்கே கொண்ட திரு. நேருவால் தீர்க்கப்படாத பல சிக்கல்களையும், திரு. சாத்திரியால் விளைந்த சில புதிய சிக்கல்களையும் திருவாட்டி. இந்திரா தீர்த்துவிடுவார் என்று எதிர்பார்ப்பது கடுங் கோடைக்காலத்தில் கார்கால மழையை எதிர்பார்ப்பது போன்றதாகும். எனவே அச்சிக்கல்கள் என்றும் நீக்கமற நின்று நிலவிக் கொண்டுதான் இருக்கும். அவைபற்றி அக் கட்சியில் உள்ள தலைவர்களே கவலைப்படா திருக்கையில் நாம் கவலைப்பட்டு விளையப்போகும் பயன் எவ்வளவாக இருந்துவிடப் போகின்றது?

இருப்பினும் நாம் கவலைப்படும் ஒரு செய்தியை எஞ்சியிருக்கும் இவ்விடைக்காலத்திலாவது செய்யட்டும் என்று இப்புதிய தலைமையமைச்சர் காதுகளில் போட்டு வைப்பது நல்லது. "அம்மையே! ஒற்றுமை ஒற்றுமை என்று தவளைக் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதாலும் ஊர்களில் உள்ள சுவர்கள் தோறும் எழுதி ஒட்டிக் கொண்டிருப்பதாலும், நாட்டில் உள்ள திரைப்படக் கொட்டகைகள் எல்லாவற்றிலும் படமாகப் போட்டுக் கொண்டிருப்பதாலும் நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒற்றுமை ஓர் எள்ளின் முக்கத்துணையும் விளைந்துவிடாது. உங்கட்கு உங்கள் தந்தையார் துணிவில் ஓர் அரைக் காற் பங்கேனும் இருக்குமானல் நீங்கள் செய்ய வேண்டிய ஓரிரு செயல்கள் இவை.

க. ஓரளவிற்கு அமைதியாக இருந்த உள்நாட்டில் அமைதியிழக்கச் செய்ததும் பலவாருன மனக்கசப்புகளை உண்டாக்கியதும் நூற்றுக்கணக்கான உயிர்களைக் குடித்ததும், மேலும் பல பூசல்களுக்கும் பிரிவுணர்ச்சிகளுக்கும் விளைவூட்டிக் கொண்டிருப்பதும், பொது மக்களின் பலகோடி உருபாக்களை எடுத்து விழுங்கி வருவதுமான இந்தியை ஆட்சி மொழியாக்குவதினின்று கால வரம்பின்றித் தள்ளிப் போடுவது சிறந்தது. இன்றேல் இவ்விந்திமொழியே இன்னும் ஒரு பத்தாண்டிற்குள் இவ்விந்தியாவைத் துண்டு துண்டாகப் பிரித்துவிடும் என்பதைத் தில்லிச் செங்கோட்டையின் முகப்பில் எழுதிவைத்துக் கொள்ளலாம்.

உ. உணவுப் பொருளின் மேலும், சில இன்றியமையாத இறக்குமதிப் பொருள்களின் மேலும் உள்ள கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குவது.

ந. இந்தியாவை ஒரு தொழில் நாடாகச் செய்வதை விட்டு விட்டு முற்றிலும் ஒரு வேளாண்மை நாடாகச் செய்வது.

ச. அதிகாரமும் செல்வமும் ஓரிடத்திலேயே குவிய விடாமல் உடனடியாகத் தடுத்து நிறுத்துவதும், குல, சமய, வாழ்க்கை ஏற்றத் தாழ்வுகளைப் போக்கக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதும்.

மேலே கண்ட இவற்றை யாகினும் நீங்கள் செய்ய முன் வருவீர்களானால் இந்தியா இந்திராவால் சிதைவினின்று தடுத்தாட் கொள்ளப் பெற்றது என்ற பெருமைக்கு நீங்கள் இலக்காவீர்கள். இன்றேல் தில்லிச் செங்கோட்டையின் தலைமை நாற்காலிக்கு நீங்கள் ஓர் ஒப்பனைப் பாவையே!

பெருஞ்சித்திரன்

## நான்காம் ஆண்டு

தென்மொழிக்கு இது நான்காம் ஆண்டாகும். சென்ற ஆண்டு இதே பொழுதில்தான் தமிழகத்தின் மூலை முடுக்கு களிலெல்லாம் வேட்டொலி கேட்டுக் கொண்டிருந்தது; முதலமைச்சரின் இரக்கமற்ற பார்வையில் நூற்றுக்கணக் கான இளைஞர்கள் துடிதுடித்துச் செத்தனர். சென்ற ஆண்டு இதே வேளையில் எழுதிய ஆசிரியவுரை தான் நம்மைச் சிறைவாழ்வைச் சுவைத்துப்பார்க்க வழியமைத்துக் கொடுத் தது. எனவே செந்தமிழ் நலங்காக்க அன்று பொங்கி எழுந்த தமிழ் உள்ளங்களுக்கும் அரசினர்தம் கொடுமைப் பிடிக்குச் சிக்கி உயிரிழந்த மறவர்களுக்கும் இக்கால் நாம் நம் உயிர் கசிந்த நன்றி நினைவால் தலைவணங்குகின்றோம். அவர் நினைவு நமக்குப் புத்துயிரும் புதுக்குருதியும் புதிய உணர்வை யும் ஊட்டட்டும்.

சென்ற ஆண்டுத் தொடக்கத்தில் இட்ட திட்டப்படி சில உறுதிப்பாடுகளைத் தென்மொழி நடத்தியிருக்கின்றது. தென்மொழிக்கென்று தனியான ஓர் அச்சகமும் நிறுவப் பட்டுக் கொண்டுள்ளது. பெரும்பாலும் மேழ (சித்திரை) மாத இதழ் தென்மொழி அச்சகத்தில் அடிக்கப்படும். அதன் அமைப்புக்கு இதுவரை உள்ளங்கனிந்து உதவிய செந்தமி ழன்பர்களுக்கும், இனி உதவ இருக்கின்ற அருளாளர்களுக் கும் எங்கள் நெஞ்சு நிரம்பிய நன்றி. நாம் திட்டமிட்ட அச்சக அமைப்புக்கு இன்னும் பெருந்தொகை தேவை யெனினும் அதில் ஓரளவையாகிலும் தமிழன்பர்கள் கட்டாயம் தருவார்கள் என்று உளமார நம்பியிருக்கிறோம்.

இனி வரும் ஆண்டில் தென்மொழி இன்னும் துணிவுடன் பல மறைமுகமான உண்மைகளை வெளிப்படுத்த இருக்கின்றது. ஓரிரு மாதங்களுக்குள் தமிழ்மொழிக் காப்பு மாநாடு ஒன்றைத் தென்மொழி கூட்டவிருக்கின்றது. அம் மாநாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், தீர்மானங்கள் யாவும் நூலாக்கப்பெற்று நம்நாட்டு ஆட்சித் தலைமையர்களுக்கும் விடுக்கப்பெறும். அம்மாநாட்டில்தான் தமிழ். தமிழர், தமிழக விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும பல திட்டங்கள் வெளியிடப்பெறும். இதுபற்றி விரிவான அறிக்கை தென்மொழியிலும் பிற செய்தித்தாள்களிலும் வெளியிடப் பெறும். தென்மொழியின் ஆழ்ந்து உரஞ்சான்ற இவ்வினைப்பாடுகளுக்கெல்லாம் துணை நிற்குமாறு உண்மையான தமிழ் நெஞ்சங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

பெருஞ்சித்திரன்

# தண்டமும் தண்டனையும்

—:பெருஞ்சித்திரன்:—

தென்மொழிமேல் அரசினர் தொடுத்த வழக்கின் விளக்கத்தையும், அதன்மூலமாக அவர்கள் எனக்கிட்ட இருநூறு உருபாத் தண்டம் அல்லது நான்கு மாதக் கடுங்காவல் தண்டனையையும், நான் தண்டங்கட்ட மறுத்துத் தண்டனையை ஏற்றுக்கொண்டு சிறை சென்றதையும் தென்மொழி அன்பர்களும் பிறரும் அறிவார்கள். அதன் பின் 17-11-65 ஆம் பக்கலிலிருந்து நான் வேலூர் நடுச்சிறையில் வைக்கப் பெற்றேன். சிறையில் நான் இரண்டாம் வகுப்பில் வைக்கப் பெற்றேன்.

நான் சிறை சென்றது இதுவே முதல்முறையாகலானும், சிறைக்குச் செல்லுமுன் சிறைபற்றிப் பிறர் கூறிய வகைகளான் அஃது கொடுமையான இடம் என்று கருதியிருந்தமையானும், எனக்குத் தண்டமாக இட்ட இருநூறு உருபாக்களைக் கட்டுவதைவிடச் சிறைக்கொடுமையை ஏற்றுக்கொள்வதே நம் உள்ள உரத்தை அரசினர்க்குத் தெரிவிக்கும் சரியான வழியென்று நினைத்தமையானும், நான் அத்தண்டனையையே மனமுவந்து ஏற்றுக் கொண்டேன். ஆனாலும் சிறை செல்லுமுன் நம் தனித்தமிழ்க் கொள்கையையும், அறஞ்சான்ற அரசியல் முறைகளை அரசினர்க்கும் பிறர்க்கும் தெரிவிக்கும் வகையினையும், அவை வழித் தமிழர்களைப் பல்வகையான அறியாமைகளினின்றும் தட்டியெழுப்பும் முகத்தான் தொடங்

கப் பெற்ற தென்மொழி இதழினைத் தொடர்ந்து நடத்த வேண்டிய பொறுப்பினை எவர் கைகளில் ஒப்படைப்பது என்று அக்கறையுடன் கருதினேன். இறுதியாக நம் கொள்கைகளில் என்னைப் போன்றே உணர்வும், உரமும், ஊக்கமும், வலிவும், அறிவும் கொண்ட உறுப்பாசிரியர் திரு. தங்கப்பா அவர்களையே நான் சிறையினின்று மீளுமளவும் தென்மொழியை இடைவிடாது தொடரும்படி வேண்டிக் கொண்டேன். அவருடன் நம் நண்பர்கள் சிலரையும் அவருக்குத் துணையாக நிற்கும்படி கேட்டுக் கொண்டேன். எவ்வாறேனும் தென்மொழியை 10 பக்க அளவிலாவது வெளிக் கொணரும்படி ஏற்பாடுகளைச் செய்தேன். இதழ் வெளியீடு பற்றி நான் இவ்வளவு துயரும் எச்சரிக்கையும கொண்டது ஏன் எனில், நம் தென்மொழி பிற இதழ்களைப்போல் வலிவும், துணையும், பொருளும் கொண்டதன்று. இதனை இயக்கும் குழுவும் பிற அரசியல் கட்சிகளைப் போன்று அமைப்பும், இயக்கமும், உறுப்பினரும், பொருள் நிறைவும் கொண்டதன்று. இவ்வாறு கொள்கையளவில் நின்று இயங்கிவரும் தென்மொழி நின்று போகின், நம் கொள்கை பரப்பும் வேலையே மழுங்கிப் போகும் என்று நான் அஞ்சியிருந்தமையால், இவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியிருந்தது. அதன் பொருட்டே நமக்குத் தொடர்ந்து தொல்லைகள் பல நல்கிவரும் அச்சகத்தாரிடம்கூடப் பணிந்து போகுமாறும், மானங் கருதாது இயங்குமாறும் திரு. தங்கப்பா அவர்களை வேண்டிக் கொண்டேன். நான் விரும்பியவாறே உறுப்பாசிரியர் இவற்றை யெல்லாம் பல இடர்ப்பாடுகளுக்கிடையிலும் அன்பர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் செவ்வனே செய்து வந்தார்.

இருப்பினும் இவை எல்லாவற்றினும் மேலாக ஒருநிலை என்னை மிகவும் வருத்திற்று. நான் சிறைக்குப் புறப்படும் நாளுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்புதான் நமக்கென்று அச்சுப் பொறியொன்று வந்து புகைவண்டி நிலையத்தில் கிடந்தது. இதனை ஏறத்தாழ உருபா 3500 கட்டி எடுக்க வேண்டி இருந்தது. நம் கையிலிருந்த தொகை யெல்லாம் முன்னமே பொறிக்கெனக் கட்டப்பட்டுவிட்டது. பொறி இன்னும் ஓரிரு மாதங்கள் கழித்தே வருமென்று எதிர்பார்க்கப்பட்டமையால், திடுமென வந்த பொறியை எடுக்கப் போதிய பணமின்றித் தென்மொழி பெருந்தொல்லைப்பட்டது. இந்நிலையில் வழக்குச் செலவு வேறு-நம் கைக்குக் கனமாக இருந்தது. பெரும்பாலும் இப்பொருள் தட்டுப்பாடு நம் தென்மொழிக்குத் தொடக்கத்திலிருந்தே வந்ததேனும், இக்கால் முன்னைவிடப் பெரிதும் துயர் தந்தது. நான் புகுந்த ஒரு கிழமைவரை வேலூர் கொண்டு போகப்படாமலிருக்கும் காலத்தே என்னைப் பார்க்க வந்த அன்பர் வழியும், பிறர் வழியும் இப்பெருந்

தொகைக்கு ஏற்பாடு செய்தேன். அச்சக அமைப்புத் திட்டம் நாம் எதிர்பார்த்த அளவு பயன்தராமற் போகவே இடையிடை மனந் தளர்ந்தது. ஆனால் இந்நிலைகளுக்கிடையில் அண்ணமலைப் பல்கலைக் கழக மாணவர்களும் வேறு சிலரும் காட்டிய அன்பும், துணிவும் நம் மனச்சோர்வை ஒருவாறு போக்கிற்று. இறுதியாக நான் வேலூர் சென்ற இரண்டு கிழமைகளுக்குள் அச்சுப்பொறி எடுக்கப் பெற்ற செய்தி யறிந்து மகிழ்ந்தேன். எனினும் இதுவரை அது செயல்படப் போதிய பொருளின்றிக் கிடக்கின்றது. நான் இவற்றையெல்லாம் இங்குக் குறிப்பிடுவது ஏன் என்றால், தென்மொழியை ஒவ்வொரு மாதமும் வெளிக்கொணரவும், அதை நிலைப்படுத்தவும் நாம் எவ்வளவு பாடுகள் படவேண்டியிருக்கின்றது என்பதைத் தென்மொழி நண்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆனால் நான் சிறைக்குப் போன பின்புதான், பிறர் கூறுகின்றபடி அது கொடுமை நிறைந்த ஓர் இடமன்று என்று அறிய முடிந்தது. சுருக்கமாகச் சொன்னால் "அஃது ஒரு சோம்பேறி மடம். நமக்கிருக்கும் இடர்ப்பாடுகளினின்று முற்றும் நீக்கி, நமக்குக் கட்டாய ஓய்வு கொடுத்து, நம் வினைப்பாடுகளை யெல்லாம் மறக்கடிக்க முயலும் ஒரு சோற்று மடம் என்றுதான் நான் அதைக் கருதுவேன்." நாம் எல்லாரும் நினைத்துக் கொண்டுள்ளது போல் சிறையென்பது நம் வலிவையெல்லாம் உரைத்துப் பார்க்கும் ஓர் இடமன்று. நம் வினைப்பாடுகளுக்கெல்லாம் தடையாயுள்ள ஒரு முட்டுக் கட்டை. நம் நினைவுகளை யெல்லாம் திருப்பி, முயற்சி, கருத்து முழுவதையும் உணவிலே செலுத்தச் செய்கின்ற பொழுது போக்கிடம், இங்கு வந்து வீணே நேரத்தையும், வினைகளையும் கொல்லுபவரை எவ்வாற்றானும் உள்ள உரம் படைத்தவர் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இங்கு வருவதைவிட வெளியுலகில் பொருள் நிலையிலும் வாழ்க்கை நிலையிலும் உயர்ந்து போவதற்காக உள்ள எவ்வளவோ வாய்ப்புகளைப் புறக்கணித்து வெறுத்து ஒதுக்கி விட்டுக் கொள்கைகளுக்காகத் தாளா வினையாற்றுபவனே எல்லா வகையிலும் உள்ள உரம் படைத்தவனாவான். நூறு முறை சிறை சென்ற தலைவன் ஒருவனைவிட, ஒருமுறை போர்க்களத்திற்குச் சென்ற மறவன் ஒருவனே உள்ள உறுதி உடையவனும், தன் நாட்டுக்கு மிகுதியும் பாடுபட்டவனும் ஆவான் என்ற கருத்து ஏற்பட்டது. ஒருவேளை ஆங்கிலேயர் காலத்தில் சிறை வாழ்க்கை என்பது மன உரத்தைத் தட்டிப்பார்க்கும் ஆய்வுக் கூடமாக இருந்திருக்கலாம். இக்கால் என்னைப் பொறுத்த வரையில் அவ்வுண்மை ஒரு சிறிதும் பொருந்தாது. (இதைப் பற்றியும் சிறையிலுள்ள குறை நிறைகளைப் பற்றியும் விரிவாகப் பின்னர் எழுதுவேன்).

இந்நிலையில் நான் சிறைக்கு வந்தது பெருமைப்படும்படியான ஒருநிலை என்று எனக்குப் படவில்லை. ஆனாலும் அரசினர் நம் கொள்கைகளைத் தவறென்று காட்டி அதற்கொறுப்பாக நம்மைத் தண்டம் கட்டச் சொன்னதை மறுத்துச் சிறை புகுந்து, நாம் நம் கொள்கையை நிறைவேற்ற, அல்லது தொடர்ந்து நடத்த எவ்வளவு இடர்ப்பாடுகள் நேரினும் தாங்கிக்கொள்ளுவோம் என்ற மன உரத்தினை அரசினர்க்கு உணர்த்தவும், அவர்தம் தடுப்புகள் பயனற்றவை என்பதை அவர்களுக்குக் காட்டவும் தகுதியான செயல் என்றே கருதினேன். எனவே அங்குக் கிடைத்த ஓய்வை நூற்களைப் படிப்பதிலும் நூற்கள் எழுதுவதிலும் பயன்படுத்திக் கொண்டேன்.

இதற்கிடையில்தான் நான் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன். அது, நாம் அரசினர் போட்ட 200 உருபா தண்டத்தைக் கட்ட மறுத்துச் சிறை சென்றாலும், நாம் அதைக் கட்டும் தகுதி வாய்ந்திருப்பதால், எப்படியும் அரசினர் நம் பொருள்களைப் பறிமுதல் செய்வார்கள் என்பதும், அவற்றை ஏலமிட்டு அத்தண்டப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுவார்கள் என்பதுமே ஆகும். இச்செய்தியையும், அதற்கான அடிப்படைகளையும் கேள்விப்பட்டதும் நான் இவ்வரசினர் வைத்துள்ள சட்டதிட்டங்கள் முறையற்றவையும், சூழ்ச்சியுடையவையும் ஆக இருக்கக் கண்டேன். எனவே இந்நிலைகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டி, சிறையதிகாரிகளிடமும், சிறை அலுவலர்களிடமும் கண்டு விளக்கம் கேட்டேன். அவர்கள் எல்லாரும் அரசினர்தம் போக்கை வலியுறுத்தியதுடன் என்மேற் பரிவும் என் அறியாமைக்கு வருத்தமும் தெரிவித்தனர். கரவும் சூழ்ச்சியும் கொண்டு அரசினர் நம் வினைப்பாடுகளைத் தடை செய்யும் நோக்கோடு அமைத்துள்ள சட்டதிட்டங்களுக்கு நாம் பணிவது நம்மை அடியோடு அழித்துக் கொள்வதும், நம் வினைப்பாடுகளைச் சிதற அடிப்பதும் ஆகும் என்று கருதினேன்.

நாம் அரசினரை நம் கொள்கைகளுக்காக எதிர்த்துச் செயலாற்றுதற்குப் பயன்படுத்துகின்ற கருவிகளாக நாம் கொண்டுள்ளவை நம் கருத்துகளும், அக்கருத்தை வெளிப்படுத்துகின்றமைக்கு எல்லாவகைகளிலும் நமக்கு உதவும் பொருளுமே ஆகும். முதற்கருவியான கருத்து நம்மிடம் வலிவான—மெய்யான பிடிகொண்டதாகவும், கூர்மையான முனை கொண்டதாகவும் உள்ளது என்பதை நாம் அறிவோம். ஆனால் அக்கருவி ஒன்றுமட்டுமே இருந்து அக்கருவியைப் பயன்படுத்தும் அல்லது செயல்படுத்தி அதன் ஆற்றலைப் பிறர்க்குணர்த்தும் வல்லமை பெற்ற பொருள் என்னும் கருவி வலிவு குறையின் எவ்வகைப் பயனுமில்லை என்பதைக் கடந்த

பதினைந்து ஆண்டுகளாக நமக்கேற்பட்ட பலவகை இடையூறுகளால் நன்கு அறிந்திருக்கின்றேன்.

இருப்பினும் நம் கையிலுள்ள பொருளைக் கொண்டே நம் கருத்துக் கருவியை இதுவரை அரைகுறையாகப் பயன்படுத்தி வந்தோம். பொருள் முடையினாலேயே முதலில் நடந்த தென்மொழி ஒடுங்கியபொழுது, நம் கருத்துகள் சோர்வுற்று அமைதியாக—வாளா இரண்டாண்டுகள் கிடக்க வேண்டியதாயிற்று. மீண்டும் ஒருவாறு சிறு பொருள் திரட்டித் தென்மொழியை நடையிட வைத்தோம். வைத்தும் அஃது அன்றாடச் செலவுக்கே தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டி வந்தது. கருத்துப் பரப்பில் ஓரளவு நம்முடன் ஒட்டி அரசினரை எதிர்த்துப் போராடும் எதிர்க்கட்சிகள் கூட, நம் பொருள் குறைவைக் கண்டு நம்மேல் இரக்கப்படாமல், நம் நிலையின் தளர்வைப் பயன்படுத்தி உள்ளூர மகிழ்ந்து நம் வீழ்ச்சியையே எதிர்பார்த்திருந்தன. இதற்குக் காரணம் நாம் எந்தக் கருத்தையும் யாருக்காகவும் மறைக்காமலும் குறைக்காமலும் வெளியிட்டு வந்தமையே யாகும்.

இந்த நிலையில் நமக்கிட்ட தண்டப்பணம் 200 உருபாவை நாம் கட்டாது சிறை புகுந்தது, பெரும்பாலும் நம் உறுதியை அரசினர்க்குத் தெரிவிப்பதாக இருந்தாலும், ஓரளவு பொருளுக்கு நேரவிருந்த ஊறுபாட்டைத் தவிர்க்கவும் பயன்பட்டது என்பதற்காக மகிழ்ச்சியாகவும் இருந்தது. பொதுவாக நாம் கருத்துக் கருவிக்காகப் பாடுபட வேண்டியிருந்ததைவிடப், பொருளுக்காகவே அரும்பாடுபட வேண்டியிருந்தது. சுருங்கச் சொன்னால் நம்மை வலிவான கடன் தொல்லைகளால் பிணித்துக் கொண்டுதான் நம் கருத்தைப் பரப்ப வேண்டியிருந்தது; இருக்கின்றது. மேலோட்டமாகப் பார்க்கையில் இந்த 200 உருபா ஒரு பொருட்டாக நமக்குப்படாமற் போனாலும், இதனை ஈட்ட நாம் செய்யும் முயற்சியும், இதற்கீடாக நாம் ஏற்றுக் கொண்ட தண்டனைக் காலமும் நமக்கு அரியனவாகப்பட்டன. இவ்விடர்ப்பாடுகளுக்கெல்லாம் தலையாய காரணம் நாம் ஒரு கட்சியின் அடிப்படையில் செயல்படாமையே! நாம் ஒரு கட்சியின் அடிப்படையில் செயல்படுவோமானால், நம் முயற்சிகளுக்கெல்லாம் விளம்பரமும், அதன்வழி ஏராளமாகப் பொருளும் குவிந்திருக்கும், ஆனால் அப்படிப்பட்ட ஒரு கட்சியமைப்பை அமைப்போமா என்ற எண்ணம், பிற கட்சிகளுக்குள் ஏற்படுகின்ற பூசல்களையும் போலித்தனங்களையும், பதவி நசைகளையும் கண்டும் கேட்டும் உணர்கின்றபொழுது, மழுங்கிப் போகின்றது.

தொடக்கத்தில் நாம் அடிப்படையான கருத்துக் கொள்கையைப் பிறர்க்குத் தெரிவிப்பதற்காகவும், நம்மையே நாம் வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் நான் சிறைக்குப்

போவது சிறந்தது என்று கருதினேன். அதனாலேயே நம் உள்ளத்தின் வலிவை அடகுவைத்துப் பொருள் நிலையைப் பொருட்படுத்தாது இருக்க வேண்டியிருந்தது. ஆனால் நாம் சிறைக்குச் சென்றாலும் நமக்கிட்ட தண்டப்பணம் பறிமுதல் செய்யப்படும் என்று அறிந்தபொழுது, நாம் நம் உறுதியை நன்றாகக் காட்டிவிட வேண்டும் என்கிற மன உரத்தை அரசினர் தங்கள் சூழ்ச்சியான சட்டதிட்டங்களால் பயன்படுத்திக் கொண்டு நம்மைப் பொருள் நிலையாலும் மட்டந்தட்டுவார்களானால் நாம் அதற்கு உடன்படுவது நம் வினை, பொருள் என்ற இரு கருவிகளையும் மழுக்கிக் கொள்ளுவதாகவே அமையும் என்று கருதினேன். நாம் தண்டனையும் பட்டுப் பொருளையும் பறிகொடுப்பதால் நம் கொள்கை நிலை வலிவுள்ளதாகப் பிறரால் மதிக்கப் பெறினும், நம் கருத்தைப் பரப்புவதற்கான அடிப்படை தளர்ந்து போகின்றதை நான் உணர்ந்தேன். நம்மிடம் விதையைக் கொடுத்து நாம் விதைக்கின்ற காலத்தைச் சிறிது தள்ளிப் போடுவதை நமக்குத் தண்டனையாகக் கொடுத்தார்களானால் நாம் அதனை ஒப்பிக் காலத்தைப் பறிகொடுக்க முன்வரலாம். ஆனால் காலத்தை நீட்டிப்பதுடன் அமையாது, கையிலுள்ள விதையினையும் பிடுங்கிக்கொள்ளும்படியான ஒரு சூழ்ச்சியில் நமக்குத் தண்டனை கொடுத்தவர்கள் நடக்க முற்படுவார்களானால் நாம் அந்தச் சூழ்ச்சியினின்று தப்புவதே அறிவுடைமை என்று கண்டேன்.

தேவையில்லாமல் தவிர்க்கத்தக்க இரட்டிப்பான தொல்லைகளுக்கு நம்மை ஆளாக்கிக் கொள்வதும், அதன்வழி நம் உள்ள உடல்வலிமைகளைப் பிறர்க்குப் புலப்படுத்துவதும், வட்டரங்குக் (Circus) காட்சியில் வலுவான இரும்புக் குண்டுகளை மக்கள் முன் தூக்கிக் காட்டிப் பொதுமக்களின் பாராட்டுகளையும் பரிசுகளையும் பெறுகின்ற மல்லன் ஒருவனின் செயல்களைப் போன்றதாகும்; ஆனால் நம் கொள்கை நிலையில் நாம், தேவையானபொழுது தவிர்க்க முடியாத நிலையில் தன் வலியெல்லாம் கூட்டித், தன் வழியைத் தடைப்படுத்தி நிற்கும் ஒரு பெரிய பாறாங்கல்லைப் புரட்டித்தள்ளி அப்புறப்படுத்திவிட்டுப் போகும் வல்லான் ஒருவனுக்குச் சமமானவர்களாக இருக்க வேண்டுவதே சரியென்று கருதினேன். நம் கொள்கையை நிலை நாட்டவும், பிறர் போலிக் கொள்கைகளை வெட்டிச் சாய்க்கவும் தீட்டி வைத்திருக்கும் நம் மன உரமென்னும் கூரிய கத்தியைக் கொண்டு பிறர் நம்மையே வெட்டி வீழ்த்தும்படி நாம் விட்டுவிடுவது பேதைமையென்று உணர்ந்தேன். நம் கொள்கை ஓர் அரசியல் கட்சியின் தற்காலிகக் கொள்கைகளைப் போலன்றி எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும், எவ்வினத்தார்க்கும் பொதுவான கொள்கையாகையால், அதன் வளர்ச்சியை அடிப்படையிலேயே பிறர்

அசைத்து விடும்படி நாம் இசைந்து விடுவது, அதன் விளைவைப் பெருமளவு சேதப்படுத்தும் என்பதைத் தெளிந்தேன். நம் கொள்கைகளுக்காக அரசினருடனும் மக்களுடனும் நாம் போராடிக் கொண்டிருக்கையில் அரசு குட்டுவதற்கெல்லாம் நாம் குனிந்து காட்டிக் கொண்டிருந்தால், நம்மைக் குட்டிக் குட்டியே அது சாகடித்தும் விடலாம் அல்லவா? அரசினர் நம் நேரிய கொள்கைகளுக்காகப் பலவகையான தண்டனைகளைத் தரலாம். அவற்றால் சில நேரங்களில் நம் உரனும், கொள்கையும், போக்கும் வலிவுபெறும். சிலவற்றால் அவை தளர்வுறும். தம்மை வலிவேற்றிக் கொள்ளுமாறும் நம் கொள்கைகளுக்கு முறுக்கேற்றுமாறும் கொடுக்கப்படுகின்ற தண்டனைகளை நாம் கட்டாயமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் நம்மின் வலிவைக் குறைக்கும் தண்டனையை நாம் கட்டாயமாகப் புறக்கணிக்கத்தான் வேண்டும் என்று உறுதி கொண்டேன். தென்மொழி வலிந்த கொள்கைகளுக்காக அமைக்கப் பெறும் ஒரு நிறுவனம். வெறும் அரசியல் காரணங்களுக்காக மட்டும் பயன்பட்டுத் தூக்கி எறியப் பெறும் சக்கையன்று! தென்மொழியின் வலிந்த பல் உருளையுள் நம்முடைய அரசியல் ஈடுபாடும் ஒரு பல்! எனவே அரசியல் காரர்களுக்கு விளம்பரமாகவும், ஈகத் தழும்பாகவும் பொருள் சேர்க்கும் வட்டரங்கு மல்லனின் மலைப்பூட்டும் செயலாகவும் அமைகின்ற சிறை வாழ்க்கையின் கட்டாய ஓய்வைவிட, புறநிலைப் போராட்டங்களும் கொள்கை முழக்கங்களும் அவற்றிற்கான பொருளும் காலமுமே நமக்கு உயர்வாகப் பட்டன.

எனக்கு நேரிய தண்டனை கொடுக்கப்படவில்லை. இருப்பினும் நான் நம் உறுதிக்காகச் சிறை போகத் திட்டமிட்டேன். இடையில் நான் எந்தத் தண்டத்தைக் கட்ட மறுத்துச் சிறை புகுந்தேனோ, அத்தொகை என் தண்டனைக் காலத்திலாவது, அதற்குப் பின்னாவது கட்டாயம் தண்டப்படும் என்ற ஒருநிலை இருக்குமானால், பின்னர் செலுத்தப் பெறும் தண்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு நம் காலத்தை மிச்சம் பிடிப்பதில் எவ்வகையான பிழையோ, கொள்கைக் குறைபாடோ இருப்பதாக நான் கருதவில்லை. நேரிய தண்டனை கொடுக்கப் படாதவிடத்து, அதற்கு நம்மை உட்படுத்திக் கொள்ளாதது பிழையில்லை; "கூரிய கத்தியால் என் கையைத் துண்டிக்க முன்வரும் அரசினரிடம் என் கழுத்தைக் கொடுக்கவும் தயங்க மாட்டேன்; ஆனால் மழுங்கிய கத்தியால் என் தலையை வெட்டவரும் அரசுக்கு என் சுண்டு விரலைத் தரவும் ஒப்ப மாட்டேன்." கரவெண்ணம் கொண்ட முட்டாள் தனமான சட்ட அமைப்பின் தண்டனையை நாம் ஏற்றுக் கொண்டு, நம்மையும் முட்டாளாக்கிக் கொள்வதைவிட, நாம்

நம்மை விடுவித்துக் கொண்டு மீண்டும் நம் வழியை வலி வாக்கிக் கொள்வதே அறிவுடைமை என்று உணர்ந்தேன்.

வண்டியில் ஏறிக் கொண்டு வந்தாலும், வண்டியைவிட்டு இறங்கி நடந்து வந்தாலும் வண்டிக் கட்டணம் தண்டப்படும் என்ற நிலையுள்ள பொழுது நாம் எதற்காக வண்டியிலிருந்து இறங்கி வீணுக்காகிலும் நடந்துவர வேண்டும்? வண்டிக் கட்டணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானால் நாம் நடந்து போகலாம். தேவையான பொழுது நாம் பட்டினியும் கிடக்க வேண்டியதுதான். ஆனால் பட்டினி கிடந்தாலும் நம்மிடத்தில் சோற்றுக் கட்டணம் தண்டப்படும் என்ற நிலையிருக்கும் பொழுதும் நாம் ஏன் பட்டினி கிடக்க வேண்டும். அதனால் விடுதிக்காரனுக்குத்தானே ஊதியம்? இன்றியமையாத பொழுது நாம் தொல்லைகளையும் ஏற்றுக் கொள்வதே நமக்குச் சிறந்தது. அதற்கே நாம் பழகிக் கொள்ளல் வேண்டும். ஆனால் இன்றியமையாமை இல்லாத பொழுதும் நாம் ஏன் தொல்லைகளை வலிந்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும்? இஃது அரசினர் நம்மை உட்காரச் சொன்னால் நாம் படுத்துக் கொள்வது போன்ற மடமையான செயலாகும். இது நம் கொள்கையளவில் நாம் கொண்ட உள்ள உரத்திற் குன்றிய தாகாது என்றும் கருதினேன். சிறைக்குப்போவதே நம் கொள்கையன்று. சிறைபோவதானாலும் நாம் மனந்தளர்ந்து போகக் கூடாது என்பதே நாம் வினையாற்றும் முறை. நாம் நடந்து போகின்ற வழியில் முட்களும் கற்களும் விலங்குகளும் எதிர்வரலாம். நாம் அவற்றிற்காக அஞ்சவோ பின்வாங்கவோ—வேண்டியதில்லை; அதற்காக நாம் நம் பாதையில் கிடக்கும் முட்களை மிதித்துக் கொண்டும், கற்களில் இடித்துக் கொண்டும், ஒதுங்கிப்போகும் விலங்குகளுக்கு முன்னர் ஓடிப்போய் நாம் நம் நெஞ்சைக் காட்டிக் கொண்டும் நின்று போராடிச் சாக வேண்டும் என்பதும் நம் கொள்கை யில்லை. தவிர்க்க முடியாத பொழுது அவற்றை ஏற்றுக் கொண்டு நம் இலக்கை நோக்கித் துவளாத நடையிட வேண்டும் என்பதே நம் கொள்கைக்கு வெற்றியைத் தேடித் தரும்.

இவ்வுண்மைகளெல்லாம் நான் சிறையுள் 55 நாட்களைக் கழித்தபின் தான் எனக்குப் புலப்பட்டன. எனவே இருந்த நாட்கள் போக எஞ்சியுள்ள 65 நாட்களையும் உள்ளே கழிப்ப தால் நாம் கட்டப்போகும் தண்டப் பணம் 200 உருபாக்களை கூட மிச்சம்பிடித்து விடமுடியாது என்று கருதினேன். "என் உள்ளம் எஃகைவிட உறுதியானது. அதன் போக்கு பனி மலையையும் தாண்டிக்குதிக்கும் ஆற்றல் சான்றது. பசிபிக் கடலைவிட ஆழமானது. நிலத்தின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் நெருப்பைவிடச் சூடுவாய்ந்தது. இவற்

றைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இந்நாட்டு மக்களில் எவருக்காகிலுமோ, இந்த உலகத்தின் அரசுகளில் ஏதானும் ஓர் அரசுக்கோ இல்லை. இதனை இனி வருங்காலம் உணர்த்தும். நேர்மைக்காகப் போராடுவதில் நான் எந்தச் சூழலுக்காவது அஞ்சவோ கெஞ்சவோ தேவையில்லை. இது தென்மொழியின் முகவாயிலில் பொறிக்கப்பட்டுள்ள உண்மை''.

'அரசினராலும் அஞ்சப்படும் நம் கொள்கைகளும், அதன் முறையும்', நம்மால் மதிக்கப் பெறுததும், அவரால் வெளியிடப் பெற்றதுமான 200 உருபாக்களை விடவும், அவர் கரவான சட்டதிட்டங்களை விடவும் வானளவு உயர்ந்தன என்று நான் திட்டமாகக் கருதினேன். எனவே அவரிட்ட தண்டப் பணத்தை உடனடியாகக் கட்டிவிடுமாறு உறுப்பாசிரியர்க்கு அறிவித்தேன். அதன் விளைவாக நான் 11—1—66 ஆம் பக்கல் விடுவிக்கப் பெற்றேன். வெளிவந்ததும் என் கொள்கைகளிலும், அவற்றிற்குரிய வினைப்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றேன் என்பதை அன்பர்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

இச் செய்தியுடன் இன்னொன்றையும் வெளிப்படுத்த விரும்புகின்றேன். நான் கடந்த 12 ஆண்டுகளாக நடுவண் அரசின் அலுவல் துறையொன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அவ்வேலையால் வரும் ஊதியத்தைக் கொண்டும் அவ்வேலைக்காலம் போக எஞ்சிய காலத்தைக் கொண்டும் அன்பர் சிலரின் துணையைக் கொண்டுமே தென்மொழி 6 ஆண்டுகளுக்குமுன் தொடங்கப் பெற்றது. நான் அரசினர் அலுவலில் ஈடுபட்டுவருங் காலத்து அதனால் தென்மொழிக்கும் தென்மொழியால் அதற்கும் ஊறு நேரா வண்ணம் நடந்து கொண்டேன். ஆனல் இக்கால் அரசியல் பாதுகாப்புச் சட்டப்படி சிறைப்படுத்தப்பட்ட பொழுது, அரசினர் அலுவலிலிருந்தும் விலக்கப்பட்டேன் என்பதையும் இக்கால் அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகின்றேன். இனி என் ஈடுபாடு இன்னும் உரமும் ஊக்கமும் கொண்டு நிற்கும் என்று உறுதி கொண்ட உள்ளத்துடன் நடையிடுகின்றேன்.

சலுகை போனால் போகட்டும்—என்
அலுவல் போனால் போகட்டும்.
தலைமுறை ஒருகோடி கண்ட—என்
தமிழ் விடுதலை யாகட்டும்!

# SIRUPANATTRUPADAI.

A wreath of tendr leaves he wears;
And fame, so fleeting, stays with him;
**Nalliakodan** is his name;
He is the chief of the Hilly Land
With virgin peaks where thunders roar
Where rain clouds break in drops and bamboos wave in winds.
Where the peacock spreads his feathers blue
—Beauteous like the tresses rich of delicate girls
With shoulders soft and hips clothed charmingly—
Among the tender clouds that hang around.
Go, stand before him, O Ye minstrel great,
And on your wondrous **Yal** your thrilling tunes begin
Conforming to the rules of music.
The string handle of that **Yal** of yours
Now loosening, now tightening like a snake
Writhing round a monkey's hand when caught by it.
The **Yal's** mouth looks as if it's set with gems
And the round pot-like body's shapely made.
From the twisted little strings
Honey and nectar sweet will drop.
They'll answer every touch of yours.
Pouring forth the strains profuse.
And thus addressing him you'll sing:
"O ye, with palms that fold for elders!
O ye, with a chest that opes for young men!
O ye, with a sceptre sheltering farmers!
O ye, with a lance that fires on charioteers!"
And anon, he'll clothe you with a garment fine,
And nice like a bamboo's filmy bark
He'll give you liquor hissing hot like on angry snake.
He himself will serve the dishes sweet
Of varied tastes prepared adhering strictly to

**ம. இலெ. தங்கப்பா**

The rules of cookery traditinal—
In plates of gold that put to shame the sun
Surrounded by the planets bright.
With affection's fervour he will stand by you
Supplying all your needs. And then as gifts
He will give you the booty rich his generals brought
After satisfying the minstrels in the field.
With valour did the generals raid the enemy's lands
And took the fortresses of warrior-kings.
He will present you with a charriot grand
With finely chisalled wheels, the hub and spokes
Like the moon with her milky rays in motion.
The upper-board will lac is painted ned within
So red like the unfolding blossoms of the Murukka tree.
By master craftsmen made it is; has tested speed.
To these gifts he'll further add
A bright faced bull, brave strong and swifter than a horse
And a driver, too.

(முற்றும்)

பேதை நெஞ்ச உணர்வின் ஓவியம்!
பெண்மையை ஏத்தும் தீந்தமிழ்ப் பாவியம்!
கன்னலின் சாறு! பொன்னிநீர் ஓட்டம்!
அன்னைத் தமிழ்க்கோர் அணிமலர்ப் படையல்!
துரை. மாணிக்கம் எழுதிய




மேழ (சித்திரை) இதழில் தொடங்குகின்றது!

# அறவழி வாழ்க்கை

வழக்கமான இயல்பு நிகழ்ச்சியாக வாழ்க்கையைக் கருதுவதை விட்டுவிட்டு, அஃது ஆழங் கண்டறிய முடியாததும் பெரு வியப்புக்குரியதுமாகும் என்பதை மாந்தன் காணத் தலைப்படுகையில்தான் எண்ணம் பிறக்கின்றது. எண்ணத்தால் தூண்டப் பெற்ற மாந்தன் குறிநெறியற்று வாழ்வதை விட்டுவிட்டுத் தன் வாழ்க்கையினை மதிப்புணர்வோடு உற்று நோக்கி அதன் மெய்ச்சிறப்பை எப்பொழுது உணரத் தலைப்படுகின்றானோ அப்பொழுதே வாழ்க்கை அறநெறியின் பாற் பட்டதெனும் உண்மை உறுதிப்படுகிறது. இவ்வற நெறி வளர்ச்சியின் முதற்படி மாந்தன் பிறரோடு தனக்கிருக்கும் உறவுப் பிணைப்பை உணர்ந்து கொள்வதுதான்.

நாகரிக முதிர்ச்சி பெறாத மாந்தன் தன் குருதி, குடும்ப, குல உறவுகளையே உறவாகக் கருதுகின்றான். ஆனால் தன்னை உணர உணர அவன் வேறுபாடுகளைத் துறந்து அனைத்து மாந்தரும் ஒரு நிகரே, அனைவரும் தன் கேளிரே என்று கருதத் தொடங்குகின்றான். படிப்படியாக அவனின் கடமைப் பொறுப்பு விரிவடைந்து உலகளாவி நிற்கின்றது.

மாந்தன் மாந்தனுக்கே உரியன். மாந்தனுக் குழைப்பதே மாந்தனின் கடமை. அங்குத்தான் மாந்தத் தன்மை முழு மலர்ச்சி பெறுகின்றது. வாழ்க்கையின் முழுப் பொருளும் விளங்குகின்றது. வாழ்க்கையின் முழுப் பொருளையும் நாம் உணர்ந்து அதனை மதிக்கின்றோம் என்றால் ஏதாவது ஒரு வகையில் பிற மாந்தர்பால் நம் மாந்தத்தன்மை விளங்க நடந்துகொள்ளல் வேண்டும். அலுவலாலோ, பொருளாலோ பிறர்க்கு வழங்க ஏதுமில்லாதிருப்பவர்கள் தங்கள் ஒழிந்த நேரத்தையாவது பிறர்க்குரித்தாக்கல் வேண்டும். பிறருக்காக முன்வந்து துன்பத்தை ஏற்று உழைக்கும் தொண்டுணர்வுபடைத்த மாந்தர் பேறுபெற்றவராவர். அவர்பால் மாந்தத்தன்மை மலர்ச்சியடைந்து செழிக்கும்.

கண்ணைத் திறந்துபார்! உன் உதவியை நாடி நிற்கும் யாரையாவது காண்பாய்; அல்லது தொண்டர்களை வேண்டி நிற்கும் யாதானும் ஒரு பொதுவினையினைக் காண்பாய். உன்னை அதில் ஈடுபடுத்து! முயற்சி அருமை கண்டு அஞ்சாதே! உண்மையைக் காணக் காலம் தாழ்கின்றதே என்று தளர்ந்துவிடாதே!

நம் காலம் கெட்டுக்கிடக்கின்றது. அது புதிய மலர்ச்சி பெற வேண்டும். அறநெறியின் பாற்பட்ட செயலே வாழ்க்கையின் தலையாய பேருண்மையும் பெரும் பயனும் என்பதை மாந்தர் உணர்ந்துகொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் மாந்த இனம் விடுதலையடையும்.

—ஆல்பர்ட் சுவைட்சர்.

# செந்தமிழ்ப் பாவை!

தாய்மைக் குலத்தீர்! தமிழ்மொழிக்கே யாம்பாடும்
வாய்மைத் தமிழ்ப்பாவை வந்திங்கு கேண்மினோ!
தூய்மையுறும் நெஞ்சம்! சுடர்மணிப்பூண் தோள்கலிக்கும்!
பேய்மை யகலும்! பிறவி நலம் வந்தெய்தும்!
மாயப் புரைசான்ற மலிவினைகள் மாண்டொழியும்
சேயவிழ்வாய் நாறச் சிமிழ்மார்பு அமிழ்தூட்டி
ஏய அவர்செவியில் எந்தமிழ்ப்பால் ஊட்டுதற்கே
ஆய பொழுதும் அலர்ந்தேலோ ரெம்பாவாய்!

மன்னும் பிறவி மடுக்குந் திருக்குலத்தீர்!
முன்னம் பிறப்பறியோம்! முந்துகடல் வாங்கியுண்ட
பன்னூல் சிறப்பறியோம்! பாவையரீர்! பாழ்பட்ட
இன்னூல் கணக்கிங் கெடுத்தறியோம்; எந்தமிழ்க்கே
தொன்னூல் இவையென்று தோற்றுவன யாம்கண்டோம்;
நன்னர் முடிவெடுத்தோம்; நாணுமே, நாணுமே,
என்னெமக்கே வந்துற்ற தென்றே இமைதிறவா
தின்னும் துயில்வீர்! எழுகேலோ ரெம்பாவாய்!

போதார் திருவைப் புரைவில்லாச் செந்தமிழைத்
தீதார் பிழைநாவின் வல்படையோர் சீரழிக்கப்
போதருகின்றார்; புறப்பட்டார்; பொன்னொளிர்கல்
காதார் பிறைநுதலீர்; கண்பாடுங் கொண்டீர்காண்!
ஈதார் கடனோவென் றெண்ணுதீர்! ஈண்டெழுந்த
பேதைப் பெருங்கூட்டம் பின்னிட் டடங்கிடவே
ஊதுமினோ வெண்சங்கம்! வெற்றிப்பால் ஊட்டுமினோ!
மாதர் குலமே, மலையேலோ ரெம்பாவாய்!

காமம் மதர்க்கும் கருவிழிமேல் வில்லிமைக்கே
யாமத் திருளைக் குழைத்திட்டு, நீள்குழற்கே
பூமுன் மாலை முடித்தாய்; புலர்பொழுதில்
ஊமைச் செவிடா உறங்குதியே! ஒண்டமிழ்க்குத்
தீமை புரிவார் திறங்கலங்க, பூண்பொடிய
மாமைப்பொற் றேமல் மலியும் மணிவயிற்றில்
ஏமம் புரிய இளையோரைப் பெற்றெடுக்குந்
தாமரைப் பூங்கண் திறவேலோ ரெம்பாவாய்!

துரை. மாணிக்கம்

கொந்தார் மலர்க்கொண்டைக் கோதையரீர்; பாடேமுக்
கிந்தா வெழுந்தேம்என் றியம்பா தயர்வீர்போல்,
செந்தா மரைமுகத்தைப் பஞ்சணையிற் சேர்த்தீரால்!
வந்தார் தமிழழிக்க; வாயவிழ்ந்தார் வார்படைக்கே
செந்தோள் மறவர் சிறுத்தாரென் றேயெழுந்து
முந்துவீர் அன்னை மொழிக்கென்றே ஆர்ப்பரிப்பீர்!
சிந்துவீர் செங்குருதி தாய்மைச் செருக்குலத்தீர்!
இந்த நொடியே எழுகேலோ ரெம்பாவாய்!

எண்ணற் கினிக்கும்; எடுத்தியம்ப வாயினிக்கும்
பண்ணு மொழிகேட்பார் செவியினிக்கும் பைந்தமிழை
உண்ணும் சுவடியிலே நஞ்சிட்டார் ஒண்டொடியீர்!
கண்ணென் எழுத்தும் கருத்தும் கலைப்பாரால்
பெண்ணென் பிறவியினைப் பெற்றேமென் றெண்ணுமே
விண்ணதிர ஆர்த்துப் பிடிக்கூட்டம் போலெழுந்து
மண்ணின் உரிமை மொழியுரிமை மீட்குதிரேல்
பெண்ணுரிமை நாட்டுகின்ற பெற்றியலோ ரெம்பாவாய்!

வல்லடிமை கொண்டார்; வரும்பொருளிற் பங்கெடுத்தார்;
மல்லடிமைச் சேற்றில் மனத்தைப் பதமிடுவார்
சொல்லடிமை செய்வதற்கே தோதுபல சொல்லிடுவார்!
இல்லறத்தைத் தள்ளி இளம்பருவச் சீரொதுக்கி
வல்லமற நெஞ்சை வளையா இரும்பாக்கி
ஒல்லைப் பெரும்போர் உலைக்காமே ஏற்றியநாண்
வில்லடியின் மேற்புருவ வேல்விழியே! தூங்குதியே!
எல்லே இளையாய், எழுகேலோ ரெம்பாவாய்!

பெற்ற மகர்வாய் தமிழைப் பிலிற்றுமல்
வெற்று மொழியாமோர் வேம்பை—உயிர்கழிக்கும்
புற்றரவ நஞ்சைப் பிழியும் புலையோரைச்
செற்றுச் செருக்காமல் சீற்றச் செருவிழி,மூ
டுற்ற மயக்கத் துருண்டும் புரண்டும்நீ
மற்றிங் குறங்கல் அழகோ மதிமுகமே!
கற்ற தமிழ்மேல் கடுஞ்சூள் உரைசாற்றி
இற்றே இளம்பிடியே தூறேலோ ரெம்பாவாய்!

ஆங்கப் பொழுதே மொழியலைத்தார் ஆரியத்தால்
தேங்குந் தனிச்சீர்மை தீர எழில்குலைத்தார்;
ஓங்கப் பிறகுழைத்தார் உற்றுணர்ந்தார்; ஒண்டொடியே!
ஈங்கப் பிழைக்கே இடந்தரநாம் ஒப்புவமேல்
வாங்கப் படுங்காண் வாழ்வுரிமை! பின்வருவார்
ஏங்கித் தவிப்பதோ? இக்கால் எழாமலே
தூங்கிக் கிடப்பதோ? நெஞ்சம் துடிதுடித்தே
வேங்கைப் புலிப்பிணையே! வீறேலோ ரெம்பாவாய்!

களையாய்த் தமிழ்வயலூர் காலிடவேர் ஊன்றி
முளையாக் கிடக்கின்ற மூங்கை மொழியை
உளையாப் பெருமுயல்வால் ஊழ்த்துத் தமிழை
விளையாமற் போமாயின் வீணானோம்; வீழ்ந்தோம்!
கிளைபரப்பி நின்ற கிளர்தமிழைக் கீழோர்
களையமுற் பட்டாங்கே கள்ளியினை ஊன்ற
வளையாய்! கிடந்தாலும் வாய்மையோ? வாட்கண்
இளையாய் உறங்கேல் எழுகேலோ ரெம்பாவாய்!

இந்நாளாப் பட்ட அடிமைக் கிறக்கத்தால்
செந்நா வடக்கிச் சின மடக்கி உள்ளுணர்வைக்
கொன்னே மடக்கி உறங்குதியோ! கொல்பிடியே!
மின்னே இடையாக வேற்கண்ணே வெல்படையா
இன்னே எழுந்தே எரிபுயலாச் சீறுதியே!
அந்நாள் அயர்ந்த அறியாமைக் குள்நாணி,
நன்னர் உரிமைப்போர் நாட்டுதியே! செய்யபசும்
பொன்னே! பொழுதும் புலர்ந்தேலோ ரெம்பாவாய்!

உள்ளம் மலையாத ஆடவரும் தாம்மலைந்தார்
கள்ள விலைவாங்கி நல்லுரிமைக் கால்துணித்தார்!
பள்ளத் திறங்கிப் படுசேற்றில் தாம்புரள
உள்ளம் ஒருப்பட்டார்! உண்கண்ணாய் நீயெழுந்தே
எள்ளல் தவிர்க்க இசையாயின் இம்மண்ணும்
கொள்ளல் தவிரார்! குலக்கொடியே ஈங்கின்னும்
பள்ளிக் கிடத்தியே! பாவைப் படைகூட்டி
வெள்ளம்போல் பாய்வாய் விரைந்தேலோ ரெம்பாவாய்!

தண்டைப் பிடித்தவரோ தாவித் தமிழர்களின்
சிண்டைப் பிடித்தனர்காண்! செம்மாந்த எந்தமிழர்
அண்டை நிலத்தில் அடிமையுறத் தாழ்வதுவோ?
பண்டைப் பெருமை பாழ்பட்டுப் போவதுவோ?
உண்டிங் குறங்குவதே ஓங்குநிலை என்பதுவோ?
பெண்டிர் விழிப்புறாரல் பேருரிமை வாயாதோ?
தொண்டிற் பெருந்தொண்டு தோகையர்தம் தொண்டன்றே?
கெண்டை விழியே! கிளர்கேலோ ரெம்பாவாய்!

கற்றவரோ செந்தமிழால் காசுபணம் சேர்க்கின்றார்!
மற்றவரைக் கேட்பானேன்! மான்விழியே! நாட்டுநலம்
உற்றசிலர் நின்றே உரிமைதரக் கேட்டாலோ
கொற்றவரும் அன்னார் குரலை நெறிக்கின்றார்!
குற்றமென்று கூறிக் கொடுஞ்சிறையுட் தள்ளுகின்றார்!
முற்றும் தமிழினம் மூங்கையதாய்ப் போகுமுனம்
பெற்ற குலத்தோரே பேருரிமை காக்கவல்லார்!
பொற்றொடியே துருசல் புரையேலோ ரெம்பாவாய்!

திங்கள் முகம்கருகச் செவ்விதழும் தாம்வரளச்
செங்கண் குழிவீழச் சிற்றிடையும் சோர்ந்துவிழப்
பொங்கும் இளம்பருவப் பூரிப்பில் நுங்கணவர்
தங்கை அணைப்பில் இராமுழுதும் சேர்ந்திருந்தும்
செங்கதிர்ப் போழ்தில் சிறுதுயிலும் கொள்ளுகின்ற
மங்கையரீர் நுந்தம் மணிவாய் கமழ்தமிழுக்
கெங்கும் இடர்வர வுற்றதுகாண்! இந்நொடியே
பொங்கி எழுவீர் புலர்ந்தேலோ ரெம்பாவாய்!

மானே! முன் மாலை மணிக்கதவந் தாழிட்டுத்
தேனும் பழமும் தெளிதமிழும் உண்டு, அவன்
வானின் விரிமார்பில் வண்டுவிழி மூடினையே!
கூனற் பிறைநுதலீ! கொண்டதுயில் நீங்குதற்குள்
ஊனின் உயிரை—உளஞ்சான்ற வல்லுணர்வை—
மானம் இறவாது மங்கா தொளிர்தமிழை
ஏனென்று கேட்டே இடர்பலவும் செய்தனர்காண்!
கானப் புலியே! கனன்றேலோ ரெம்பாவாய்!

மாணவரை வேண்டினோம்; மற்றவரைக் கால்பிடித்தோம்!
நாணமிலா மக்களுக்கு நல்லமறம் பாடிநின்றோம்!
வீணவரே இந்நிலையில் பெண்டிர் வெகுண்டெழுந்தால்
தூணவரே ஆனாலும் துண்துரும்பாய்ப் போவார்காண்!
பூணுதியே வெல்பெருமை! பூங்கண்ணே நீவிழிப்பாய்!
சேணுயர்ந்த குன்றின்மேல் செந்தமிழின் சீர்பொறிப்பாய்!
நாணம் ஒதுக்கிடுவாய்! அச்சம் நசுக்கிடுவாய்!
கோணு தெழுந்துகுறை போக்கேலோ ரெம்பாவாய்!

புத்தம் புதிய புலிக்குருளை பெற்றெடுத்தே
கத்தும் கனிவாய் கமழ அமிழ்தூட்டி
முத்தம் பயிலும் முறுவல் மலரிதழீ!
செத்தார் தமிழர்; சிறுசோற்றுக் கங்காந்தார்!
கொத்துகின்ற வல்லடிமைச் சேற்றில் குமைந்துழல்வார்!
எத்தும் வடக்கர்க் கிணங்கிப் பணிபுரிய
ஒத்தார் உளங்கொண்டார்; ஓவாப் பிணிபட்டார்!
முத்தென் நகையாய்! முனைந்தேலோ ரெம்பாவாய்!

மஞ்சள் மதிமுகமும் மல்லிகைசேர் வார்குழலும்
செஞ்சாந்துப் பொட்டும் சிரிக்கும் எழிலோடு
வஞ்சி இராமுழுதும் வாள்விழியும் மூடியளாய்த்
துஞ்சி யிருக்கின்றாய்! செம்பரிதி தோன்றிற்றால்!
நஞ்சைத் தமிழ்மேல் தெளிக்கின்றார் நாடாள்வார்!
அஞ்சிக் குலைந்தார் அருந்தமிழர் ஆரணங்கே!
விஞ்சும் விரகால் விறல்மறந்து போகுமுன்னே
பஞ்சென்றே ஊதாய் பகையேலோ ரெம்பாவாய்!

சேல்விழியே! முன்னைச் செழும்புலவோர் ஆக்கிவைத்த
நூல்வழியே செந்தமிழின் நுண்பெருமை கண்டாய்காண்!
கோல்வழியால்—ஆட்சிக் கொடுமையினுல் நம்மவரை
வால்பிடிக்கச் செய்தே வடவர் கொடுமொழியை
மேல்நிலையில் வைத்து மணித்தமிழைத் தாழ்த்தினர்காண்!
நூலிடையும் வாட நுதலும் நனிவெயர்ப்பக்
கால்குடைந்த கட்டில்மேல் கண்ணயர்ந்து தூங்குகின்ற
வேல்விழியே! இக்கால் விழியேலோ ரெம்பாவாய்!

"செந்தமிழ்க்குத் தீதோ? தெளிதேனில் வெங்கசப்போ?
எந்தமிழர் செந்நாவுக் கிந்தியோ? ஏலோம் யாம்!
கந்தை உடுப்போம்! கிழங்குண்போம் கான்செல்வோம்!
இந்தி படிக்க இசையோம்யாம்" என்பதனை
வெந்த உளத்தோடும் வெல்கின்ற வீறேடும்
இந்தத் தமிழ்நிலத்தின் ஏந்திழையார் கூறுவரேல்
வந்து புகுமோ? வடவர்மொழி? வார்குழலாய்!
முந்தி எழுந்தே முழங்கேலோ ரெம்பாவாய்!

தேக்கும் இளமை திரண்டெழுந்த நற்பாவாய்!
பூக்கும் மலரின் புதுப்பஞ் சணைமேலே
தூக்கம் வளருதியே! தொல்தமிழும் பல்வகையா
ஆக்கம் தளர்ந்ததுகாண்! அற்றைச்சீர் மாய்ந்ததுகாண்!
ஊக்கம் குறைந்தார் உயர்வறியா நம்மிளைஞர்!
ஏக்கம் நிறைந்தார்! இடுசோற்றுக் கேங்கிநின்ருர்!
நோக்கம் கருதி நுண்ணிடையாய் நந்தமிழைக்
காக்க எழுவாய் கனன்றேலோ ரெம்பாவாய்!

மானை நிகர்த்த மருள்விழியே! மாமலைசேர்
தேனை நிகர்த்த தமிழ்மொழியைத் தேராமல்
ஊனை வளர்க்கும் உரிமையால் நின்றழிக்கும்
கூனல் அரசினரின் கொள்கை அறிந்திருந்தும்
ஏனே உறக்கத் திருக்கின்ருய்? ஏந்திழையே!
கானின் விலங்கும் அடிமை கடிந்தொதுக்கும்
வானப் பெருந்தமிழர் வல்லடிமை தாங்குவதோ?
யானைப் பிணவே பிளிறேலோ ரெம்பாவாய்!

தேடிக் களைத்தோம் யாம் தீந்தமிழர் உள்ளுணர்வை!
ஓடிக் களைத்தோம் உரவோர்க்குச் செந்தமிழைப்
பாடிக் களைத்தோம் பணிபுரிவார் காண்கிலமே!
வாடிக் குலைந்தோம்! வளர்மயிலே! முன்மாலை
ஆடிக் களைத்தாய்போல்—ஆளனெடு நீளிரவாய்க்
கூடிக் களைத்தாய்போல் கொள்ளுதியே வல்லுறக்கம்!
வேடிக்கை யன்று! விறல்பெறநீ ஆர்த்தெழுவாய்!
ஏடி இளையாய்! எழுகேலோ ரெம்பாவாய்!

காலை முதலாக் கவின்மாலைப் போழ்துவரை
வேலை புரிந்த களைப்பால் விடியுமட்டும்
சேலென் விழிமூடித் தூங்குதியோ! செந்தமிழென்
பாலிற் கொடுநஞ்சைப் பாய்ச்சினர்காண்; கூர்மழுங்கா
வேலில் வடித்த விழியுடையாய்! வெம்பகைவர்
காலில் தலைதெறிக்க ஓடக் கனன்றிலையேல்
ஆலைப் படுபஞ்சாய் ஆக்கப் படுவோங்காண்!
வாலைக் குமரி விரையேலோ ரெம்பாவாய்!

மண்டும் இருள்போய் மனைச்சேவல் சீர்த்தெழுந்து
கொண்டை குலுங்கிடவே கொக்கரக்கோ கோவென்று
தொண்டை கிழியத் துயிலெழுப்பும் தோட்டத்தே
மண்டுங் கறவை மடிநிரம்பிக் கூவிநிற்கும்
தொண்டு புரியும் பணியாளர் பேச்செழும்பும்!
பண்டைப் பெருமைநலம் பண்ண மறந்தவளாய்,
வண்டு விழிமூடி வார்குழலும் தூங்குதியே!
அண்டை நிலத்தார் அடிமைகொள வந்தனர்காண்!
உண்டு பணிகள்! உணர்கேலோ ரெம்பாவாய்!

காக்கை கரையும்! கடிமுல்லை மொக்கலரும்!
மேற்கில் மதிகரையும்! கீழ்க்கதிரும் மேலெழும்பும்!
ஈர்க்குமா ரோசை இரையும் தெருவெல்லாம்!
யாக்கை வளர்ப்பார் தவிரஎவர் இப்பொழுதில்
சேக்கை புரள்வார்? சிறுதுயிலுங் கொள்ளுதியே!
தீக்கை வடவர் திரிபுரையால் தீந்தமிழின்
ஆக்கந் தடுப்பார்; அவர்மொழிக்கே வித்திடுவார்!
போக்கைத் தடுக்கப் புறப்படுவாய் பொற்சிலம்பாய்!
தூக்கங் களைந்து துணிவேலோ ரெம்பாவாய்!

மாணிக்கச் செம்பரிதி வார்கடலை விட்டெழும்பும்
தோணி வலைவீசித் தோய்துறைக்கு மீண்டுவரும்;
காணி உழுதார் கதிரெழுமுன் வேளாளர்!
நாணும் மடவார் இருளுடையில் நீர்குடைவார்!
கேணிக் கரையில் வளைக்குடங்கள் கிண்கிணிக்கும்!
பூணுதியே பேயுறக்கம்! பூவாய்! பொலிதமிழைப்
பேண வெழுந்தால் பிழைப்பாரார்? பெண்புலியே!
தூணுந் துரும்பாம்! துணிவேலோ ரெம்பாவாய்!

சிட்டென் இளையோர் சிறுவாயில் செந்தமிழின்
மட்டு தவிர்த்துயரா மால்மொழியை ஊட்டுவர்காண்!
மொட்டென் அவர்கை முதிரா மொழியெழுத
ஒட்டா தவர்நெஞ்சில் ஊமைமொழி பாய்ச்சுவர்காண்!
மொட்டென் விழியாய்! முழுநிலையும் கண்டறிந்தே
பட்டின் படுக்கை படுத்துக் கிடத்தியே!
சட்டென் றெழுவாய்! சளைக்காமல் நின்கருத்தை
வெட்டொன்று துண்டிரண்டாய் வீசேலோ ரெம்பாவாய்!

# நெல்லிச்-செல்வம்

—எழிற்செல்வன்.

தென்னாட்டின் காடுகளிலும், மலைகளிலும், வளரும் சிறப்பிற்குரிய பயிர்களில் நெல்லியும் ஒன்று. நெல்லி பொதுவாக மிகுந்த கவனிப்பில்லாமல் வளர்ந்தாலும் பெருவிளைவு தர வல்ல பயிராகும். நெல்லிக்காயில் அடங்கியுள்ள சி. உயிர்ச்சாரம் இப்பயிரின் சிறப்பிற்கு அடிப்படையாக அமைந்து கிடக்கின்றது. இந்த உயிர்ச்சாரம் எளிதாக அழியத்தக்க தன்று. காரணம் தோற்பதன் (Tannin) என்னும் இயைபுப் பொருளோடு (Chemical Composition) அஃது இணைந்து பரவியுள்ளது. முற்றிய காய்களும், காய்ந்த பொருள்களும், சமைவுபடுத்தப்பட்ட காய்களும் மிகுதியான அளவு சி. உயிர்ச்சாரம் கொண்டுள்ளன. இரண்டாம் உலகப் பெரும் போர்க்காலத்தில் இந்தியத்துணைக்கண்டப்போர்மறவர்கட்கு, சி. உயிர்ச்சாரத் தேவையை ஈடு செய்யக் காய்ந்த நெல்லிப் பொடியை அளித்தனர். மக்களின் அன்றாட வாழ்வில் பயன் பட்டுவரும் நெல்லியின் சிறப்பை அனைவரும் உணர்தல் நலமாகும். ஒரு சில மரங்களை வளர்த்தால் தேவைக்கும் மிகுதியாகக் காய்கள் பெறலாம். நம் உடலில் தேக்கிவைக்க இயலாத உயிர்ச்சாரம் சி. உயிர்ச்சாரம் (C-vitamin) ஆகும். இந்த உயிர்ச்சாரத்தை மிக எளிய வழியில் நெல்லியின் வாயிலாகப் பெற இயலும். தென்னக மக்களின் உடல் வளத்திற்குக் கனிகள் மிகப் பயன்படுவனவாகும். அவற்றுள் நெல்லியின் பயன் குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாறும் பயிரியல் பாகுபாடும்:—நெல்லிப் பயிரின் தாயகம் தென்கிழக்காசியா. அதிலும் திரவிடமும் (Southern India) இலங்கையும், மலேயாவும், சீனமும் சிறப்பாகச் சுட்டப்படுகின்றன. இக்கனிப்பயிர் "ஃபில்லாந்தஃச் எம்பிளிக்கா" (Phyllanthus emblica) என அழைக்கப்படு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கூர்த்த மதியீர்! குறைகடியும் வல்விறலீர்!
ஆர்த்த பெரும்புகழ்மேல் ஆணையிட்டே ஆர்த்தெழுவீர்!
போர்த்த இருள்விலகப் பூவையர் நும் சீர்விளங்க
சீர்த்த பெரும்புயலா வல்பிடியாச் செற்றிடுவீர்!
தூர்த்த புகழெல்லாம் தொல்தமிழர் பாடெல்லாம்
ஏர்த்தடங்கண் பாவையரால் மீண்டும் எழுந்தவென்றே
வார்த்த நெடுங்கல் வழிவழிக்கே நின்றுரைக்கும்
சீர்த்தி பெறுகுவீர்! செற்றேலோ ரெம்பாவாய்!

※

கின்றது. "எம்பிளிக்கா" தனிகத்திலும் (Species), "பில்லாந்தஃச்" பண்புக்குழுவிலும் (Genus) இடம்பெறும். இப்பயிர் "இம்பார்பியேசியே" (Emphorbiaceae) குடும்பத்தைச் சார்ந்தது.

இப்பயிர் மரமாக 60 அடிமுதல் 100 அடிவரை வளரத் தக்கது. இப்பயிரின் சார்புக்கிளைகளும் (branchlets), இலைகளும் உதிரும் தன்மையன. இஃது உண்மையில் இலையுதிர் மரமாயினும், பசுமை வாழ்வு (Evergreen) மரமாகவே சுட்டப் படுகின்றது. இம்மரத்தின் பட்டை சாம்பல் கலந்த பழுப்பு (graish brown) வண்ணத்தில் காணப்படுகின்றது. இலைகள் நீண்டு மழுங்கிய (olilong) வடிவத்தில் சிறியவையாக $\frac{1}{8}$ விரற்கடை அகலமும், $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ விரற்கடை நீளமும் கொண்டு, மெல்லிய (Slender) சார்புக்கிளைகளில் (branchlets) அமைந்துள்ளன. இதனைல் நுண்மையான இறகுப் பிரிவுபோல் (finely pinnate) தோற்றமளிக்கும் பூக்கள் சிறியவையாகவும், எளிதில் தோற்றத்திற்குப்படாமலும், பசும் மஞ்சள் வண்ணத்தில் உள்ளன. இவை கூட்டான தொகுதியாகக் (clusturs) கீழ்ப்பகுதி இலைப்பகுதியின் கோணங்களில் (Axiles) காணப்படுகின்றன. பெரும்பாலும் ஆண்மலர்கள் சார்புக்கிளையின் கீழ்ப்பகுதியிலும், பெண்மலர்கள் மேற்பகுதியிலும் காணப்படுகின்றன. சில சமயங்களில் இருபால் மலர்களும் (diaceous) காணப்படுகின்றன. பூக்கும் காலம் ஏப்ரல்-மே மாதங்கள். ஆனல் தென்னகத்தில் சூலை மாதத்தில் ஒரு முறையும், பிப்ரவரி மாதத்தில் இரண்டாவது முறையும் ஆக இருமுறை பூப்பு காணப்படுகின்றது. இரண்டாவது முறையில் காய்ப்பு அளவாகவே அமைகின்றது.

நெல்லிக்காய்கள் காம்புகளின்றி உருண்டை வடிவில் சீராக அமைந்து காணப்படுகின்றன. உருண்டை வடிவத்தில் ஆறு பிரிவின் தொகுதியாக அமைந்துள்ளது. பிஞ்சுகள் பச்சைவண்ணத்தில் இருக்கும். முற்றியவை பசுமையான மஞ்சள்வண்ணம் கொள்கின்றன. காய்கள் கடினமாகவும் மெல்லிய தோலுடனும் காணப்படுகின்றன. காயின் தோற்றம் கண்ணுடிக் குண்டுபோல் உள்ளது. உள்ளிருக்கும் விதை ஆறு விதைகளின் விதைத் தொகுதியாக விளங்குகின்றது. முற்றிய காய் புளிப்புடன் காடி (acid) நிலையோடு விளங்குகின்றது.

**மண்—பயிர் பரப்புதல்—வளர்ப்பு :—**

தென்னுட்டில் பொதுவான மண்வகைகளிலும், பிற பயிர்கள் வளரா நிலங்களிலும் இப்பயிரை வளர்க்கலாம். பெருந் தோட்டங்களில் ஒரு சில மரங்களை வளர்ப்பது நலம். சடல்

மட்டத்தினின்று 4500 அடி உயரம் வரை இப்பயிர் வளரத் தக்கது. வெப்பதட்பத்தைப் பொறுத்த அளவில் ஈரவானிலையிலும் (Humig) வறண்ட பகுதிகளிலும் நெல்லியை வளர்க்க இயலும்.

நெல்லி விதைவழியில் பரப்பப்படுகின்றது. இம்முறை 100 விழுக்காடு வெற்றியாக அமையும். விதைவழியில் கன்றுகள் மூலம் பரப்பப்படுவதுடன் கிளைத்துண்டுகள் (cuttings) வாயிலாகவும், உள்வளை ஒட்டு (நெருக்கு ஒட்டு–Inarching) முறையிலும், முளை ஒட்டு (Budding) மூலமும் பரப்பப்படுகின்றன. இவற்றில் முளை ஒட்டு முறையே சிறப்பானதாம்.

நெல்லி பெருமரமாக வளரத்தக்க பயிராகையால் கன்றுகளையும் (Seedlings) போத்துகளையும் (Planting materials of vegetative method) 4×4×4 அடி அளவுள்ள குழிகளில் நடுதல் நலம். குழிகளை நடவுக்கு முன்பே வெட்டி ஆறப்போட வேண்டும். குழிகளில் மண்ணையும், தொழு உரங்களையும் மாற்றி, மாற்றிப் போட்டு நிரப்ப வேண்டும். நடப்பட்ட கன்றுகளுக்கு நிழல் இருக்க வேண்டும். தொடக்கக் காலங்களில் நன்கு நீர் பாய்ச்சுதல் வேண்டும். வளர்ந்து பெருமரமாகியதும் ஆழமான வேர் அமைவதால் நீர் பாய்ச்சுதல் தேவைப்படுவதில்லை.

இலைத்துரு நோயும் (leaf rust), வட்டத்துரு நோயும் (Ring rust) நெல்லியைத் தாக்குகின்றன. இலைத்துரு நோய் "பஃக்கோஃச்போரா பில்லாந்தி" (Phakospora phyllanthi) என்ற பூசணத்தாலும், வட்டத்துரு நோய் "இரவம்லியா எம்பிளிகா" (Ravemlia emblica) என்னும் பூசணத்தாலும் விளைகின்றது. நோயின் கடுமையைப் பொறுத்து மருந்து தெளிக்கப்படலாம்.

நெல்லி ஆண்டிற்கு இரண்டுமுறை விளைவு தருகின்றது. முதற் பருவத்தைக்காட்டிலும், இரண்டாம் பருவத்தில் காய்ப்பு குறைவேயாகும். மொத்தத்தில் நெல்லியில் பெருமளவு விளைவு காணப்படுகின்றது.

சிறப்பும் பயனும் :—

இக்கனியில் நல்ல சார உணவுகள் இருப்பதாக ஆய்வுக் கூறுபாடுகளால் அறிய முடிகின்றது. இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஈரம் 81·2%, புரதம் 5%, கொழுப்பு, 0·1%, மாழையங்கள் (Minerals) 0·7%, நார்ப்பொருள் 3·4%, மாவினப் பொருட்கள் 14·1%, சுண்ணம் 0 05, எரிகை (Phosphates) ·02%, இரும்பு 100 கிரெடைக்கு 1·2 கீழ் ஆயிரச்சிரெடை (1·2 milligram per 100 grams), 'கிகோடினிக்

காடி' 1·2 கீ.ஆ. சீ–100 சீ. அளவில் இருப்பதாக ஆய்ந்து கண்டுள்ளனர்.

அவானுவில் உள்ள ஃபின்லே ஆய்வுக்கழகம் (The Finlay Institute Laboratory, Havana) கீழ்க்கண்ட ஆய்வு முடிவினை வெளியிட்டுள்ளது:—ஈரம் 77·1-சீ ரெடை-100 சீரெடைக்கு (77·1 grams/100 grams), ஈதர்வடிப்பு (Eather extract) 0·2 சீ-100 சீ., மாவினப் பொருட்கள் 21·8 சீ–100 சீ, நார்ப்பொருள் 1·9 சீ–100 சீ., சாம்பல் (மாழையங்கள் அடங்கிய சாம்பல்) 0·5 சீ-100 சீ., சுண்ணம் 2·5 கீ. ஆ. சீ.-100 சீ., எரிகை 2·6 கீ. ஆ. சீ.-100 சீ., இரும்பு 0·48 கீ. ஆ. சீ.-100 சீ., செம்மியம் (Caroteen) 0·01 கீ. ஆ. சீ., தயாமின் 0·03 கீ. ஆ. சீ.-100 சீ., இரைபோபிலேவின் (Riboflavin) 0·05 கீ. ஆ சீ–100 சீ., நியாசின் (Niacin) 0·18 கீ. ஆ. சீ.-100 சீ., தழை இயம் (Nitrogen) 0·07 கீ. ஆ. சீ.-100 சீ., ட்ரையோஃபேன் 0·03 கீ. ஆ. சீ.–100 சீ., மித்தியோனின் 2·0 கீ. ஆ. சீ.–100 சீ, லைசின் (Lysin) 17·0 கீ. ஆ. சீ.-100 சீ., பெக்டின் (Pectin) மிகுந்த அளவில் உள்ளது.

நெல்லியில் உள்ளடங்கியிருக்கும் சி. உயிர்ச்சத்து எளிதில் அழியத்தக்கதன்று. காரணம் அது காய்களில் உள்ள தோற்பதன் (Tannin), 'பாலிபீனுல்கள்' (Polyphenols) ஆகியவற்ரேடு கலந்துள்ளது. இதனுல் உயிரியமயமாவதிலிருந்து (Oxidation) காக்கப்படுகின்றது. இந்நெல்லியில் 13 வகை தோற்பதன்களும் (Tonnins) குழவை உடன்பாட்டுப் பொருட்களும் (Colloidal Complexes) இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

நெல்லி காய்களாகவும், பக்குவப்படுத்தியும் உட்கொள்ளப்படுகின்றது. பழக்காடிகளிலும் நெல்லிச்சாறு பயன்படுகிறது. இதில் உள்ள உயிர்ச்சத்து எளிதாக அழியாது இருப்பதால் நெல்லிப் பொடியே சி. உயிர்ச்சத்து அளிக்க வல்லது. வயிற்றுக் கோளாறுகளுக்கும், செரிமானமின்மைக்கும், மஞ்சள் காய்மாலை, இருமல் ஆகியவற்றிற்கும் நெல்லிச்சாறு பயன்படுத்தப்படுகின்றது. சிறுநீர்க் கோளாறு நீக்கியாகவும், உடல் வெப்பத் தணிப்பிற்கும், நெல்லிச்சாறு உதவும். வயிற்றுக்கடுப்பு, கல்லீரல் வீங்குவது (enlarged liver) குருதி வெளியேற்றம் (hemorhoids) ஆகியவற்றைப் போக்க நெல்லிக் கியாழம் (Oicoction) நல்ல மருந்தெனக் கூறுவர்.

நெல்லி இலைகளை, செரிமானமின்மை, வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு ஆகிய உடற் கோளாறுகளுக்கு மோருடன் உட்கொள்கின்றனர். இலையில் உள்ள சில இயைப்புப்

# நெஞ்சத் தொழுநோய்!

புலவர். தி. நா. அறிவுஒளி.

அழகான உடலும், உறுதியான நரம்புக் கட்டும், சுறு சுறுப்பான இயல்பும், பொலிவார் தோற்றமும் உடைய ஒருவன் தீய பழக்கத்தால் திடுமெனத் தொழுநோய் பற்ற வருந்துகிறான். முன்னைப் பொலிவு முழுதும் குலைய, உடலுரம் கலைய, கொழுவி நீண்ட அமைப்பான விரல்கள் முடங்கித் தேய்ந்து புண்ணுமிழ் குருதியோடு அருவெறுப்பளிக்க, உடல் முழுதும் கருகித் தொழுநோய்ப் படைகளும் புண்ணும் கண்களைக் கூசச் செய்ய, முகம் வீங்கிச்சுரந்து வெறுப்பூட்டக் கண்டோர் புறக்கணிக்கும் கொடுநிலையினனாகிவிடுகிறான். அவன் கண்ணால் காணற்கும் வெறுப்பளிக்கிறான்; அவனோடு பேசுதற்கும் வெறுப்பு தடுக்கிறது; அவன்பாற் பழகவும் பயிலவும் கூசுகிறார்கள் பிறர்! அவன் தொட்டதைத் தொட

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் நீர்மநிறமிகளை, (Plasma) உறையாமல் தடுக்கும் தன்மையுள்ளவை எனக் கூறுவர். காய்ச்சல், கண்நோய், பாம்புக்கடி, குளவிக்கொட்டு ஆகியவற்றிற்கு மருந்தாக இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. புண்களுக்குப் புரைமறிப்பாக (Antiseptic) விளங்குகின்றது.

நெல்லி விதைகள், காற்றுக்குழாய்க் கோளாறு, சர்க்கரை நோய், காய்ச்சல் ஆகியவற்றைப் போக்கவும் பயன்படுத்தப் படுகின்றன. இக்கொட்டையில் ஒருவகை எண்ணெய் உள்ளதாக ஆய்வுக் கூறுபாடுவாயிலாய் அறிகின்றோம். இத்தோடு 'புரோட்டோலைடிக்கு (Protolytic), லைஃப்போலிடிக் (Lipolytic) ஆகிய செரிமான ஊக்கிகளும் (Enzymes) 'பாஃச்போடைட்ஃசும் (Phosphotides) இப்பதாக ஆய்வாளர் அறிவிக்கின்றனர்.

மரத்தின்பட்டை வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த வல்லதென எண்ணப்படுகின்றது. வேரின் பட்டை வாய்ப் புண்ணிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. தோல் பதனிடும் தொழிலில், காய்களும், இலைகளும், பட்டைகளும் உதவுகின்றன. இலைகளில் இருந்தும், காய்களிலிருந்தும் எடுக்கப்பெறும் சாயங்கள் பட்டுத் தொழிலில் வண்ண மூட்டப் பயன்படுகின்றன. தூவல் மை (Pen ink) செய்வதற்குக் காய்ந்த பொடி பயன்படுத்தப்படுகின்றது. மரத்தின் இலைகள் களர் நிலங்களில், களர் நீக்கப் பசுந்தழை எருவாகப் பயன்படுத்தப்படுகின்றன. மரங்கள், மரப் பொருட்களுக்கும் சில இடங்களில், நீர் தெளிப்புக்கும் (நெல்லிக்கட்டைகள்) நல்லவை எனும் நம்பிக்கை நிலவுகின்றது. ○

வும் அஞ்சுகின்றனர். ஐம்புலன்களாலும் வெறுக்கப்படும் நிலைக்குத் தொழுநோயாளன் 'பிணிவாழ்வு' வாழ்கிறான். அவன்பால் கழிவிரக்கம் கொள்ளவும் மாந்தர் தியங்குகின்றனர். ஏன்? அத்துணைக் கொடியநோய் அவனுடலைக் கெடுத்தழித்திருக்கிறது! அவன் நோயாளியாவதற்கு முன்னர் தோள்மீது தோளிட்டுப் பழகிய அருமை நண்பனும் ஒதுங்கியே நிற்பான். ஓருயிர் ஈருடலாய்ப் பழகும் மனைவியும் அவனைத் தீண்ட அஞ்சி நடுங்குவாள்.

இந்நிலையில் தமிழினம் இழிந்திருக்கிறது. உடலுக்கு மட்டுமா? உள்ளத்திலும் அறிவிலும் படரும் ஒப்பில்லாக் கொடுந் தொழுநோய்கள் உள்ளனவே! அவை இன்று நேற்றன்று; எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தமிழர் நெஞ்சத் தொழுநோய்களாக வாட்டி வருத்துகின்றன. 'தாம் நோயுற்றோர்' என்பதையே அறியாதவராக 'நோயிலர்' போலக் கருதியொழுகுவதே இவண் தமிழரின் இரங்கற்குரிய அவலநிலையாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற மூதுரையை நாடோறும் நாத்தேயக் கூறிக்கொண்டே நோயாளிகளாகக் கிடப்போர் தமிழரே.

இயல்போடிசைந்து இயற்கையின் ஊழ்வழி வாழ்வாங்கு வாழ்ந்த தமிழினமா இன்றுள்ள நெல்லிக்காய் மூட்டைகள்'? இல்லை. நாளுக்கொரு கட்சிக்கும் ஆளுக்கொரு கட்சிக்கும் தம் நெஞ்சில் இடங்கொடுத்த நோயாளிகள் அன்றோ உள்ளனர்!

'தமிழர்' என்ற பொது உணர்வேனும் இவர்களுக்கு உண்டாயிற்றா? இல்லை. தமிழனுக்குக் கேடு தமிழனாலேயே உண்டாக்கப்படும் தற்குறிக் கொடுமையே நிறைந்துள்ளது. 'அ' கட்சித் தமிழன், 'ஆ' கட்சித் தமிழனைத் தாழ்த்த வீழ்த்த ஒழிக்க ஓயாது ஒழியாது அல்லும் பகலும் அயராது பாடுபடுகிறான். இதைக்கண்டு 'ஆ' கட்சித் தமிழன் வாளா விருப்பானா? அப்புறம் 'தமிழன் ஆண்மை' என்ன ஆகும்? 'அ' கட்சித் தமிழனைக் கவிழ்க்க, காலை வாரிவிட, நடுகல் நாட்ட முழு மூச்சோடு பாடுபடுகிறான்! இங்கே, 'அ' கட்சியாளனும் தமிழன்; 'ஆ' கட்சியாளனும் தமிழன். தமிழனைத் தமிழனே மோதித் தாக்கி அழிக்கிறான். மொத்தத்தில் தமிழினமே போரிடுகிறது; தமிழினமே அழிந்தொழிகிறது. ஒரே குடும்பத்து உடன் பிறந்தோர் தமக்குள் இகலிப் பூசலிட்டு அடிதடி செய்து, அண்ணன்மீது தம்பியும், தம்பி மீது அண்ணனும் வழக்குத் தொடுத்து நூற்றுக் கணக்கில் செல்வஞ் செலவு செய்து தன்னுடன் பிறந்தானுக்கே ஒறுப்பு வாங்கி நல்கி வெற்றி உவகை கொள்ளும் கல்லாமடவனுக்கும் கல்விகற்ற கட்சியாளனுக்கும் என்ன வேற்றுமையுளது?

இதனினும் கொடியநோய் நிலையும் தமிழகத்தில் நிலவக் காண்கிறோம். ஒரு கட்சியும் அதன் எதிர்க்கட்சியும் கொள்கையால் மாறுபட்டவை; அவை மோதிப் பகைப்பதும், பழிவாங்கத் துடிப்பதும்கூட எளிய மாந்தநிலையில்' ஓரளவு நடைமுறைப் பழக்கமே என ஒரு 'வழுவமைதி' கூறிக் கொள்ளலாம். ஆயின்,

ஒரே கொள்கையின் நிழலில் ஒதுங்கிய ஒரே கட்சியினர் தமக்குள்ளேயே ஒற்றுமையும் கூட்டுணர்வும் இல்லாமல் பூசலிடுவதும் ஒருவரை யொருவர் ஒரே கட்சிக் கோட்டைக் குள்ளேயே குத்திக் கொலை செய்து கொள்வதும் காண்கிறோம்.

காற்பந்தாட்டத்தில் 'அ' குழுவினன், தனக்கெதிர் குழுவினரான 'ஆ' குழுவின் சார்பில் ஆடி 'எல்லைக் குறியிடத்தே இலக்கெய்வது உண்டு. இது 'தன்பக்க வீழ்ச்சி' யாட்டம் என ஆடுவாரால் பழிக்கப்படும். இதே 'பிழையாட்டம்' தமிழினக் கட்சிகளுள் இருக்கின்றது. தன்கட்சியில் செல்வாக்குப் பெறுபவனைத் தலைவன் வீழ்த்துவதும், வளர்ந்தவனை வளர்பவன் வீழ்த்த முயல்வதும் நாட்கடனாகக் காண்கிறோம். ஊர் காரியுமிழும் இவ்விழிநிலையின் மானக் கேட்டினையோ, நாணத்தகு இழிவையோ இக் கட்சியாட்கள் எண்ணுவதுமில்லை. அந்த அளவுக்குத் தன்னலவெறியாம் தொழுநோய் அன்னார் நெஞ்சில் ஊறி அழுகி நாறிக் கிடக்கிறது.

கோப்பெருஞ் சோழனும் அவன் மக்களும் தம்முள் இகல் கொண்டு போரிட முனைந்தனர். அப்பொழுது பண்டைத் தமிழ்ச் சான்றோர் குறுக்கிட்டு, 'இரு சாராரும் சோழரினத் தோரே; யார் தோற்றாலும் தோல்வி ஒருகுடிக் குரியதே' என அறிவுறுத்தித் தெளிவித்தனர். சோழன் நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் மாறுபட்டுப் போரிட முனைந்தபொழுது கோவூர் கிழார் சந்து செய்வித்து, "சோழருட் பகைத்து நீவிர் ஒரு கொடியின் கீழேயே போரிட்டு, வெற்றி தோல்வியு ளொன்றை எய்துவிர். அப்பொழுதும் சோழரில் ஒருவன் தோற்றான் என்ற பழி சுமக்குமே!' என அறிவுறுத்தினர். இவ்வரலாற்றிலக்கியச் செய்திகள் நமக்குணர்த்தும் தலைசிறந்த 'உண்மை' யாது?

ஒருகுடிப் பிறப்பினர் தமக்குள் பகைத்துப் போரிடுவது தீது; ஒருகுடியில் ஒருவன் வெல்லல், அக்குடியினருள் ஒருவனை வீழ்த்தித் தோல்வியுறச் செய்த கொடுமையின் பரிசே! ஆகவே, ஓரின மக்கள் தம் பொது வாழ்வில் ஒன்றுபட்ட ஒருமுக ஒற்றுமையினராய் ஒழுகுதலே அறிவுடைமை' என்ற உண்மையை யன்றோ அறிகிறோம்? இவ்வுயர் பேரறம் தமிழரால் தெள்ளத் தெளிய உணரப்பட வேண்டும்; உணர்ந் தொழுக்கத்தில் கைக் கொள்ளப்பட வேண்டும்.

"தமிழர்க்குள் உட்பகை இருத்தல்கூடாது. பொதுவாழ்வில், பொது முன்னேற்றத்தில், பொதுநல அறப்பணிகளில், வாழ்வியல் வளர்ச்சியில், பொருளியல் உயர்வில், அரசியல் மலர்ச்சியில், மொழி-பண்பாட்டு ஆக்கத்தில் தமிழர் மாறுபாடு கொண்டு பகைக்காமல், ஒன்றுபட்டுத் தோளிணைந்து, உணர்வொன்றி ஒருமுனையினராக வேண்டும். தமிழினம் நீண்ட நெடுங்காலம் உலகில் வென்று வாழவேண்டுமாயின் இக்கருத்தைச் செயல்வழி ஏற்றேயாக வேண்டும். இன்றேல், புல்லிய பூசலால் புழுதியாயழியும் தமிழினம்! இஃதுறுதி."

'தமிழன், தன்னினத்தான் ஒருவன். தனக்குத் தவறிழைத்துத் துன்பம் செய்தால் அதை எப்பாடுபட்டேனும்' இனக்காப்புக்காகப் பொறுத்துக் கொள்ளவேண்டும். தமிழினத்தான் ஒருவன் துன்புற்று வாடுவதற்காக அனைத்துத் தமிழரும் நாணி உள்ளம் நையவேண்டும். தமிழின் நலனுக்கு ஆகும் முயற்சிகளில் பழிசேர்க்காமல் பேராண்மையோடு முன்னிற்க வேண்டும். அரசியல் துறையில் தமிழார்வலரான தமிழ்ச் சான்றோர் ஓங்கியமர வேண்டும்.' இக்கருத்தை இன்றன்று அன்றே குறமகள் இளவெயினியார் என்ற பெண்பாற் புலவர் புறம் கருஎ-ஆம் பாடலில் (ஏறைக் கோனைப் போற்றும் பாடலில்) அருளியுள்ளார்.

" தமர் தன் தப்பின் அது நோன்றலும்
பிறர் கையறவு தான் நாணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்
வேந்துடை யவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல; எம்மோன்
பெருங்கல் நாடன்எம் ஏறைக்குத் தகுமே!"

ஆம். குறமகள் இளவெயினியார் பாடிய ஏறைக் கோனாக ஒவ்வொரு தமிழனும் சிறக்க வேண்டும். "நின்ற புகழ் ஒழிய நில்லா உயிர் ஓம்பி இன்று நாம் வைகல் இழிவாகும்; ஆகவே நன்றே நாடி நல்வினை ஒற்றுமை கூடி வாழத் தமிழினம் செழிப்போடு துணிய வேண்டும்.

உட்பகையைக் குறித்துத் திருவள்ளுவர் கூறிய எச்சரிக்கை முன்னறிவிப்பு—எத்துணை ஆழ்ந்த அரிய அடைவுண்மைகள்! மாந்தனின் மிகத் தலை சிறந்த கீழ்மைப் பண்பே இரண்டகத்துக்கும், உட்பகைக்கும் உறவாடிக் கெடுக்கும் இழிதகைக் கயமைக்கும் கரணியம் என்பதை யறியும்போது மாந்தனை உயர்திணை எனக் கொள்வதற்கும் நாம் பின்னடைய நேரிடுகிறது. தமிழர் வீழ்ச்சிக்கு அன்றும் இன்றும் உட்பகையே கரணியமாம். இத்தீமையைத் தமிழினம் உணர்ந்து திருந்தினலொழிய உய்வில்லை.

மொழியாக்கம் மட்டுமின்றி இன நலனுக்கமும், அற வளர்ச்சியும் அறிவெழுச்சியும் நம் நோக்கமாகும். தமிழ் வாழ்வு, தமிழர் வாழ்வு என்பன இரண்டல்ல; இரண்டும் ஒன்றே. 'இருதலைப் புள்ளின் ஓருயிரேம்' என்ற கற்பனை இவண் உண்மையாம். தமிழும் தமிழினமும் இருதலைகளாம். தமிழறப் பண்பாடு புள்ளின் உடலாம். இதனுட்பம் ஓர்ந் தொழுக எச்சார்புத் தமிழரும் விழிப்புற்றெழ வேண்டும்.

மேடையில் தூற்றியும், அவையில் தூற்றியும் பழிபுரி யினும் புரிக. செயலில் தீங்கிழைக்காத வண்ணம் தமிழர் ஒருமையுறல் இன்றியமையாததாம். தமிழுக்குழைக்க, தமிழர் வளத்துக் குழைக்க, தமிழ்ப்பண்பு வளர்ச்சிக்குழைக்க முன் வரும்போது தமிழகத்தார் தன்னலம், தற்குறித்தன்மை, கட்சித் தனிக்கொள்கை, பகைமை, போலி நம்பிக்கைகள் ஆகியவற்றை ஒதுக்கிவைத்து, 'நாம் யாவரும் தமிழர்' என்ற உணர்வொற்றுமை யுடையராக வேண்டும். குடும்பப்பகை யோ. தனிப்பகையோ கூட அது காலை நினைத்தலாகாது. இத் திறமையைத் தமிழினம் பெறின், தமிழின் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் யாண்டும் இல்லை.

தமிழுணர்ச்சி யற்ற தமிழர், தமிழார்வலர்க்குப் பகைவ ராவதே வியப்பினுள் பெருவியப்பு! என் செய்வது! இராவண னுக்கு, இராமனைக் காட்டிலும் வீடணனன்றோ உடன் பிறந்தே கொல்லும் நோயாயினன்! அவ் வீடண நோய்கள் பல்லாயிரங் களாகப் பல்கிப் பெருகியதே தமிழகத்தின் கொடுந் தீவினை யாம்! கதையில் கூட வீடணத் தன்மையைப் பாராட்டலாகா தென்பேன்.

உண்மைத் தமிழினத் தொண்டர்க்கும், உண்மைத் தமிழறிஞர்க்கும், உண்மைத் தமிழகக் காதலர்க்கும் ஏனை யுடன் தமிழர் உதவா விடினும், ஊறு சூழாதிருப்பதேனும் ஆற்றுதல் அறங் கூறும் ஆக்கந்தருந் திருத்தொண்டாம். ஆயின், பிறர்பண்பு பேணி, பிறர் அடிமையான பேதைத் தமிழர், முதுகிற் கூன் கத்திபாய்ச்சும் புலையராய்ப் பொய்த் தலே, நெஞ்சுட் குருதி தேக்குகிறது. தமிழக உண்மை வர லாறு புதுக்கி உணர்த்தப்பட்டாலொழியப் பேதைத் தமிழர் தம் பிழையுணரார்! ஏய்ப்போர்க்கு ஏமாந்தே இழிந்தவன் தமிழன்! நல்வாய்ப்புகளை யெல்லாம் தன் பொல்லாக் குருட் டுப் போக்கால் 'வெண்ணெய் திரளுங்கால் தாழியுடைந்தாற் போல்' உடைத்துக் கெடுத்தவன் தமிழன்! தூங்குகின்றதே பேரின்பமென்று பிறர் திரிக்கத் தன் தொடை வழங்கியவன் தமிழன்! மானத்தை ஏட்டிலே போற்றிவிட்டு, நாட்டிலே மானத்தின் மானத்தைப்பறித்தவன் தமிழன். தாய்க்குக் கோயிலெடுத்து, அக்கோயிலிலேயே தாயை வெட்டிப் பலி

# புறப்படட்டும் புலிகள்!



—பாவேந்தர் பாரதிதாசன்.

(அவர் நினைவாக)

தமிழ்நாட்டு விடுதலை, தமிழ்ப்புலவர் விடுதலை!
நமக்கென்ன என்றிருப் பாரோ!—புலவர்
நமக்கென்ன என்றிருப் பாரோ! (தமிழ்)

தமிழைப் பேச உரிமையும் இல்லை!
தாயை வாழ்த்தினும் வந்திடும் தொல்லை! (தமிழ்)

தமிழ்மொழி எல்லாம் வடமொழி என்று
சாற்றுவார் பார்ப்பனர் பொய்யிலே நின்று!
தமிழ்மொழி எல்லாம் தமிழ்மொழி என்று
சாற்றுவர் தமிழர்கள் மெய்யிலே நின்று!
தமிழ்ப்பகைப் பார்ப்பனர் அடைவது நன்மை
தமிழ்ப்புல வோர்கள் அடைவது தீமை! (தமிழ்)

நற்றமிழ் என்பது தில்லிக் காகாது!
நம்அமைச் சர்க்கும் காதுகே ளாது?
புற்றிலே மோதினல் பாம்புசா காது!
புறப்ப டட்டும் புலிகள்இப் போது! (தமிழ்)

தமிழ்விடு தலைப்போரைத் தட்டிக் கழிப்பதா?
தட்டியே மனைவியின் முகத்தில் விழிப்பதா?
தமக்குள்ள பெருமையைத் தாமே அழிப்பதா?
தமைஈன்ற தாயின் குடரைக் கிழிப்பதா? (தமிழ்)

ஆட்டிப் படைப்பவர்க் கஞ்சுதல் வேண்டா!
அமைச்சர் என்பார்க்கும் அஞ்சுதல் வேண்டா!
காட்டிக் கொடுப்பார்க்கும் அஞ்சுதல் வேண்டா!
கருத்திலாக் கட்சிகட் கஞ்சுதல் வேண்டா! (தமிழ்)

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

***யிட்ட மடவன் தமிழன்! இத்துணை மறக் கொடுமைகளைத் தனி மதிகேடால் செய்தவனை இன்னமும் திருத்த முனைகின்றனர் சான்றோர் சிலர், தமிழன், தன் தொழுநோய்களை நீக்கிக் கொள்ள வேண்டும்; நோயற்ற நெஞ்சமே தூயது; துலங்குவது! தமிழன் நோயிலனாக வேண்டும்!—இது நம் வேண்டுகோள்.***

※

# வந்தது கேடு!

—மகிபை. பாவிசைக்கோ.

வந்ததே தமிழுக்குக் கேடு!—நல்ல
மதுரையம் பதியிலும் 'நெ.பொ.மீ.' யோடு (வந்ததே)

மந்திகை மாலையாய் மொழிகெடும் அடியோடு
வகைகண்டு தடுப்பதே நமக்கெலாம் மேம்பாடு! (வந்ததே)

வெந்தநம் புண்களில் வேலை நுழைத்தனன்;
வீணரைப் பல்கலைத் தலைமைக் கழைத்தனன்;
குந்திஆளும்பந்த வச்சலன் ஏற்பாடு
கூடினல் மானமே எஞ்சாது பிற்பாடு! (வந்ததே)

சென்னையில் தில்லையில் செய்தது கொஞ்சமா?
தீவட்டி நுழைந்திடின் மதுரைதான் எஞ்சுமா?
என்னதான் நினைத்தனர்; தமிழ்விலை பேசினர்!
எழுகநல் விளைஞீர்,வல் லரிமாவின் வலிவோடு! (வந்ததே)

எத்தர்கைக் கதிகாரம் இனிமேலும் சேருமேல்
இழிவான கழுதைக்கும் தமிழ்இளக் காரமே!
இத்தனை நாள்பட்ட இழிவெல்லாம் போதுமே,
இணைகசெந் தமிழீர்வெந் திறல்யானை விரைவோடு (வந்ததே)

ஆயிரம் ஆயிரம் குட்டுகள் பட்டுமா
அடிமையாச் சேற்றிலே அழுந்திக் கிடப்பது?
பாயிரம் முடிந்தது; படலம் தொடருமுன்
பாய்கசெந் நாய்கள்மேல் படுகொலை வாளோடு! (வந்ததே)

கூனிச் சிறுத்துநம் மறமெலாம் ஓய்ந்ததால்
குலைவாழை மரத்திலே குரங்குகள் பாய்ந்தன!
ஏனினி உயர்நமக் கிழிஞரை ஓட்டாது,
எதிர்கவெம் புலிபோல விடுதலைப் பாட்டோடு! (வந்ததே)

ஆசிரியர் 'பெருஞ்சித்திரனின்'

**"சிறைக்கோட்டம் புக்க காதை!"**

அடுத்த இதழில் இடம்பெறுகின்றது!

# பழம்பெருமை

-புலவர். திருமேனி நாகராசன்

நெருநல் நடப்பினை மறப்பவன் இன்றுய்தலரிது. முன்னை வாழ்க்கையை நினையாதான் இன்னே அதனைச் செப்பனிட ஒருப்படான். இறந்த காலத்தை எண்ணு ஒருவன் நிகழ் காலத்தில் வரை முறையாக வாழ அறியான். கடந்த வரலாற்றை எண்ணியறியாதொழியின் கடக்கும் வரலாற்றைக் காண்டல் ஒல்லாது. பழைய நிலையைப் பாரா விடத்துப் புதிய நிலையில் போக்கிழந்துபோதல் உறுதி. பழைமை எண்ணற்குரியது; போற்றற்குரியது; அது தரவரும் படிப்பினை பெரிதாதலின், பழைமை பாராட்ட வேண்டுவது பண்பில் பண்புடைச் செயலெனில் இழுக்காது.

பழைமை பெருமையுறுவதுசிலர்க்கே. உலகில் சில்லோரே பழம் பெருமை உடையவராவர். மாந்தர்க் கமைந்தது போன்றே இனத்திற்கும் பழம் பெருமை உண்டென்றறிக. இம்மலர்தலை உலகில் பழம் பெருமையுடைய மாண்புடை. இனம் மிகமிகச்சிலவே. அவற்றுள் தலையது தமிழினமே! தமிழினம், காலவாராய்ச்சிக் கெட்டாத தொடக்க நிலையும் அளக்கலாகாத பெருமையும் விளக்கலாகாத செம்மாப்பும் உடைத்தாய், பண்பட்ட நாகரிகத்தில் முதிர்ந்து விளங்கி, அகப்புற வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் தலைநிலை வளர்ச்சி பெற்று ஓங்கி உயர்ந்திருந்தது,

இவ்வாறு உயர்மட்டப் பெருமை யுற்றிருந்த நந்தமிழினத்தின் சிறப்புகளை யெல்லாம் உளமார எண்ணிப் பல காலும் உவக்க நமக்குரிமை உண்டு; வாயாரப் பேசிமகிழ வாய்ப்புண்டு. ஒப்பற்ற நமதுயர் பெருமையைப் பாராட்டும் உரிமை வேட்கையைத் திடுமெனத் தீய்க்க முனைவார் பலராம். 'பழம் பெருமை பேசுதல் பகடிக்குரியது.' 'அது பிற்போக்காளர் செயலாம்.' என்னை, பழம்பெருமை வீழ்ச்சிக்கே அடிகோலுமாதலின்; முன்னேற்றம் இறந்தகால உணர்வில் இல்லை. ஆதலின், பழம் பெருமை பேசுதலைக் கதுமெனக் கைவிடுக' இவ்வாறு பலவாறு பலரும் இக்கால மறுமலர்ச்சித் தமிழரை நோக்கி அயராதறிவுரை பகர்தலைத் தம் மூச்சாய்க் கொண்டுள்ளனர்.

பழம் பெருமை பேசுதலைத் தவிர்க வென்பார், நேற்றே வரலாறு பெற்ற வேற்றினத்தாரல்லர். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழினத்தில் இற்றை ஞான்று தோன்றிய முதறிவுசால் நந்தமிழரேயாவர். என்னே இளிவரல்! தமிழனை மாற்றான் காட்டிக்கொடுத்தானல்லன். தமிழனைத் தமிழனே காட்டிக்கொடுக்கிறான்.

இஃது இந்நாட்டிலல்லது வேறு எந்நாட்டில் நிகழுறும்? பெருமை பாராட்டிக்கொள்ள இக்காலத்தமிழர்க்கு உரிமையும், வாய்ப்பும், திறனும், தகுதியும் உண்டு. ஆனால், நமக்கொப்பாகப் பழம்பெருமை பாராட்டிக் கொள்ள உலகில் வேறு எவ்வினத்தார்க்கும் உரிமையும், தகுதியும் அணுவில் ஆயிரத்திலொரு பங்கேனும் இல்லை. என்னை, அவர்தம் வரலாறெல்லாம் அண்மையிலே தொடங்கியதாதலின்.

மேம்பட்டு விளக்கமுற்றிருந்த பண்டைத்தமிழர் பெருமையினை, தாழ்வுற்று அடிமையிலும் மிடிமையிலும் அல்லலுற்றழியும் இக்காலத்தமிழர் எண்ணிப் பார்க்கின் அவர் தலை தூக்கி உயர்வுறுதல் மெய்யாம். எனவே, பழம்பெருமை பாராட்டவேண்டுவதே! பாராட்டாக்கால், தனித்தன்மை இழந்து சோற்றுப் பருக்கையினை உண்டு, உடலோம்பித்திரியும் இக்காலத் தமிழர், தம் பண்பட்ட பண்டை வரலாறு அறியாராய், இதுவே வாழ்க்கை என எண்ணித் தமதினத்தைத் தாமே மாய்த்துக் கொள்ள ஏதுவாகுமென்க. பழம்பெரும் பெருமை பேசுவதோடு தமிழர் கடன் முடிவுற்றதாக எவர் சொற்றது? உண்மையில், அவ்வளவிற்றான் அவர்தம் கடனே முளைவிட்டு வளரத் தோடங்குகிறதென்க. அன்றைய தமிழர் தலைநிலை வாழ்வுச் சிறப்புகளின் நினைப்புடைமை ஒன்றுதான் இன்று வாழ்விழந்துகிடக்கும் நந்தமிழர்க்கு எழுச்சி கூட்டி உயிர்ப்பூட்டி ஊக்குவிக்கவல்லது. பொதுவாகவும் சிறப்பாகவும் வாழ்ந்து வீழ்ந்துவிட்ட மாந்தரும், இனமும், நாடும் பழம் பெருமையை அறிந்த பின்றையே, மாண்டுபோன பழைய சிறப்புகளை எஞ்சாநசையுடனும் குன்றா ஊக்கத்துடனும் பெற்றுள்ளன. இதற்குச் சான்று பல காட்டலாகும்.

க. கழகக்காலத்தில் பொய்யாநாவின் புகழ்விளங்கு பெரும் புலவரெல்லாரும், அருந்திறலாற்றலரசர் அறத்திற்றளர்ச்சியுறுங்காலத்துக் காலினுங் கடுகிவிரைந்து அவர்தம்மைக் காத்தல் கண்கூடே. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமானிடம் மாறாப் பகை கொண்டிருந்தானாக; அதுபோழ்து மலையமானின் பகுத்துணர்வில்லாப் புன்றலைச் சிறாரிருவர் தம் நாட்டெல்லை இகந்து கிள்ளிவளவன் நாட்டெல்லையில் அறியாராய்ப் போதர, அவரைப் பொல்லெனக் கைப்பற்றிப் பெயராச் சினத்துடனே பெருங்களிற்றின் காலிட்டுக் கொல்லுவிக்க எண்ணுழி. இறைபோல ஆண்டு ஏற்றமுறத் தோன்றினர் கோவூர்க்கிழாரென்னுங் கொள்கைச் சான்றோர். பகைமை ஒன்றையே தேற்றியமையின் மன்னவர் கண்கட்குப் பச்சிளம் சிறாரும் அதிரப் பொரவரும் மாமல்லர்களாகத் தோன்றினர்போலும். புலவர். சிறுவர்தம்மைக் காக்கவும் வளைகின்ற மன்னவன் கோலை

க. புறநானூறு; பாடலெண்: 46.

நிமிர்த்தவும் முயன்றாராய்க் கிள்ளி வளவனை நோக்கி "1 பற்றுக் கோடியேது மின்றித் தன்னை வந்தடைந்த புறவின் துன்ப மன்றியும் பிறபலவற்றின் அல்லல்களனைத்துமறிந்து நீக்கிய மரபினன் வழிவந்தோன் நீயே, இச்சிறுவரோவெனில் கொல்லவந்த களிறு கண்டு அழுதலைத் தவிர்த்தாராய் மன்று மருண்டுநோக்கிப் புதுமை, இன்னலுடையராய்நிற்பர் ஆதலின் என்னுரை கேட்டாயாயின் வேட்டது செய்க" வென்றனர். புலவருரை புரவலன் உளத்தே புதுமையாக்கம் செய்திற்று. மன்னவன் தன் முன்னோனை சிபியின் பெருமையை முழுமை பெற எண்ணினன். தன்னினப் பழம் பெருமை உள்ளிய வேந்தன் மறவழிநீத்து அறவழி நின்றானாய் மலையமான் மக்களைக்காத்து அவரை அவர்நாட்டிற்கே தக்க ஏமஞ் செய்து போக்கிவைத்தான். ஈண்டுப் புலவரால் பழம்பெருமை உணர்த்தப்பட அதனை ஆழவுணர்ந்தமையின், கிள்ளிவளவன் அறவழி நின்றான்; அறியாச் சிறுவரும் ஆருயிர் பெற்றன ரென்க. பழம்பெருமை தெரியாதிருந்த வேந்தன், தெள்ளி தின் பின்றைத் தெரிந்து கொள்ளவே உயிர்பெற்று உயிரளித் தனன்...

௨. மறக்குடியில் மன்னிய மறத்தியொருத்தி செருப்பறை கேட்டு, முலைபற்றிப் பால் சுவைத்திருந்த மகவை, முலை பறித்து வேல்கைக் கொடுத்துக் கனிவுறத்தழுவி அவனைக் கொடுவந்து முன்பு தன் குடியிற் பிறந்து அருஞ்சமம் சிதையத் தாக்கி, மார்பினில் புண் தாங்கி வெங்களத்திடைப் பட்டமை யின் நடுகற்களாய் நின்ற கொழுநன், தந்தை, பாட்டன், அவன் தந்தை என்றின்னோரை முறை முறை சுட்டிப் பழம் பெருமையைத் தன் பிள்ளைக்குப் பழுதறக் காட்டினள். காட்டவே, அவள் வயின் வந்த அப் புலிக்குருளை தன்குடிப் பழம்பெருமை உணர்ந்து வீறு கொண்டான்; அவன்தன் பழம் பெருமை யுணர்வு அவனுக்குப் பதின்மடங்கு வலி நல்கிற்று. உடன் செருக்களம் நோக்கி விருப்புற்றுச் சென்றா னவன். மறத்தி பிள்ளைக்கு வேல்கைக் கொடுத்து வெங்களம் போக்காமே நடுகல் காட்டிப் போக்கியது எற்றுக் கெனில் அவன்றன் குலப்பெருமையை—முன்னோன் பெருமையை—அவனுக்குணர்த்தி வீறு கொளச்செய்து நாட்டுப் பெருமையை நாட்டுதற் பொருட்டேயாம். எனவே வீழ்ச்சியுற்ற இனமோ நாடோ வாழ்வு பெறுதற்கு அவை தமது பழம்பெருமை உணர்தல் இன்றியமையாததாகு மென்பது அங்கை நெல்லிக் கனியே.

முடிபாக, தம்மொழியின் ஒப்பில் பெருமைச் சிறப்பினை யும், தம் முன்னோரின் பண்பட்டு முதிர்ந்து மேம்பட்ட நாகரிக வாழ்க்கையினையும், தம்நாடு அனைத்துத் துறைகளிலும் உலகத்து நாடுகளுளெல்லாம் உயர்வு பெற்று விளங்கிய

௨. புறப்பொருள் வெண்பாமாலை; வாகைப்படலம்; வெண்பாவெல்: 21.

# தமிழ் இருக்கும் நிலை !

‘தமிழவேள்’

தமிழ்மொழியைக் கற்றதனின் தேன்போலும் சுவையிற்
திளைக்கின்ற பெரும்பேற்றைப் பெற்றவன்நான் எனவே
தமிழ்வழங்கும் திருநாட்டைப் போய்க்காணல் வேண்டித்
தாயகமாம் ‘செக்’நாட்டி னின்றுபுறப் பட்டேன்.
அமிழ்தான மொழிபேசும் மக்களுடன் சிலநாள்
அவணிருந்து வருவோமென் ருவலுடன் சென்றேன்
தமிழ்கற்ற மேனாட்டு மாணவன்நான் அங்கே
தமிழிருக்கும் நிலைகண்டு திகைப்புற்றேன்; நொந்தேன்!

உண்பதற்கும் தங்குதற்கும் விடுதிபல கண்டேன்
விடுதிகளின் பெயரெல்லாம் பிறமொழியில் அன்றிப்
பண்ணூர்ந்த பைந்தமிழில் இல்லையென்ப தோடு
பருகுதற்குத் தரும்சுவைநீர் தித்திப்புக் கார
உண்டிகளின் பெயரெல்லாம் பிறமொழியே மற்றும்
உணவிடுவோர் தாய்மொழியும் தமிழேதான் எனினும்
உண்சோறு மிளகின்நீர் குழம்பென்னும் சொற்கள்
வழங்காமல் பிறசொல்லே வழங்குவதைக் கேட்டேன்.

தகைசான்ற தாய்மொழியில் தமிழர்தம் கடைகள்
திகழாத தாழ்வதனை என்னென்று சொல்வேன்!
நகைக்கடையோ துணிக்கடையோ தின்பண்டக் கடையோ
நூற்கடையோ பழக்கடையோ பலசரக்குக் கடையோ
வகைவகையாய் உடைதைக்கும், முடிதிருத்தும் கடையோ
வட்டிக்குப் பணம்கொடுக்கும் வங்கிகளோ எல்லாம்
மிகையாகப் பிறமொழியின் பெயர்களையே தாங்கி
மொழிப்பற்றுச் சிறிதுமிலார் தமிழரெனச் சொல்லும்!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மாண்பினையும் அணுவளவேனும் அறியாது உணவுக்கும் உடைக்கும் உறையுளுக்கும் ஓயாதுழன்றுகின்ற இக்காலத் தமிழர் அனைவர்க்கும் அவர்தம் மொழி, இனம், நாடு ஆகியவற்றின் பழம்பெருமைகளைப் பழுதறப் பாகு படுத்திச் சொல்லல் தமிழறிஞராயினோர் அருங்கடனும். இக்காலத் தமிழர்தம்மொழி, இன, நாட்டின் பழம்பெருமைகளைமுற்றவும் உணரப் பெற்று வீழ்ச்சியைச் சரிசெய ஏறென எழுச்சி பெறுவாராயின் பழம் பெருமை பேசுதற்கு ஒரு பெரிய முற்றுப் புள்ளியை வைக்க. அதன்பின், தமிழரெல்லாரும் அயரா ஆர்வத்துடனும் அசைவில் ஊக்கத்துடனும் பண்டைவாழ்வின் சிறப்பியல்புகளை மீண்டும் பெற்றுச் செம்மாந்து வாழ ஓயாதுழைப்பாராக. ●

அஞ்சலகப் பெயர்ப்பலகை களையெல்லாம் பார்க்கின்
அங்கெங்கும் அன்னைமொழி முதலிடத்தில் இல்லை.
அஞ்சலக முத்திரையிற் றலைகளிலே எல்லாம்
அருமைமொழிக் கிடமில்லை! ஆட்சிமொழி வேறே!
அஞ்சலகத் தொலைவரியும் ஆணைகளும் பிறவும்
ஆங்கிலத்தில் இந்தியில்தான்! தமிழ்மொழியில் இல்லை!
கொஞ்சமுமே தன்மான உணர்வின்றித் தமிழர்
கீழ்நிலையில் உள்ளதனைக் கண்டுள்ளம் நைந்தேன்.

தென்னாட்டின் முன்னேற்றம் எத்துறையில் என்றால்
திரைப்படத்தில் தான்அந்தத் துறையினிலும் அந்தோ!
தென்மொழியாம் தமிழுக்குத் தக்க இடம் இல்லை.
திரைப்பாடல் உரையாடல் தனித்தமிழில் இல்லை!
மின்னுகின்ற நடிகர்களின் நடிகையரின் பெயர்கள்
மற்றுமவர் படப்பிடிப்பு நிலையத்தின் பெயர்கள்
அன்றாடம் படம்காட்டும் கொட்டகையின் பெயர்கள்
அத்தனையும் பிறமொழியே தமிழ்ஒன்றில் இல்லை!

இனிமைக்குப் பெயர்போன தீந்தமிழில் பாடும்
இசைகேட்போம் என்றொருநாள் இசையரங்கம் சென்றேன்.
கனிச்சுவைசேர் கற்கண்டுத் தமிழ்ப்பாடல் இன்றிக்
'கருநாட' இசையென்று வடமொழியில் தெலுங்கில்
இனிமையிலாப் பாடல்களே பெரிதுமவண் கேட்டேன்.
இலுப்பையினைச் சருக்கரையின் சுவைமிக்க தென்று
குனிந்துண்ணும் குருடர்களாய்த் தமிழர்தாம் வாழும்
கடைநிலையைக் கண்டேநான் நெக்குருகி நின்றேன்.

கலையழகுக் கோயில்கள் கட்டியவர் தமிழர்;
கற்படிவைக் கோயிற்குள் வைத்தவரும் தமிழர்;
நிலையழகுச் செலவும்தான் தமிழரதே எனினும்
செந்தமிழ்க்கோ தமிழர்க்கோ சிறப்பில்லை அங்கே!
தலைச்சிறப்பைப் பிறப்பதனால் பெற்றவராம் சிலவோர்!
தமிழ்நீக்கி வடமொழியில் வழிபாடு செய்யத்
தலைவணங்கி அடிமையராய்த் தொலைவினிலே நிற்கும்
தமிழர்போல் தாழ்ந்தவர்கள் வையத்தில் யாரே?

பிறமொழியைக் காதலிக்கும் பேதையராம் தமிழர்
பிள்ளைக்குப் பெயரிடலும் தாய்மொழியில் இல்லை.
பிறமொழியின் பெயர்களையே வைத்துமகிழ் கின்றார்.
பேச்சினிலும் பிறமொழியைக் கலந்துமகிழ் கின்றார்.
அறமுரைக்கும் உயர்தமிழ்நூல் அவர்படிப்ப தில்லை.
அயல்மொழிநூல் படிப்பதுவே அவர்விருப்ப மாகும்.
புறக்கணித்துத் தாய்மொழியைப் பிறமொழியே போற்றும்
புன்மைக்குப் பரிசென்றால் தமிழர்களே பெறுவர்!

# நொச்சி

—கலையழகன்

மலையைச் சார்ந்துள்ள இடங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் உள்ள குறுகிய மரம் நொச்சி. கருமையான கொம்பினையும், மணிகள் கொத்துக் கொத்தாய் அமைந்தாற் போன்ற கரிய பூக்களையும் உடையது. இது மனையிடத்தே முல்லை படர்ந்து மலர்கின்ற இடமெனும் பெற்றியைப் பெற்றது.

தழைகள் காண்பதற்கு நிறைந்த அழகுடையன. தழையிடைத் தொடுக்கப்படும் தொழிற்பாட்டால் அதன் அழகு மேம்படுவதைப் பொருநராற்றுப் படையில் நூற்று நாற்பத்தெட்டாம் வரிக்கண் 'கண்ணார் கண்ணி' என்பதால் அறியலாம். மனையிடத்தே முல்லையின் வெண்ணிறப் பூக்களோடு நொச்சியின் கருநிறப் பூக்களும் சேர்ந்து பூத்திருப்பது மனத்தையே கொள்ளும்!

மோசி சாத்தனார் என்ற சான்றோர் இம்மரத்தைப் 'பன் மரனுள்ளும் சிறந்த காதல் நன்மரம் நீ' (பூக்கள் மலர்ந்த பலவாகிய மரங்களுள் மிக்க அன்பு செய்தற்குரிய மரம் நீ) என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். புறநானூற்றில் இதைக் கண்ணுறலாம்.

மேலும், பண்டைத் தமிழகத்து இளைய மகளிர் விரும்பியணியும் தழையுடையுள் நொச்சித் தழையுடையும் ஒன்றாகக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் திங்கள் இதழ் கிழமை இதழ் நாளும்
தவறாமல் தரும்செய்தி இதழ்பலவும் பார்த்தேன்.
தமிழ்நெறியைக் கடைப்பிடித்துத் தனித்தமிழைப் போற்றும்
தாள் இதழ்கள் ஓரிரண்டே! பிறதாள்கள் யாவும்
தமிழ்ப்பற்றே தமிழ்வளர்க்கும் பெருநோக்கோ இன்றித்
தமிழர்தம் தலைதடவித் தரைமட்ட மாக்கித்
தமிழ்கெடுத்துத் தமிழ்ப்பண்பை அழித்தொழிக்கும் பணியில்
தலைப்பட்டு நிற்பதனைத் தெரிந்துள்ளம் பதைத்தேன்!

மன்னுலகின் மொழிக்கெல்லாம் தாயாகி நின்றும்
மாறாத சீரிளமைத் தகைசான்ற மொழியாம்
தன்னிகரில் தனிமொழியாம் செம்மொழியாம் தமிழைத்
தாய்மொழியாய்ப் பெற்றிருக்கும் பெருமையறி யாமல்
இன்சுவைத்தேன் நுகர்வறியாத் தவளையெனத் தமிழர்
ஏதிலரின் ஏவலராய் இருப்பதனால் அன்றோ,
தன்னுரிமைத் திருநாடும் தமிழ்த்தலைமை யின்றித்
தாழ்ந்திருத்தல் என்றெண்ணிக் கண்கலங்கி நொந்தேன்.

கொண்டிருப்பது இலக்கியங்களில் காண்கின்றோம். 'ஐது அகல் அல்குல் தழையணி கூட்டும் கூழை நொச்சி' என இதை அகநானூறு தம்மகத்தே காட்டுகின்றது.

புறத்தின் இலக்கணமாகிய நூற்பாக்களையும் அவற்றின் இலக்கியமாகிய வெண்பாக்களையும் உடைய புறப்பொருள் வெண்பா மாலையில் பன்னிரு படலமாகிய ஐந்தாம் படலத்திற்கு நொச்சித்திணை என்று பெயர் சூட்டி, நொச்சி—மறனுடைபாசி—ஊர்ச்செரு-செருவிடை வீழ்தல்-குதிரை மறன்-எயிற்போர்—எயிறனையழித்தல்-அழிபடை தாங்கல்—மகண் மறுத்து மொழிதல் எனச் சொல்லப்பட்ட ஒன்பது துறைகளில் நொச்சியை முதன்மையாக வைத்து, மதிலைக் காத்தற் பொருட்டு நொச்சிப் பூச்சூடுதல் உரித்து எனச் சிறப்பிக்கப் பட்டிருப்பது நோக்கத் தக்கது.

ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று.

நொச்சிப் பூவையோ, மாலையையோ அணிந்து போரிடுவது உயிரைக் கொடுத்தேனும் மாறுபடுவார் கைக்குப் போகாவண்ணம் அரணைக் காப்போ மென்று சூளுரைத்துக் கனல் கக்கப் பொருதுவதாகும்.

இவ்வாறு நொச்சியின் புகழ் ஓங்கி, மேலுமதை மிகைப் படுத்துவது போன்று புறநானூற்றுக் காட்சியொன்று அமைகிறது.

வெறி பாடிய காமக் கண்ணியார் ஒருகால் அரசர் இருவர் போர் செய்யக் கண்டார். ஒருவர் மற்றவர் நகரத்து அரணை முற்றுகையிட்டார். மற்றவருடைய மறவர் மதிலிடத்தே நின்று நொச்சிமாலை சூடி மதிலைக் காக்கும் பொருட்டுப் பெரும்போர் புரிந்தனர். அப்போரில் மறவன் ஒருவன் அணிந்திருந்த நொச்சிமாலை அவன் பகைவர் வாளால் வெட்டுண்டு வீழ்ந்தபொழுது அறுப்புண்டு அம்மறவன் குருதியில் படிந்து உருமாறிப் போயிற்று. போரினால் வீழ்ந்த பிணங்களைத் தின்பதற்குப் பருந்து போன்ற பறவைகள் அங்கே சூழ்ந்து கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு பருந்து குருதியிற் படிந்து உருமாறிச் செந்நிறமாகிய நொச்சிமாலையை இறைச்சி யெனக் கருதித் தூக்கிக் கொண்டு உயரே பறந்து போயிற்று. இக்காட்சி புலவர் உள்ளத்தில் பதிந்து அழகிய பாடலாக வெளிப்பட்டது.

நீரற வறியா நிலமுதற் கலந்த
கருங்குர னொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளி ரைதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டன மினியே

# தமிழ்தானில்லை!

—மணிவேலன்.

சிற்றூரில் வசிக்கின்ற படியாதான்
செப்புகின்ற செந்தமிழ்ச் சொல்
'கற்றவர்'க்குப் புரிவதில்லை! பிறமொழிச்சொல்
கணக்கின்றிக் கலந்து பேசி
'வெற்றிநடை' போடுகின்ற அறிவிலிகாள்!
பட்டத்தை வீசி விட்டுச்
சிற்றூர்க்குச் சென்றிடுவீர்; செந்தமிழ்ச்சொல்
அங்குத்தான் தெரிந்து கொள்வீர்!

சிற்றுண்டிக் கடையுள்ளே புகுந்திட்டால்
செப்பு பெயர்செவிகள் கைக்கும்!
நற்சுவைசேர் பண்டங்கள் பெயரனைத்தும்
பிறமொழியில் நவிலும் செய்கை
பெற்றபிள்ளை தனைக்கிணற்றில் வீசிவிட்டுப்
பிறன்மகனைப் பேணிக் காக்கும்
பெற்றியன்றோ? தமிழ்மகனே! தமிழ்விடுத்துப்
பிறன்மொழியைப் பேணல் என்னே?

தேன்குழலை 'ஜாங்கிரி'என் றோதுவதில்
தமிழா!நீ தேர்ந்து விட்டாய்!
கூன்பிறையின் பூரியினைச் சோமாசென்
றிழிவுறவே கூறு கின்றாய்!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
தொறுவாய்ப் பட்ட தெரிய லூன்செத்துப்
பருந்துகொண் டுகப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே. (புறம்: உஎக)

இத்தகைய நொச்சியின் பெருமையை இன்னும் கூட்டுவதாகப் பிற நூற்களும் இதை யெடுத் தாண்டிருக்கின்றன. 'முற்றிய அகத்தேன் வீழ்ந்த நொச்சி' என்று தொல்காப்பியமும்; 'மணிக்குரல் நொச்சி' என நற்றிணையும்; 'மெளவலோடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும்' என அகமும் இன்ன பிறவும் ஆண்டிருக்கின்றன.

நியமங் கிழார் என்ற புலவர் நொச்சியை யொத்த மறச் செயலாற்றி நொச்சி விருது பெற்று நொச்சி நியமங்கிழார் என்று பெயர் பெற்றார் என்றால் நொச்சியின் உயர்வை அது காட்டுகின்றதன்றோ? ✻

ஏன்தம்பி குழம்பென்றால் குழம்பிடுமோ
உன்மூளை? எதற்கோ 'சாம்பார்?'
மானமில்லை? சோறதனைச் சாதமெனும்
அவாள்மொழியை மதிக்கின்றாயே!

சாறென்றால் உனக்குவந்த கேடென்ன?
'ரச'மென்று சாற்று கின்றாய்!
ஊறென்ன 'ஹல்வா'வை கோதுமைத்தேம்
பாகென்றே ஓதி விட்டால்?
கூறுகெட்டு 'ரசகுல்லா' 'பாதுஷா'
'ஜாமு'னென்று கூறும் போழ்தே
நாறுகின்ற பிணமென்று நாம்வெறுக்கும்
நான்வந்தால் பிழைப்பாள் நந்தாய்!

தமிழ்நாட்டில் வற்றாத ஆறுண்டு;
மலையுண்டு; தழைத்துப் பூத்துக்
கமழ்கின்ற சோலையுண்டு; வளமுடைய
கானுண்டு; கழனி யுண்டு!
தமிழ்மொழியைக் காக்கின்ற நெஞ்சங்கள்
தாமிலவே தமிழர் நாட்டில்!
தமிழ்மொழியோ தமிழ்மக்கள் வாயிலில்லை!
பழஞ்சுவடி தம்மில் உண்டே!

'எல்லாமே உண்டுண்டு; யாம்பெரியோம்;
யாம்உயர்ந்தோம்' என்றே நாளும்
சொல்லாலே சிலம்படிக்கும் நாவலர்காள்!
எண்ணிடுவீர்! சிறிது போழ்தே;
எல்லாமே இருப்பதென ஒப்பிடினும்
ஒன்றைமட்டும் ஏற்க மாட்டோம்!
வெல்லம்போல் இனிக்கின்ற தமிழ்மட்டுந்
தானில்லை! வெட்கம்! வெட்கம்!


## விற்பனையாளர் தேவை...!

திருச்சி நகர் முழுமையும், திருவரங்கம், திருவானைக் காவல், திருவெறும்பூர் ஆகிய பகுதிகளிலும் முழுப் பொறுப்பேற்றுத் தென்மொழியை விற்பனை செய்ய ஒரு விற்பனையாளர் தேவை. தமிழ்நெஞ்சும், தொண்டுணர்வும், வினையாண்மையும் வாய்ந்த, ஓர் இதழுக்கு ஓர் உருபாமேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் உடன் விண்ணப்பிக்கவும்.

அமைச்சர், தென்மொழி.
கடலூர்-க.

# பண்டைப் புலவர்களின் உள உரம்

—புலவர். வி. பொ. பழனிவேலனார், பி. ஓ. எல்.

பாண்டியர், சோழர், சேரர் ஆகிய முத்தமிழ் வேந்தர் மூவரும் நந்தமிழ் நாட்டை நலிவின்றி ஆட்சி புரிந்த அற்றை ஞான்று, வண்டமிழ் வளம்பல பெற்று முத்தமிழ் என முழங்கி வந்துளது. தமிழ் மொழி ஒன்றினால்மட்டும் தமிழ் நாடு ஆளப் பெற்றது; வேற்று மொழி எதுவும் விரவிற்றிலது. எங்குந் தமிழ்; எல்லாந் தமிழ்; தன்னேரிலாத தனித்தமிழ் தனியாட்சி புரிந்தது. இன்று தனித்தமிழ் என்றாலோ, தூய தமிழ் என்றாலோ, ஏளனமாகப் பேசும் ஏமாளிகள் அன்றில்லை.

உலகம்போற்றச் செங்கோலோச்சிய சீர்சால் மன்னர்கள் சிறப்புடன் ஒருமொழி கொண்டே உலகாண்டனர். இன்றோ மும்மொழித் திட்டம் முன்வந்துள்ளது. அன்று தமிழர் அயல் நாடுகளுடன் வணிகம் செய்தனர். மொழிபெயர் தேயத்தாரும் ஈண்டுப் போந்து தங்கினர். தமிழ் மூவரசரும் கடாரம், ஈழம், சாவகம் முதலான நாடுகளின்மீது போர்தொடுத்து வென்றனர். வடநாடு சென்று ஆணவம் பேசிய அரசர்களை அடக்கினர். கனக விசயரைச் சிறைப்படுத்தினர்; கன்னுவர் நூற்றுவரை வென்று அடிப்படுத்தினர். தமிழ் வரலாறு கற்றோர் இவற்றை நன்கறிவர்.

எல்லா நாடுகளுடனும் தொடர்பு கொண்டும், போரிட்டும் ஆண்ட தமிழ் மன்னர்கள் தமிழ் மொழி ஒன்றின் உதவியாலேயே யாவும் நிகழ்த்தினர். இன்றோ மூன்று மொழி, நான்கு மொழி தேவை எனப் பேசப்படுகின்றது. தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருப்பதற்குத் தமிழ் தகுதியற்றது எனத் தருக்குரைக்கின்றனர்.

கோவன்புத்தூரில் உள்ள கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக வைத்துளோம்; உதவித் தொகையும் மாதம் முப்பது உருபா கொடுக்கிறோம்; பயில மாணவர் முன்வரவில்லை என்று கூறி எடுக்கப்பட்டுவிட்டது. ஏன்? "தமிழ் நாட்டுக் கல்லூரிகள் யாவற்றிலும் தமிழ்தான் பயிற்று மொழியென்றும், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கின்றவர்கட்குத் தான் தமிழ் நாட்டு அரசில் அலுவல் கொடுக்கப் பெறும்", எனவும் ஆணைபிறப்பித்தால் அனைவரும் கற்க முன்வருவார்கள். இந்தக் கண் துடைப்புப் பணியில் படித்தவர்கட்கே வேலைவாய்ப்பு கிடைக்காத போழ்து எவர் முன்வருவர்?

இவ்வாறு தமிழ் நாடு முழுமையும் தமிழ் பயிற்சி மொழி என்று செய்யும்படி அரசினர்க்கு எடுத்துக் கூறச் சட்ட மன்றில் எவரும் துணியவில்லை போலும்.

பண்டைப் புலவர்கள் அரசர்களை நல்வழிப்படுத்தி ஆட்சி புரியச் செய்யும் உள உரம் படைத்தவர்களாய் இலங்கினர். எதற்கும் அஞ்சாது உண்மையை எடுத்துரைக்கும் மன வலிமையுள்ள பாவலர் பலர் அன்று தமிழ்நாட்டில் வாழ்ந்தனர். தமிழ்நாட்டை நன்முறையில் ஆளும்படி அரசினர்க்கு அறிவுரை கூறித் திருத்தியும் செந்நெறிப்படுத்தியும் வாழ்ந்தனர். இன்றைய புலவர்களோ தம்பிழைப்புக் கருதியோ, பிற நலன்கள் பெறக் கருதியோ எதற்கும் அஞ்சி அமைந்து கிடக்கின்றனர்.

"தமிழுக்குப் பகைவர் தமிழாசிரியர்களே", என்னும் தலைப்பில் தென்மொழி விடை இதழில் வெளிவந்த கட்டுரை மிகப் பொருத்தமே! பெரும்பான்மையான தமிழாசிரியர்கள் தமிழுக்குப் பகையாகவே செயல்புரிகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையே. கல்லூரி உயர் பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆகியவற்றில் பணிபுரியும் தமிழாசிரியர் பலரும் இதற்கு விலக்கல்லர். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. முத்துச்சண்முகம் ஓர் எடுத்துக்காட்டாம். திருச்சியில் 5-12-65-இல் நிகழ்ந்த தனித்தமிழ் கழக முதல் மாநாடு ஒரு சான்றாம். யான் இங்ஙனம் எழுதுவது கண்டு தனித்தமிழ் நெஞ்சம் கொண்ட தமிழாசிரியர்கள் வருந்தல் வேண்டா. பெரும்பான்மை குறித்தே கூறினம். சில தமிழாசிரியர்கள், "எமக்குத் தமிழ்ப் பற்றுமில்லை; தனித் தமிழ்ப் பற்றுமில்லை; என்னவோ படித்தோம், வேலைபார்க்கிறோம்", என வெளிப்படையாகவே கூறமுன்வந்துள்ளமை நனியும் வருந்தற்பாற்றே. இதனையறிந்தே இவ்வாறு கூற முனைந்தோம். தமிழ் நெஞ்சங்கொண்ட பெரியோர்கள் பொறுக்க.

பண்டைத் தமிழக அரசு தமிழ்ப் புலவர்களை எத்துணைப் பெருமையுடன் நடத்தி வந்தது என்ற செய்திகளைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். இற்றைக்கோ தனித் தமிழ்பற்றியோ, தமிழ் முன்னேற்றம்பற்றியோ பேசினாலோ, எழுதினாலோ சிறைக்கோட்டம் என்ற நிலை உருவாகி வருகிறது. இத்தகைய அரசின்கீழ் தனித்தமிழ் தழைக்க வழியோ, வாய்ப்போ உண்டா?

நிகரமை மக்களாட்சி (Socialistic Democracy) நடைபெறுகிற தென்றும், இந்நாட்டு மக்கள் யாவரும் இந்நாட்டை யாளும் தகுதிக்குரியவர் என்றும் எழுத்துரிமை, பேச்சுரிமை, எல்லார்க்கும் சமமாக வழங்கப் பெற்றுள்ள தென்றும் வாய்ப் பறையறையும் அரசு என்ன செய்கிறது என்பதைப் பகுத்தறியும் பண்பினர் உன்னிப்பாகக் கவனிக்கவும்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்" என்று வள்ளுவனார் அன்று இயம்பினார். இன்று தமிழக அரசு தமிழ் வல்லுநரை, தமிழ்க் குழைப்பாரை, இந்தியக் காப்புச் சட்டத்தின்கீழ் சிறைப் படுத்திக் கொண்டு வருகிறது. இக்கடுஞ் செயலைச் சுட்டிக் காட்டித் தட்டிக் கேட்க இங்கு ஆளில்லை !

பண்டைக்கால மக்களைப் போன்று துணிவுடையோரும், பண்டைப் பாவலர் போன்ற உள உறுதி படைத்த புலவர் களும் இன்று இல்லையே! இடித்துரைத்து நன்னெறிப்படுத் தும் நல்லோரும் இலரே! தமிழ் நாட்டின் இன்றைய நிலை மையை என்னென்றுரைப்பது?

யாவரும் இன்று அடிவருடிகளாகவும், கால்கை பிடிப்பவ ராகவும், அடிதாங்கிகளாகவுமே உள்ளனர். பண்டைப் பாவலர் அரசர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழும் வாழ்க்கையினராகவே இருந்தனர். அவ்வாறிருப்பினும் அரசர்களிடையே குறைகண்ட விடத்துக் கடிந்துரைத்துத் திருத்தும் கடப்பாட்டில் வழுவினரல்லர். இன்றைய பாவலர் பலர் செல்வங் கொழிக்கும் சீர்மையராய் வாழ்ந்தும், அரசு இயற்றும் அறந்திறம்பிய வினைப்பாடு கண்டும் வாளாவிருக் கின்றனர். தமிழ்க்கு இழைக்கும் கேட்டினைக்கூடத் துணிந்து கூறித் தெருட்டும் திறம் சிறிதுமின்றி அஞ்சி ஒடுங்கி நிற்கின்ற னர். என்னே! இவர்களின் கால்வழிப் பண்பு.

பண்டைப் புலவர்கள் சிலரின் உள உரம் குறித்த இலக் கியச் சான்றினை அறியார்க்குத் தெரியத் தருதும் :

(க) ஆலத்தூர் கிழார் என்ற புலவர்பெருமான் அரசர் கள்பால் குற்றங்காணின் இடித்துரைக்கும் மனவலியுடைய வர். இவர் பாடிய தொகை நூற் செய்யுட்கள் ஏழு உள்ளன.

(உ) ஆவூர் மூலங்கிழார் : பரிசில் நீட்டித்த பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைக் கடிந்து கூறிப் பரிசில் பெறாது சென்றுவிட்டார். புறநானூறு கசகூ-ஆம் பாட்டு இதனைக் கூறும்.

(ங) ஔவையார் : இவர் பெண்பாற் புலவரேனும் மிக்க துணிவுடையார். புகழ்வார் போன்று பழித்துப் பாடுவதில் வல்லவர். அதியமானுக்காகத் தொண்டைமானுழை வாயில் சென்று பகை கடிந்து சந்து செய்து வைத்தார். கூரு-ஆம் புறப்பாட்டால் அறியப்பெறும்.

(ச) கபிலர் என்ற புலவர் பாரிவள்ளலிடம் நீங்கா ஈடு பாடுடையவர். வேந்தர் மூவர் பெரும்போர் செய்ய நினைந்து நால்வகைப் படைகளுடன் பறம்புமலையைச் சூழ்ந்தகாலை அவர்களைச் சிறிதும் மதியாது பாரியின் சிறந்த பண்புகளைப்

பாராட்டிப் பாடினர். இஃது க0-ஆம் புறப்பாட்டால் புலனாகும்.

(ரு) **கோவூர் கிழார்** : இவர் உவமை நயம்பெறப் பாடுவதிலும் மறச்செயல்களை விளக்குவதிலும் ஆற்றல் மிக்கவர்; அஞ்சா நெஞ்சினர். பகைமைபூண்டு பொருத சோழ அரசர் நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி இருவரையும் இடித்துரைத்துப் போரொழித்து ஒன்றுபடுத்தினர். நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்று உறையூர்க்கு வந்த இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றரென்று கருதிக் கொல்ல முற்பட்ட நெடுங்கிள்ளிக்கும் புலவர்களியல்பை எடுத்துக்கூறி அவரை உய்வித்தார்.

மலையமான் மக்களை யானையால் இடறிக் கொல்லத் துணிந்த கிள்ளிவளவனை நல்லுரைகூறித்திருத்திச் சிறார்களைக் காப்பாற்றினர். இவர் ஆற்றலையும், பண்புகளையும் சச-சசு ஆம் புறப்பாடல்களான் அறிக.

(சு) **தாமப்பல்கண்ணனார்** : இவர் மிக்க துணிவும், வலிவும் உள்ளவர். சோழன் நலங்கிள்ளியின் இளவல் மாவளத்தானுடன் வட்டுப் பொருவுழி, கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந்தானைச் சோழன் மகனல்லை யெனக்கூற அவன் நாணியிருந்தான். புறம் சங-ஆம் பாடல் இதனைப் புலப்படுத்தும்.

(எ) கடைக்கழகத் தலைமைப் புலவர் நக்கீரனார் இறையனர் என்ற புலவரை நெற்றிவிழி காட்டினும் குற்றம் குற்றமே என்று கூறிய மறம் பாராட்டற்குரித்தே. திருவிளையாடற் புராணம் இதனை விரித்துரைக்கும்.

(அ) கம்பநாடர். சோழ அரசன் ஒருவனைப் பாடிய எள்ளற் பாட்டொன்றையும் உங்கள் நினைவுக்குக் கொணர்வல்.

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ—உண்டோ?
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு! என்பதே அப்பாட்டு.

இங்ஙனம் பண்டைப் பாவலர்கள் பலரும் அரசர்களும் பிறரும் முறைதிறம்பிய ஞான்று துணிவுடன், அஞ்சாது இடித்துரைத்துத் தெருட்டி நல்லாற்றுப்படுத்தியமை தமிழிலக்கியங்களால் நன்கறியப்பெறும் செய்தியாம். இவற்றையெல்லாம் ஐயந்திரிபறக் கற்ற எமக்கு இற்றைப் புலவர்களின் தொடைநடுங்கித் தன்மையும், கோழைமையும், கால்பிடிக்கும் கயமையும், பிறரை வரம்பின்றிப் புகழும் மனப்போக்கும் இறும்பூதளிப்பனவாயுள்ளன. நம் தலைமுறைத் துணிவும், உரமும், மரமும் யாண்டு சென்றொளிந்தனவோ?

# குளிர்வித்தல் (REFRIGERATION)

அ. தெ. இரகோத்தமன்.

தோற்றுவாய்: அறிவியல் அறிஞர்கள் இயற்கை நிலைகளைத் தமது ஆய்வுத் திறனால் மாற்றி விடுகின்றனர். தமது விருப்பத்திற்கு ஏற்பக் குறிப்பிட்ட இடத்திற்குள் வெப்பத்தைக் குறைத்துக் கொள்ளும் குளிர்விக்கும் தொழிலும் அவர்தம் செயல்களுள் ஒன்றாகும். இத்தொழில் ஒருகாலத்தே பனிக்கட்டி உண்டாக்கமட்டும் பயன் பட்டது. ஆனால், இன்று உணவுத் துறையிலும், தொழில் துறையிலும் சிறந்த முறையில் வினையாற்றப் பரந்த அளவில் பயன் பட்டு வருகிறது.

குளிர்விக்கும் முறைகள்: பொதுவாக குளிர்வித்தலை (Refrigeration) வெப்ப நீக்கம் என்று விளக்கலாம். குறிப்பாகக் கூறின், குளிர்வித்தல் அறிவியலில் ஒரு கிளைப்பகுதி. சூழலை (Surroundings) விட வெப்பத்தைக் குறைப்பதும் பின்னர் அந்நிலையில் அதைக் காத்து வருவதும் குளிர்வித்தலில் அடங்கும்.

தற்போது இருமுறைகளில் 'குளிர்வித்தல்' நடைபெற்று வருகின்றது. ஒன்று "ஆவி அமுக்கு முறை" (Vapour Compression மற்றது "ஆவி உட்கவரும் முறை" (Vapour Absorbtionsystem)

ஆவி அமுக்கு முறை (Vapour Compression System :—

தற்காலத்தே பெரும்பாலான குளிர்விப்பான்கள் (Refrigerators) இம்முறையிலேயே வேலை செய்கின்றன. இம்முறையில் "குளிர்விக்கும் பொருளா"க (Refrigerating Agent) ஆவிப் பொருள் பயன் படுகிறது. இப்பொருள் எளிதில் ஆவியடைவதாகவும், குளிர்வித்தால் நீர்மநிலை (Liquid State) அடைவதாகவும் இருக்கிறது. மேலும் இப்பொருள் ஆவியாக்கியில் (Evaporator) ஆவியாக்கப்பட்டும், 'குளிர்வித்து நீர்மையாக்கும் கருவி'யில் (Condenser) நீர்மநிலை பெற்றும் சுற்றி வருகின்றது.

ஆவியாகுங்கால் இப்பொருள் தனது உள்ளுறை (Latent-heat) வெப்பத்தைக் குளிர்விக்க வேண்டிய இடத்திலுள்ள வெப்பத்தினின்றும் எடுத்துக் கொள்கின்றது. குளிர்ந்து நீர்மை அடையுங்கால் இப்பொருள் தனது உள்ளுறை வெப்பத்தைச் சுற்றுப் புறத்திலுள்ள ஊடகத்திற்கு (Medium) விட்டு விடுகின்றது.

இக்குளிர்விக்கும் முறையில் அடங்கியுள்ள பகுதிகள் அமுக்கி (Compressor), குளிர்வித்து நீர்மையாக்கும் கருவி (Condenser) ஏற்புத் தொட்டி (Receiver Tank), குளிர்விக்கும் பொருள் ஓட்டக் கட்டுப் படுத்தி (Refrigerant Flow Control) ஆவியாக்கி (Evaporator), உறிஞ்சு பாதை (Suction Line), தள்ளுபாதை (Discharge Line), நீர்மப்பாதை (Liquid Line), பரிமாற்றுக் கவாடங்கள் (Service Valves) முதலியவையாகும்.

ஆவியாக்கியினின்றும் உறிஞ்சுபாதை வழியாக வருகின்ற குளிர்விக்கும் பொருள் (Refrigerant) 'உறிஞ்சு பரிமாற்றுக் கவா

டத்தின் வழியாக (Suction Service Valve) அமுக்கிக்குள் செல்கிறது. அமுக்கி குளிர்விக்கும் பொருளை அமுக்குகிறது. அதனால் அழுத்தம் (Pressure) அதிகரிக்கிறது. கூடவே வெப்பமும் அதிகரிக்கின்றது. குளிர்விக்கும் ஊடகத்தின் (Condensing Medium) வெப்பத்தைவிட குளிர்விக்கும் பொருளின் (Refrigerant) வெப்பம் அதிகமாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

அமுக்கிகளுள், சுழற்சிவகை (Rotary) மாற்று இயங்குவகை (Reciprocating) மையத்தினின்று விலகும் விசை வகை (Clntrifugal) என மூவகைகள் உள. அமுக்கியினின்றும் 'தள்ளு பரிமாற்றுக் கவாடத்தின்' வழியாகவும் தள்ளுபாதை வழியாகவும் 'குளிர் விக்கும் பொருள்' குளிர்வித்து நீர்மையாக்கும் கருவியை அடைகிறது. அங்கு அது குளிர்ந்து நீர்ம நிலையை அடைகிறது.

குளிர்வித்து நீர்மையாக்கும் கருவிகள் இருவகைப்படும். ஒன்றில் நீரும் மற்றொன்றில் காற்றும் குளிர்விக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

குளிர்ந்து நீர்மநிலை அடைந்த 'குளிர்விக்கும் பொருள்' ஏற்புத் தொட்டியில் ஏற்கப்படுகிறது. இவ்வேற்புத்தொட்டி குறிப்பிட்ட அளவு நீர்மப் பொருளை நீர்ப்பாதை வழியே அனுப்புதற்கு இதிலுள்ள 'பரிமாற்றுக் கவாடம்' (Service Valve) பயனுகிறது.

நீர்மப் பாதையின் வழியே 'குளிர்விக்கும் பொருள்,' குளிர்விக்கும் பொருள் ஓட்டக் கட்டுப்படுத்தியை அடைகிறது. இக்கருவி தேவையான அளவு 'குளிர்விக்கும் பொருளை' ஆவியாக்கிக்குள் அனுப்புதற்கும், குளிர்விக்கும் பொருளின் அழுத்தத்தைக்குறைத்து அதன் மூலம் வெப்பத்தைக் குறைக்கவும் பயன்படுகிறது.

குளிர்விக்கவேண்டிய இடத்தினின்றும் வெப்பத்தை நீக்கக் 'குளிர்விக்கும் பொருளின்' வெப்பம் குறைவாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இக்கருவியில், தானியங்குவகை (Automatic) வெப்பத்தால் இயங்குவகை (Thermostatic Flow Control) என இருவகைகள் உள.

குளிர்விக்கும் பொருள் ஓட்டக் கட்டுப் படுத்தியினின்றும் வெளிப்படும்" குளிர்விக்கும் பொருள்" ஆவியாக்கிக்குள் செல்கிறது. ஆவியாக்கி (Evaporator) குளிர்விக்க வேண்டிய இடத்திற்குள்ளாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே 'குளிர்விக்கும் பொருள்' அங்குள்ள வெப்பத்தை எடுத்துக்கொண்டு ஆவி நிலை அடைகின்றது. இவ்வாறுகச் சுற்றிச் சுற்றி வந்து குளிர்விக்க வேண்டிய இடத்தினின்றும் வெப்பத்தை நீக்கிக் குளிர்விக்கின்றது.

**காப்புக் கருவிகள் :** அமுக்கியில் அழுத்தம் அதிகரித்தாலோ அல்லது குறிப்பிட்ட அளவைவிடக் குறைந்து விட்டாலோ அமுக்கி வேலை செய்யாமல் நிறுத்தி விடுவதற்கு "அழுத்தக் கட்டுப்படுத்தி" (Pressure Control) பயன்படுகின்றது.

குளிர்விக்க வேண்டிய இடத்திற்குள்ளாக வைக்கப்பட்டுள்ள "வெப்பக் கட்டுப்படுத்தி" (Thermostatic control) தேவையற்ற போது அமுக்கி வேலை செய்வதைத் தடுக்கின்றது.

# அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன்திட்டம்

(24–12-65 முதல் 31-1-66 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்.)

க. பத்து உருபாவகை.

| வரிசை எண் | முகவரி | உருபா | சான்றிதழ் எண் |
|---|---|---|---|
| 1. | திரு. ஆ. இராமகிருட்டிணன், பாளையங்கோட்டை. | 50 | 74-78 |
| 2. | புலவர் பொன்னையா, தொண்டி. | 20 | 79-80 |
| 3. | திரு. சே. பாண்டியன், பறம்புக்குடி. | 10 | 72 |
| 4. | ,, க. விவேகானந்தன், குடந்தை. | 10 | 73 |
| 5. | ,, இளங்கோ தமிழ் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி. | 10 | 81 |
| 6. | ,, மா. அழகப்பன், புதுப்பட்டி. | 10 | 82 |
| 7. | ,, கு. சுந்தரராசன், பட்டணம். | 10 | 83 |
| 8. | ,, செ. பெரியசாமி, பட்டணம். | 10 | 84 |
| 9. | ,, மா. அரங்கசாமி, கோவை-13. | 10 | 30 |
| | மொத்தம் | 140 | |

உ. *100* உருபாவகை.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பா. வளன் அரசு, பாளையங்கோட்டை. | 100 | 11 |
| 2. | ,, பெ. அரசு, மலாக்கா (மலையம்) | 100 | 12 |
| | மொத்தம் | 200 | |

ந. அன்பளிப்பாக வந்த வகை.

| | |
|---|---|
| திரு. கு. கிருட்டிணன், கோவை. | 2 |
| ,, இராமகிருட்டிணன், பாளையங்கோட்டை. | 2 |
| ,, சீனிவாசன், பெங்களூர்-4. | 1 |
| சேலம், கு. சங்கரன் வழி ;- | |
| ,, கு. சங்கரன், இரா. ஏழுமலை, பெ. இராமசாமி, க. சீனிவாசன், குரா. மலர்க்கொடி, க. சித்தையன். (தலைக்கு ஓர் உருபா மேனி) | 6 |

| | |
|---|---|
| ,, சு. மறைமலை, குடந்தை. | 2 |
| அவர்வழி :- வெ. கோதண்டம், வை. ஆத்துமலிங்கம், ஆ. ஆத்துமலிங்கம், (ஓர் உருபாமேனி) | 3 |
| திரு. அர. தேவராசன், சென்னை-43. | 2 |
| ,, அவர்வழி:- செ. பூபதி (உ. உருபா) கோ. சண்முகம் (ஓர் உருபா) | 3 |
| ,, அ. பாலசுப்பிரமணியன், சென்னை-1. | 10 |
| ,, இரா. கோவிந்தன், சென்னை-30. | 10 |
| ,, அ. கலியாண சுந்தரன், சென்னை-12. | 10 |
| ,, போடி. கலைக்கோட்டி, மேலூர் (மதுரை) | 1 |
| ,, குமுகு. பழகன், மிதிலைப்பட்டி. | 1 |
| ,, கு. சுப்பிரமணியன், சேலம்-3. | 1 |
| ,, மு. கிருட்டிணசாமி; தத்தனூர். | 10 |
| ,, தங்கராசு, பரோடா. | 1 |
| ,, ப. மு. பாண்டியன், அவிஞசி. | 1 |
| ,, அ. கிருட்டிணன், விரியூர். | 5 |
| ,, நன்முல்லை, மஞ்சப்புத்தூர். | 5 |
| ,, அ. தியாகராசன், சித்தோடு. | 2 |
| ,, பி. செல்லையா, மேலூர் (மதுரை) | 3 |
| ,, மா. நடராசன், ,, | 2 |
| ,, பெ. இராமசாமி. பெங்களூர்-17. | 5 |
| ,, அமீதுசா, ,, | 10 |
| ,, து. நடராசன், விழுந்தமாவடி. | 1 |
| ,, அர. தங்கராசன், பாலச்சேரிக்காடு. | 5 |
| ,, கு. வெள்ளைச்சாமி, செட்டிநாடு. | 5 |
| ,, எழிற்செல்வன், கோவை-3. | 1 |
| ,, அர. தங்கராசன், காரைக்குடி-4. | 1 |
| அவர்வழி:- (ஓர் உருபாமேனி) | |
| ,, தாமசு வில்லியம், இந்திரன், இராமச்சந்திரன், அலெக்சாந்தர், செந்தில் குமார், கலிய பெருமாள், முத்துச்சாமி. | 7 |
| ,, உமாபதி, காரைக்குடி-3. | 2 |
| அவர்வழி:- இராதாகிருட்டிணன், 1-25; தாமசு, 1-25; வீரப்பன், 0-50 | 3 |

ஓர் அன்பர், பெங்களூர்-15. 5
காரைக்குடி-பொறியியற்கல்லூரி
மாணவர்கள், வீர. அரங்கசாமி,
த. கிருட்டினன், சடகோபன். 20
,, மு. நடராசன், த. புத்தூர். 1
,, பெ. இராமசாமி, இடைப்பாடி. 1
,, கவி. முத்தம், பாளையங்கோட்டை. 10
,, வீ. இரா. சந்திரன், சென்னை-23. 3
அவர்வழி :-
(தலைக்கு ஓர் உருபாமேனி)
,, வே. சுந்தரம், இரா. சோமசுந்தரம்,
மு. அண்ணமலை, த. கேசவன்,
அ. மூர்த்தி, மு.இர. தல்ச,
து.ந. சாமி, த. நடராசன். 8
(தலைக்கு உ. உருபா மேனி)
,, மு. குணளன், இரா. சுகுண வல்லி,
இரா. வேங்கடராமன்,
ப. கிருட்டினன், ச. பசுபதி,
நா. லோ. மாணிக்கம். 12
,, சி.கே. செல்வராசன், சென்னை. 3
ஓர் அன்பர், சென்னை-1. 10
,, கு. அய்யாவு, நம்பியூர். 10
,, ச. கணேசன், கோவை-11, 2
,, சுகுண சேசாச்சலம், இராதா ஆறுமுகம் } சென்னை-54. 2
தமிழ் மன்றம் சாத்தனூர். 50
,, ந. மகாலிங்கம், அ.ப.க. 1
,, க.வெ. பாண்டியன்,
மலையம் (மலேசியா) 13-25
,, புலவர் ம. இராமசாமி, திருச்சுழி. 2-00
,, தமிழ்ப்பாதுகாப்புக் கழகம்,
மேட்டுப்பட்டித் தாதனூர்
(மணிவேலன் திரட்டியது) 5
அதன்வழி:- ந. செயபாலன். 2
மு. பச்சைமுத்து, க. செல்வக்
கண்ணன், வெற்றிச் செல்வி
தில்லைக்கரசி, (ஓர் உருபாமேனி) 4
,, மு. பெண்ணை நாடன், திருச்சி-
நாட்டியற்கல்லூரி, அவர்வழி :-
ப. சுப்பிரமணியன், மு. இராமக்
கிருட்டிணன்.
(தலைக்கு ந உருபாமேனி) 6
,, மு.ப, அன்பரசு, மா. காசி விசுவ

| | | |
|---|---|---|
| | நாதன், க. இராமச்சந்திரன், கோ. பாபு. (தலைக்கு 2 உருபாமேனி) | 8 |
| ,, | அர. அரங்கநாதன், கா. சிங்காரவேல், அர. கணேசன், இரா. பாலுச்சாமி, ப. சுப்பிரமணியன், பாலசுப்பிரமணியன், சி. வெ. சு. இரமணன், செ, இராமச்சந்திரன், சந்தானம், போ. தாரா பாக்கியம், நா. அங்கமுத்து, கி. சுந்தரேசன், நா. பழநிச்சாமி, ந கிருட்டிண சாமி, செ. பழநிவேலு, இரா. பொன்னுச்சாமி, (தலைக்கு ஓர் உருபாமேனி) | 16 |
| ,, | அ.வெ. சாமிக்கண்ணு, அரூர். | 1 |
| ,, | பொ. இராசகோபாலன், நெட்டவேலம்பட்டி | 2 |
| ,, | 'கோ' தமிழ் மாநில மின்கழகம். | 10 |
| ,, | ந.வெ. பன்னீர்ச் செல்வம், ஆலங்கரை. | 10 |
| ,, | சுப்பிரமணியன், பூனா-3. | 5 |
| ,, | இரா. சுந்தர வரதன், சேலம்-1. | 2 |
| ,, | பா. தமிழ்ச் செல்வன், சென்னை-7. | 1 |
| | சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும்— செ. வெற்றிவேந்தன் வழி— (முதல்முறை) | 30 |
| ,, | பில்வ மங்களன், மங்களூர். | 10 |
| ,, | அரங்க சுப்பிரமணியன், ப. சுக்கம்பட்டி. | 1 |
| ,, | வெங்கண்ணன், திருவல்லிக்கேணி. | 1 |
| ,, | ஆரோக்கியராசு, புதுவை. | 1-50 |
| ,, | சா. பொன்னுசாமி, மாயனூர். | 10 |
| ,, | செ. வெற்றிவேந்தன் வழி.- பச்சையப்பன் கல்லூரி விடுதி மாணவர்கள்-இரண்டாம்முறை | 20 |
| ,, | இரா. பெரியண்ணன்; புதுப்பட்டி. | 1 |
| ,, | மா. அமிர்தலிங்கம், அண்டர்பந்தி தஞ்சை) | 1 |
| | அவர்வழி:- கை. இராதா | |

கிருட்டிணன், ப. ஆறுமுகம்,
இர. முனிசாமி.
(தலைக்கு ஓர் உருபாமேனி) 3
,, கா. அரங்கசாமி,
வள்ளியம் பாளையம். 5
மறைமலையடிகள் மன்றம்,
புன்செய் புளியம்பட்டி. 10
அதன்வழி:- ம. ஞானம், அவினாசி 10
,, திரு. இரா ஆறுமுகன்,
சு. பாலசுப்பிரமணியன்.
(தலைக்கு ௫ உருபாமேனி) 10
,, சுப்பையன். 1
,, சென்னை செ. மாணிக்கவாசகன் } 4
அ. வெ. மழலைச்செல்வன் }
முத்தமிழ் மன்றம், கோவை.
தொழில் நுட்பக் கல்லூரி 50
சிவகங்கை அன்பர்கள் :
மரு. வீரபத்திரன், க. தூய
அடியான் (தலைக்கு ௩௩ மேனி) 66
முத்து. இளங்கண்ணன்,
ச. கணேசன்.
(தலைக்கு ௧௭ மேனி) 34
திருவாட்டி. கி. பொன்னம்மாள்,
கோவை-௫. 2
பட்டணம். செ. சுப்பிரமணியன் வழி:
திரு. ந. வேலப்பன், இரா. சுந்தரம்,
கு. நடேசன், இரா. இராசு,
பெ. வெங்கடாசலம், சின்னப்பன்,
வி. ஒ. அண்ணாமலை, இலிங்கப்பன்,
அ. செகநாதன், அ. இராணி,
கா. சிகாமணி.
(தலைக்கு ஓர் உருபா மேனி; 11
,, இளங்கோவன், இரா. பெரியசாமி
(தலைக்கு ௨ உருபா மேனி) 4
,, இரா. நைனாமலை, 5
,, குமார. தண்ணொளியன்,
கண்ணமங்கலம், 1
,, சயபதி, கடலூர்-௩. 1

மொத்தம் 640-75

(அடுத்த பக்கம் பார்க்க)

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம் :

| | | |
|---|---|---|
| க. | கடன் தொகை. பத்து உருபா வகை. | 140-00 |
| உ. | ,, நூறு ,, | 200-00 |
| ரு. | அன்பளிப்புத் தொகை. | 640-75 |
| | மொத்தம் | 980-75 |
| | முன் மொத்தம் | 2762-00 |
| | தொகு மொத்தம் | 3742-75 |

இதில், கடன் சான்றிதழ் எண், அ, கூ. இரண்டுக்குமுரிய தொகைகள் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்பெற்றன. அவை அன்பளிப்பாகக் கொள்ளப் பெறும். ஆக,

இதுவரை வந்த மொத்தத் தொகையின் விளக்கம் :

| | | |
|---|---|---|
| க, | கடன் தொகை: பத்து உருபாவகை: | 810-00 |
| உ. | ,, நூறு ,, | 1200-00 |
| ரு. | அன்பளிப்புத் தொகை: | 1732-75 |
| | | 3742-75 |

குறிப்பு:—

அ) அன்பர் சிலர் விடுத்த தொகைகளுக்கான முகவரிகள் வாராமையால் அவை இப்பட்டியலில் சேர்க்கப்பெறவில்லே. உடனே முகவரிகளை விடுக்குமாறு அவர்களை வேண்டுகின்றோம்.

ஆ) இப்பட்டியலில் கண்ட கடன் தொகைள் யாவற்றினுக்கும் உரிய சான்றிதழ்கள் 7–2–66 அன்று விடுக்கப்பெற்றன. அவற்றில் இணைந்துள்ள கிழிப்பங்களில் கையெழுத்திட்டு' அவற்றை உடனே அலுவலகத்திற்கு விடுத்துவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இ) நாம் திட்டமிட்டுள்ள தொகை முழுவதும் திரட்டப் பெற்றபின் இத்திட்டம் நிறுத்தப்பெறும், அதுவரை அன்பர்கள் இம்முயற்சியில் விரைந்து ஈடுபடுவார்களாக.

ஈ) தென்மொழி அச்சக அமைப்புக்கு உதவுவது தமிழ்க்கும் தமிழர்க்கும் தமிழகத்திற்கும் உதவுவதாகும். அன்பர்கள் இவ் வாய்ப்பைத் தவருது பயன்படுத்திக்கொள்ள வேண்டுகின்ரேம்.

உளவியல் :

# அச்சமே கீழ்மைக்கு அடிப்படை

'மன்றிலாடி'

மாந்தன் முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுவதில் அச்சம் முதலிடம்பெறும். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். ஒரு நீகிரோப் பணிப்பெண் தன் அடங்காப் பிள்ளை ஒருவனை அடக்க, இருட்டறையில் தள்ளி உள்ளே பேய் இருக்கிறதென்று சொல்லிக் கதவைப் பூட்டிவிடுவாளாம். அப்பையன் இருட்டைக் கண்டால் நடுங்கினனும். ஒவ்வொரு தடவையும் இருட்டில் போக நேருங்காலத்து வெளிச்சங் கொண்டு அங்குப் பேயே இல்லையென்று மெய்ப்பிக்கத் தந்தைக்கு வெகுநாள் பிடித்ததாம். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டுமாதலின், சிறு குழந்தைகளுக்கு அச்சங் காட்டுதல் மிகக் கேடு விளைப்பதாகும்.

தற்காப்புக்காக அச்சம் தேவைபோல் தோன்றும். ஆயினும் உண்மை நேர்மாறானது. கொடிய விலங்குகளும் பாம்பு போன்ற உயிரிகளும் அச்சமின்றித் தம்வழிச் செல்வோரை அணுகுவதுமில்லை; தொல்லை கொடுப்பதுமில்லை. சற்று எண்ணிப்பாருங்கள். அஞ்சி ஓடுபவர்களைத் தாம் நாய் துரத்திக் கடிக்கும். பிற விலங்குகளும் அப்படித்தான். விலங்கின ஆராய்ச்சியாளரின் பட்டறிவும் அதுதான். அச்சமடைந்த மாந்த இனத்தவரிடமும், விலங்குகளிடமும் ஒரு வகை நாற்றம் தோன்றி வலுத்துக் காற்றோடு கலந்து வீசுகிறது. அந்நாற்றம் விலங்குகட்கு அருவருப்பு தருவது; சினமெழச் செய்வது. மோப்பம் பிடிக்கும் திறன் பல நாய்களுக்கும் விலங்கினங்களுக்கும் உண்டு. அச்ச நாற்றம் தாக்கும் பொழுது அவை வீறுகொண்டு பாய்கின்றன. இளங்குழந்தை அச்சமறியாது. குழந்தை விலங்குகளும் அவ்வாறே. தீங்கு நெருங்கும்பொழுது, தாய் விலங்கு தன் குழவியை அவ்விடமே பதுங்கவைத்துத் தான்மட்டில் ஓட்டம் பிடிக்கும். தாக்கும் விலங்குக்கு அச்சமற்ற குழவியைப் பிடித்துக் கொல்ல இயல்வதில்லை. குழந்தையைக் காக்கும் நோக்கத்துடன், தாய் தன் அச்ச நாற்றத்தைப் பரப்பித் தாக்கும் கொடிய உயிரியைத் தொலைவிற்கு இழுத்துச் சென்றுவிடும்.

அமெரிக்க நாட்டினர் ஒருவர், தன் நண்பரின் நாயிடம் அச்சங் கொண்டவர். அந்த நாயின் இருக்கை தெரிந்தால் இருநூறு அடிக்கப்பால் விலகிச் சென்றுவிடுவாராம். நண்பனின் அச்சமே நாய் துரத்துவதற்குக் காரணமென்று அறிவித்த பிறகு, அந்நண்பர் அமைதி மேற்கொண்டு சிறிது

சிறிதாய்ப் பழகி நாயைத் தனக்கு நட்பாக்கிக் கொண்டார். ஒரு நாள் வேறிரு நாய்கள் அவரைத் தாக்கியபொழுது, நட்புக் கொண்ட நாய் ஓடிவந்து தாக்கிய நாய்களைக் கடித்துச் சீறித் துரத்தி நண்பரை விடுவித்ததாம்.

வேட்டைக்காரர் ஒருவர் பல வேட்டை நாய்களுடன் மான் வேட்டையாடினார். குதிரைமீது செல்லுகையில் திடீரெனக் குனிந்து பார்த்தார். ஒரு பச்சிளங்குட்டிமான் பாதையருகில் கிடந்தது. அதைக் கவனியாது ஐந்தாறு நாய்கள் முன் சென்றுவிட்டன. அந்தக் குட்டிமானைத் தூக்கி அணைத்துக் கொண்டார். குட்டிமானுக்கு அச்சமில்லாததால் அச்ச நாற்றம் எழாது நாய்களிடமிருந்தும் தப்பிற்று.

நாற்றம் எழுவது பலர் அறியக்கூடாததாயினும், அச்சம், சினம் போன்ற மனஅதிர்ச்சி வேறுபாடுகள் ஏற்படுகையில் நம் உடலிலும் படபடப்பு, குருதிக் கொதிப்பு, செறிமானத் தடை, நாவுலர்தல் போன்ற தொல்லைகள் உண்டாவதை உணர்கிறோம். அச்சத்தினால் நமது வினைப்பாடுகள் தடைப்படுவதோடு உடல் நலனுக்கும் ஊறு நேர்கிறது. அச்சங்கொள்ளி, தனக்கும் பிறர்க்கும் பயனற்றவனாகிறான்; பிறர் இரக்கத்திற்கும் ஏளனத்திற்கும் இலக்காகிறான்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை என்பார்கள். பழிக்கஞ்சுதல், கரிசுக்கஞ்சுதல், நோய்க்கஞ்சுதல், வறுமைக்கஞ்சுதல் போல்வன அஞ்சத்தக்கனவே எனலாம். தமது உள்ளுணர்வுக்கு மாறுபடாதிருந்தால் நடக்கை விரும்பத்தக்கது. ஆயினும் இவ்வினங்களில் அதிர்ச்சியுறும்நிலை நோய் ஒன்றுக்கு மட்டில் சாலப் பொருந்துவதாகும். செய்யத் தகாதனவற்றைச் செய்யாதொழிதல் அச்சந் தருவதன்று. பொதுவாக வாழ்க்கையின் பள்ளம்படுகுழிகளையும் இடையூறுகளையும் பழுதுறாமல் கடக்கத் துணிவைக் கைக்கொண்டு செல்லல் இன்றியமையாதது.

நான் புதியவாக இரண்டொரு நூற்கள் எழுத முற்பட்டேன், நண்பர் ஒருவர் எவரேனும் தவறுகண்டு சாடினால் தாக்கினால் என்செய்வது, முயற்சி வீணாகுமே என்று எனக்குச் சிறிது அச்சமூட்டினார். என் மனப்போக்கு எதிர்வழியில் விரைந்து முன்னேறிற்று. அச்சங்கண்டதற்கு மாறாகப் பாராட்டு குவிந்தது. என் நண்பரின் எச்சரிக்கையைக் கைக்கொண்டிருந்தால், ஒரு விளக்கு மறைத்துக் கவிழ்க்கப் பட்டிருந்திருக்கும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

அச்சக அமைப்புக்கு உடனே உதவுங்கள்.

செய்தி :

# தமிழர் திருமணம்.

தென்மொழி அன்பரும் தமிழ்த்தொண்டரும்
சோமண்டா புதூர் நிலக்கிழார் ந மருதமுத்து அவர்களின்
திருமகனும் ஆன திருநிறைசெல்வன்

**ம. இராமசாமி, பி. ஏ,**

அவர்களுக்கும்
செக்கிடிப்பட்டி நிலக்கிழார்
த. கோவிந்தராசன் அவர்களின்
திருநிறைசெல்வி

**சந்திராவுக்கும்**

திருவள்ளுவர் ஆண்டு 1997 சுறவ(தை)த் திங்கள்
20 ஆம் பக்கல் அறிவன் கிழமை அன்று

தென்மொழி ஆசிரியர் உயர்திரு. பெருஞ்சித்திரன் அவர்கள் தலைமையில் திருச்சி மாவட்டம் பெரும்பலூர் ஊராட்சி ஒன்றிப்பு ஒதுக்க(சத்திர)த்தில் தமிழர் முறைப்படி திருமணம் நடந்தது. ஆசிரியர் திருமணமுறை ஏற்பட்ட வகையினையும், அம்முறையுள் கரணங்கள் புகுந்த நிலைகளையும், திருத்தப்பெற்ற திருமண நிகழ்ச்சியின் தேவையையும், இல்லற வாழ்வுச்சிறப்பையும் விளக்கிப்பேசி மணமக்களை வாழ்த்தித் திருமணத்தை முடித்து வைத்தனர் அதன் பின் தென்மொழி உறுப்பாசிரியர், திரு ம. இலெனின் தங்கப்பா எம். ஏ. பி. டி. அவர்களும் திருக்குறள் பெருமாள் அவர்களும் மணமக்களை வாழ்த்திச் சொற்பெருக்காற்றினர்

இறுதியில் மணமக்கள் தென்மொழியின் அரிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டி அதன் அச்சக அமைப்புக்கென உருபா நூற்றொன்றை ஆசிரியரிடம் நன்கொடையாக வழங்கினர் அத்தொகை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப் பெற்றது

---

## நன்றி.

நான் சிறையிலிருந்த காலை என்னை அடிக்கடி வந்து பார்த்தும், வேண்டிய பொருள்களை அளித்தும் எனைப்புரந்த உயர் திரு. கோவேந்தன் (கவிஞன் ஆசிரியர்) அவர்களுக்கும், பிற அன்பர்களுக்கும், மடல்வழி என் நலங்கேட்டெழுதிய தமிழ் அன்பர்களுக்கும், வெளியிலிருந்து தென்மொழிக்கும் குடும்பத்திற்கும் பல்வாறும் உடனிருந்துழைத்து உறுப்பாசிரியர்க்குத் துணையாயிருந்த பேரன்பினர் யாவருக்கும் என் உளமார்ந்த நன்றியினைச் செலுத்திக்கொள்ளுகின்றேன்

பெருஞ்சித்திரன்.

---

கற்பனை ஊற்று !

# விடுதலை . . . . !

மெய்ம்மைப்பித்தன்.

இந்த நீல மலைக்கும் நிலத்துக்கும் என்ன தொடர்பு ?
மலை அடி நிலத்தில் ஊன்றியது.
மலைமுடி வானைத் தடவுவது
என் உலகத் தொடர்பும் அப்படித்தான்.
நிலத்தில் ஊர்கின்றன என் கால்கள்.
வானில் பறக்கின்றது என் உள்ளம்
கைகளை நீட்டினால் கிடைப்பது, கல்லோ. மண்ணோ
மனைவியோ, மக்களோ !

நெஞ்சை நீட்டினால் கிடைக்கும் இன்பம் கொஞ்சமா?
பஞ்சுபஞ்சாய் அலையும் வெண்முகிற் கூட்டம்!
அதன் மென்மை!
பனித்துளி கப்பிய கருமுகில்!
அதன் அழுத்தம்.
கடலுக்கு அடியில்! படர்ந்த பாசிகள்! அடர்ந்த
மலைத்தொடர்!

எண்ணற்ற மீனினம் ... ... இன்னும் வேறு வேறு.
கதிரவன் என்னுள்ளத்தில் வட்ட மிடுகின்றான்.
நிலவு என்நெஞ்சில் உலாவருகின்றது.
புல்லிய எண்ணங்கள் புகைகின்ற செயல்கள் யாவும்
பொடிப்பொடியாய்ப்போகும்
ஏழைகள் அழுகின்ற கண்ணீர் அருவியாய்க்கொட்டும்!
தாயில்லா மகவுகளின் ஓலக்குரல் இடியென முழங்கும்!
கணவரை இழந்த பெண்டிரின் நெஞ்சச் சுமையைத்
தாங்கிக்கொள்ளத் துடிக்கின்றேன் !
அலைகின்றது நெஞ்சம் !
நானென்ன உலகின் ஒரு பொருளா ?
ஊத்தைச் சதை !
காற்றால் ஊதிச் சுருங்கும் நெஞ்சக்குலை !
அடுக்கி வைக்கப்பட்ட எலும்புக்கூடு !
வெயர்வை கசியும் தடித்த தோல் !
முளைத்த மயிர்கள் !
ஒரே அருவருப்பு !
இவற்றின் உள்ளிருப்பது !
நாற்ற நீர் ஊற்று ! அடிக்கடி திரளும் மலக்குவியல் !
ஒழுகு மூக்கு ! பீளைக்கண்கள் ! குறும்பீக்காதுகள் !
ஊற்றுநீர் தேங்கும் நாற்றப் புனல் வாய் !

இழிவு ! இழிவு ! ஒரே இழிவு !
இவற்றை வளர்க்க எதையும் கொட்டிக்கொள்ளும் மிடா
வயிறு !
இவை பெரிதா ?
இவற்றில் சிறை வைக்கப்பெற்ற இன்னுயிர்; நன்னெஞ்சம்!
விடுதலை உண்டா இவற்றிற்கு !
துடிக்கின்றேன். துவள்கின்றேன் !
நான்கு மணிக்கொருமுறை தீக்கனல் எழுப்பும் வயிற்று
விலங்கு,
இதில் கொட்டித் துருத்த மலை மலையான உணவுக்கு
அலையாத இடம் அலைகின்றேன் !
இழிவு இழிவு ! ஒரே இழிவு !
தூய்மை உயிர்க்கும் வாய்மை உளத்திற்கும் விடுதலை
உண்டா!
அவ்விடுதலை இறப்பா !
எதுவானால் என்ன !
இறப்புக் கசப்பா !
அப்பொழுது வாழ்வு இனிக்க வல்லவா வேண்டும் !
வாழ்வு கசக்கின்றதேன்?
கசப்பிலா வாழ்வு இறப்புதானே !
எத்தனை நாளைக்கு இருக்க விரும்புவாய் !
ஒரு நாள் நீ விரும்பாத இறப்பு வருமல்லவா ?
வந்து, உன் வீட்டுக்கதவை இடிக்குமல்லவா ?
அதைத்துரத்த உன்னால் முடியுமா ?
போயொளிந்து கொள்ளப் புகலிடந்தான் ஏது ?
வேண்டாத விருந்து இறப்பு !
அதற்கு நீ உன்னை நெருக்கிக்கொள் !
உடல் புண்களை அழி !
உயிர்ப் பறவை பறந்து திரியட்டும் !
உளக்குயில் பாடித்திரியட்டும் !

*

---

## பிழை திருத்தம்.

ஏழாம் பக்கம் 7 ஆம் வரியில் ஆட்சித்தலைமையர்களுக்கும் விடுக்கப்பெறும் என்பதனை, ஆட்சித் தலைமையர்களுக்கும் பிறநாட்டுத்தலைவர்கட்கும் விடுக்கப்பெறும் என்றும் அதே பக்கம் கீழிருந்து பத்தாம் வரியில் அஃது ஒரு கொடுமையான இடம் என்றும், பக்கம் 9, 2-ஆம் கலம் 23-ஆம் வரியில் என்ற கருத்து ஏற்பட்டது என்றிருப்பதை என்ற கருத்து எனக்கு ஏற்பட்டது என்றும், பத்தாம்பக்கம் 5-ஆம் வரியில் புகுந்து என்றிருப்பதை, புதுந்தது என்றும் திருத்திப்படித்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

# தென்மொழி அச்சக அமைப்புத் திட்டம்

பேரன்புடையீர் !

தென்மொழி அச்சக அமைப்புத்திட்டத்திற்கு நீங்கள் நல்கி வரும் பெருந்துணை கண்டு நாங்கள் மகிழ்ச்சியோடும் நன்றியுணர்வோடும் எங்கள் வழியில் பேரூக்கமும் பெருமுயற்சியும் கொண்டு நடைபயிட முனைந்துள்ளோம். இருப்பினும் தென் மொழி முழு அளவில் தன்னை நிலைப்படுத்திக்கொள்ளப் போதுமான தொகை இன்னும் சேரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் திரண்ட தொகையுடன் கையிலிருந்த தொகைகளையெல்லாம் போட்டு அச்சுப்பொறியொன்றும் கம்பி தைப்புப் பொறியொன்றும் வாங்கப்பெற்றன. இனி எழுத்துகளும் வெட்டுப்பொறியும் கட்டாயம் வாங்கியாகல் வேண்டும் இவ்விரண்டிற்கும் ஏறத்தாழக்குறைந்தது ஐயாயிரம் உருபா தேவைப்படும். இவ்விரண்டு பொறிகளையும் வாங்கிய பின்னர்தான் அச்சக அமைப்புத்திட்டம் முடிவுறும்.

இத்தொகையினை, நம் நாட்டில் உள்ள செல்வர்களிடமோ தொழில்துறை உரிமையாளர்களிடமோ, பெறுதல் என்பது கல்லாவில் பால் கறப்பது போன்ற கற்பனை நினைப்பாகும். எனவே ஆங்காங்குள்ள மாணவர்களும் தமிழன்பர்களும், தமிழ் வளர்ச்சிக் கழகங்களும் மேலும் மேலும் இப்பணிக்குத் துணை நின்று உதவுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். ( ஆ-ர் )

---

## பிழை திருத்தம்.

செந்தமிழ்ப்பாவை: முதல் பாட்டு:5 ஆம் அடியில் ' மாயப் புரைசான்ற ' என்பதை மாயப் ' புரைசால் என்றும்,

4-ஆம் பாட்டு 3-ஆம் அடியில் 'பூமுன் மாலை' என்பதை ' பூமுன்னுள் மாலை ' என்றும்,

5-ஆம் பாட்டு 2-ஆம் அடியில் ' றியம்பா ' என்பதை ' றென்னு ' என்றும்,

9-ஆம் பாட்டு முதலடியில் ' படுங்காண் ' என்பதை ' படுங்காண் நம் ' என்றும்,

10-ஆம் பாட்டு முதலடியில் ' தமிழ் வயலூர் ' என்பதை ' தமிழ் வயலுள் ' என்றும், நான்காமடியில் ' போமாயின் ' என்பதை ' போவோமேல் ' என்றும் 7-ஆம் அடியில் ' கிடந்தாலும் ' என்பதை ' இடந்தரலும் ' என்றும்,

13-ஆம் பாட்டு முதலடியில் ' தமிழர்களின் ' என்பதை ' தமிழரின் ' என்றும், 4-ஆம் அடியில் ' பெருமை ' என்பதை ' பெருமையும் ' என்றும், 20-ஆம் பாட்டு மூன்றும் அடியில் ' கோல்வழியால் ' என்பதை ' கோல்வலியால் ' என்றும்

21-ஆம் பாட்டில் ' வடவர் மொழி ' என்பதை ' வடக்கு மொழி ' என்றும்,

22-ஆம் பாட்டில்' கருதி ' என்பதை ' கருதியே ' என்றும் படிக்க வேண்டுகின்றோம். பிழைகளுக்கு வருந்துகின்றோம்.

---

# பாட்டரங்கம்

## போலித்தமிழர் !

ப. தமிழ்மணி, கரந்தை.

என்னேடி நற்றோழி இவரோ தமிழ்புரப்பார் ?
புன்வயிறு தாம்நிரப்பப் போயடிமை பூணுபவர் !

பள்ளியறை மேடைதனிற் பைந்தமிழ்க்கே உருகிடுவார் !
கொள்ளியெரிப் பகைவரிடை நள்ளிரவில் புகுந்திடுவார் !

மறைமலையைத் தனித்தமிழை வாயினிலே வாழ்த்திவிட்டுக்
கறைபடிந்தார் வல்லாகங் காரிருளிற் றுந்தோய்வார் !

இலக்கியத்தை இலக்கணத்தை ஏந்திமிகப் புகழ்ந்திடுவார் !
கலக்கிஉயர் தமிழ்சிதைக்கும் கயவர்க்கே துணைபோவார் !

தமிழ்மொழியே உயர்வென்பார் ; தம்வாழ்வை வளமாக்க
உமிழெச்சி லாம்பகைக்கே உவட்டாமற் பாய்விரிப்பார் !

கட்டிதரு கரும்பன்றோ கன்னிமொழி தமிழென்பார் !
பட்டிமன்றம் புக்கபின்னை பரத்தையராய் மாறிடுவார் !

இனம்வாழல் நோக்கென்பார் ; இழிவயிறு நிரப்புதற்குப்
பிணம்போல உணர்வழிந்து பெரும்பகைவர்க் குறவாவார் !

முரசுகொட்டி ஆண்டதெல்லாம் முழக்கிடுவார் மேடையினில்
அரசுகொட்டும் பொருட்குவைக்கோ அடிவருடித்
தாங்கிடப்பார் !

பாவாணர் புகழொளியைப் பரவுவார் போல்நடித்துக்
காவாத நாவுடையார் கால்வழியைத் தோய்ந்திடுவார் !

என்னேடி நற்றோழி இவரோ தமிழ் புரப்பார் !

ஃ ஃ ஃ

## எழுக பெரும்படை !

மு. நருஅவன், செட்டிகுளம்.

எழுக பெரும்படை இன்றமிழ் காவா திணித்துயின்றால்
விழுமத் தமிழென வீடிலா இந்தி கொடுங்களையால்
அழுக்கத் தழுத்திஅறமிலா ஆட்சி நடத்திடுமால் !
எழுகவின் றுய்த்தமிழ் எம்முயிர் என்றே இவணுரைத்தே !

இவணுரைத் தேற்க ! இலக்கணச் சீர்மையி லிந்தியிடர்
துவச்சிய காலைத் தொலைக்கவென் றார்த்தெழு தூய்தமிழர்
தவமிகு செல்வர் டீசுமலை யாளர் தனித்தமிழே
தெவிட்டா தெனக்காண் ! மறைமலை யார்தந் துணிவதுவே !

துணிவு தனைக்கொள் தொலைகூற்ற முன்னருந் தோள்புடைத்தே
துணிப்பத லாற்பின் தொடர்பகை நூறித் தொலைத்திடுமுன்
துணிவ திலைவெஞ் சினமெனத் தண்டமிழ்க் காளையரும்;
அணிவ திலைபொன் மணியென மாதருஞ் சூழுகவே !

தமிழே கருத்தாந் தமிழரின் கண்ணுந் தலைமொழிகள்
தமிழே பெறுநற் றவமக மற்றதன் பிள்ளைகளாம் !
அமிழ்தே யனைய வடிப்பமை யுண்மை யகமகிழ்த்த
இமியுஞ் சிறப்பிலா இந்திவந் தாளல் இழிநிலையே !

இழிதகை யெண்ணத் துடனுழை இந்தி வடக்கருடன்
இழிதகை யெண்ணத் துடனதை யேற்றுச் செயல்துவக்க
வெழுமட வாளர் இடக்குறு போக்கே செயல்படுமேல்
விழுமிய வெல்லாந் தமிழகம் விட்டே விடைபெறுமே !

நிலைபெற வேண்டின் செயற்கரி தாய செயல்விளைத்தே
நிலைபெறு ஞாலத் திசையலால் மற்று நிலையிலதால்
தலைமையாந் தமிழ்த்தாய்க் காப்பலா லின்று தலைப்பணிவே
றிலையதாற் செய்க வினிதினி தஃதி னினிதிலையே !

ஃ ஃ ஃ

## அடிமை வாழ்வு !

தங்க அரசு, அண்ணாமலைநகர்.

அடிமைமிகும் நம்வாழ்வில் அத்தனையும் இன்னல்கள்.
பிடியென்பார் அடையென்பார் பிறராட்சிப் போக்கென்னே !
தடிகொண்டே தாக்குகின்றார் ; தடுத்துநின்றால் சுடுகின்றார் !
கொடிகட்டி வாழ்ந்தவர்நாம், கொடுமையிலே மடிகின்றோம் !

அன்னையினைச் சிதைப்போரின் அடிவருடிப் புகழ்பாடும்,
தன்னுள்ளம் இல்லாதார் நம்முடனே பிறந்துவிட்டார்
கண்ணில்லா மாக்கள்தாம் என்செய்ய அவர்தம்மை !
பொன்றுமே சுடுகாட்டுப் புழுதியெனப் போமந்தோ !

ஃ ஃ ஃ

## வெல்ல வாரீர் !

கயற்கண்ணன், மணக்குடி.

தமிழ்நாட்டில் பிறந்தவரே ! தொல்லுலகில் மூத்தவரே !
அமிழ்தான தமிழ்மொழியை அழித்துவிட எண்ணுகிற

ஆட்சியதன் சூழ்ச்சிதனை வென்றிட வாரீர் !
ஆர்த்தெழும்பும் போர்ப்படையில் ஒன்றிட வாரீர் !

எம்மொழிக்கும் அன்னையென ஏற்றமுடன் வாழ்ந்திருந்த
நம்மொழிக்கோர் இன்னலெனில் நமக்கினிமேல் உறக்கமிலை ;

பொங்கிவரும் வெள்ளமெனப் பாய்ந்திவண் வாரீர் !
போர்ப்பரணி பாடிடுவோம் சேர்ந்துடன் வாரீர் !

இந்தியெனும் மந்திமொழி ! இலக்கணமே அற்றமொழி
நந்தமிழுக் கீடதுவோ ? நமையாளத் திறனுளதோ ?
இந்நிலை மாற்றிடவே எழுந்துடன் வாரீர் !
எதிர்த்திடுவோர் எவரெனினும் அழித்திட வாரீர் !
வானொலியில், அஞ்சலதில், தொடர்வண்டி நிலையமதில்
தானொலிக்க மெல்லவந்து தமிழரசைப் பிடித்ததிந்தி !
வீழ்த்திடவே வேண்டுமதை விரைந்திவண் வாரீர் !
வெறிபிடித்தோர் முகத்தினிலே உமிழ்ந்திட வாரீர் !

ஃ ஃ ஃ

**நெடுமொழி !** — **புதுவை-பொன்னித்துறைவன்.**

தாய்த்தமிழ்ப் பற்றிலர் ! ஆய்ந்தறி உணர்விலர் !
ஏந்திய பொறுப்பை என்றும் நினைக்கிலர் ;
மானம் மதித்திலர் ! மண்டலைப் பிறவியர்
இந்நாள் ஆள்வோர் இயற்றிய கொடுங்கோல்
ஆட்சியில் நிகழ்ந்த ஆருயிர் மொழிப்போர்
காட்டுத் தீயாய்ப் பரவிய காலை
மூண்ட எழுச்சியில் முனைத்த ஊர்வலம்
பெருங்கடல் வெல்லப் பொங்கிய மறவர்
விரைந்த காலை வெறிவே ழம்போல்
எடுத்த படையும் வெடித்த முழக்கும்
படைத்த பாங்குக் கஞ்சி ஆள்வோர்
செந்தலைக் காவற் சிறுபடை யனுப்பி
வந்தபின் வெள்ளம் அணையிடச்செய்ய
ஒருவன் " நுங்கள் தலைவர்யார் நுவல்வீர் "
என, யாம் அனைவரும் தமிழர் ; எங்கள்
இனத்தில் பிறந்த அனைவரும் தலைவர் !"
வடவர் அடிமை வழக்கமிங் கில்லை !
இருக்கும் தமிழர் யாவரும் இந்தித்
திணிப்பை எதிர்க்கும் செந்தீ மறவர்
எனவுரை கேட்டு விரைந்தோ டினரே!

ஃ ஃ ஃ

**சொல்செவி கொண்மே !** — **நக்கீரன், சிங்கப்பூர்.**

**தமிழ்ச்சான் றீரே ! தமிழ்ச்சான் றீரே !**
**அமிழ்தத் தமிழை அயின்றுயிர் வாழும்**
**தமிழ்ச்சான் றீரே ! தமிழ்ச்சான் றீரே !**
**கமழும் தமிழின் நெஞ்சம் குமைந்தே**
**இமைய வரம்பன் வழிவந்தோர் நுமுன்**
**பல்கற் கடந்து பதறிடும் ஏழையின்**
**சொல்செவி கொண்மே, பல்சான் றீரே !**
**உலகத் தமிழ்மா மன்றமீங் குண்டே.**
**உலகத் தமிழர்க் குயரிய பெயரும் !**

தமிழ்க்கலைப் பண்பை உலகம் அறியத்
தமிழ்ச்சுவை தன்னைத் தமிழரும் உணர
ஆய்வுக் குழுவும் அமைத்ததாம் மலையம்
தேய்வைக் குழம்பொடு சேற்றைக் கலந்தும்
முல்லை யொடுவெள் ளெருக்கம் எட்டி
மல்லி இணைத்து மார்புறப் புனைந்தும்
சூடுந ராயும், பாடுந ராயும்
கூடுத லோதமிழ் ஆய்வுந டாத்தல் ?
திறமுறு செந்தமிழ்த் தலைமை நிறுவிய
மறைமலை யடிகள் வழிநில் மெய்மை
ஆய்வுத் திறன்சால் அறிஞர் ஏறுகள்
தோய்ந்த தமிழகம் தோற்றிய வரிசையில்
சேரா மரபும், தேரா அறிவும்
ஓராப் பட்டமும் கொண்டுமுற் றேன்றித்
தமிழ்ப்பெரும் பண்பைத் தனிநாக ரிகத்தைத்
தமிழ்உயிர் மூச்சைத் தடித்த மனத்தினல்
வடமொழிக் கிறுக்கால் வரும்படித் திமிரால்
அடிமைத் தனத்தால் மிடிமைப் போக்கால்
மொழிப்பற் றின்மையால் முழுதும் தாழ்த்திடும்
கழிசடை எண்ணக் கலப்புறு பண்பால்
மூவா அறிவால் முழங்குபொய்க் கொள்கையும்
காவா எழுத்தும் கைப்பொரு ளாக்கி
வாழும் தெ. பொ. மீ. துணைத் தலைவராய்ச்
சூழ விழவுத் தொடுக்கின் றனராம் !
வையா புரிவழி முத்துச் சண்முகம்
எய்யும் ஆய்வா இளந்தமிழ் புரக்கும் ?
மணக்கும் பூக்களை நிலத்திலா தோய்ப்பது ?
இணக்கம் இதற்கும் தமிழரா தருவது ?
தமிழ்மெய் உளங்கள் ஒன்றிரண் டுடனே
தமிழ்நிறை காணில் மெய்த்திறம் விளங்கும் !
தமிழ்வந் தாங்குத் தமிழா ராய்ச்சியைத்
தமிழால் நடத்தலே தான்சால் பினதாம் !
மேற்புல அறிஞரும் கீழ்ப்புல அறிஞரும்
ஏற்புடைத் தமிழை ஏற்றதன் ஆய்வு
தருதல் நலமெனில் தகைசால் தமிழே
இருநிலத் துறுபட ஏதம் செய்யும்,
நிறைபிலாத் தெ. பொ. மீயும் வருதலோ ?
குறையறி வுடையரோ கோலேச் சுதலும் !
ஒருதுளிக் குருதி தமிழுடம் புள்ளரும்
திருநிறை தமிழ்றி குறைபட நிற்பார் !
மறுமுறை தெ. பொ. மீவரின்
திருந்தமிழ் அறிதப் திண்ணம் உணர்கவே !

ஃ ஃ ஃ

# மூட்டழற்சி நோய்

—அ. பொன்னம்பலம்.

உடலிலுள்ள மூட்டுகளைப் பற்றிச்சிதைக்கும் தன்மை வாய்ந்த பல்வகையான கொடும் நோய் வகைகளில் ஒன்று மூட்டழற்சி நோயாகும் (Rheumatoid Arthritis); இந்நோயை மருத்துவர்கள் ''பல்மூட்டு அழற்சி'' எனவும் (Polyarthritis); மூட்டுச் சிதைவு நோய் (Atrophic Arthritis) ; எனவும் பல வாறுக அழைக்கின்றனர். இந்நோயினால் பற்றப்பட்ட மூட்டு கள் வீங்கிக் காட்சியளிப்பதோடு அல்லாமல், மிகுந்த வலியை யும் ஏற்படுத்தும். தொடக்கக் காலத்திலேயே இந்நோயின் தன்மைகளை நன்கு அறிந்து, அதற்கு இயைந்த மருத்துவ முறைகளை நாடவேண்டும் இல்லையேல் இக்கொடும் நோயானது மூட்டுகளின் அமைப்பியலை மாற்றுவதோடு அல்லாமல், மூட் டின் இயக்கங்களையும் தடை செய்து விடும்.

இந்நோயின் காரணமென்ன?: பெரும்பாலும் இந் நோயானது ஆண்களை விடப் பெண்களைத்தான் மிகுந்த அளவில் பற்றும். ஆண்களைவிட மூன்று மடங்கு மிகுதியாக இந்நோய் பெண்களைத் தாக்குகின்றது. 20 அகவைக்கும் 40 அகவைக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள பெண்கள்தாம் இந் நோய்க்கு ஆளாகின்றனர் எனப்பெரும்பான்மை மருத்துவர்கள் ஒரேமுகமாகக் கூறுகின்றனர். பின்பருவமாற்றத்தை (Menopause) அடைந்த பெண்களுக்கு இந்நோய் வருவது மிகவும் அரிதாகும். இந்நோய் ஏன் ஏற்படுகிறது என்ற வினாவிற்குச் சரி யான விடை இன்னும் ஆய்ந்து, தெளிவாகக் கண்டுபிடிக்கப் படவில்லை சத்துணவுக்குறைபாட்டுநிலைகள் (Malnutnition) நுண்ணுயிர்களின் படையெடுப்பு, உள அதிர்ச்சி (Emotionl-shock) போன்ற காரணங்கள் இந்நோயை ஏற்படுத்தக்கூடு மெனப்பெரும்பான்மையான மருத்துவர்கள் கருதுகின்றனர்.

இந்நோயின் விளைவுகள் : இந்நோய் தொடக்க காலத் தில் மூட்டுகளைச் சூழ்ந்துள்ள மென்திசுக்களையும், வெண்நார்த் திசுக்களையும் முதன் முதலாகத் தாக்கும். இதன் பின்னர் மூட்டுகளை மூடியுள்ள உள் உறையையும், மூட்டுக்குருத் தெலும்பையும் தாக்கத்தொடங்கும். அழற்சியின் காரணமாகக் குருத்தெலும்புகள் தங்கள் மென்தன்மையிழந்து கடினமாகின் றன. எலும்புகளின் மூட்டுப்பகுதிகள் தங்களுடைய அசையும் திறனை இழக்கின்றன. சிதைவு மாற்றங்கள் மூட்டு எலும்புகளைத் தாக்குவதோடு அல்லாமல் மூட்டுப்பகுதியைச் சூழ்ந்துள்ள

திசுக்களையும், மூட்டைச் சுற்றியுள்ள தசைகளையும் தாக்கும். இந்நோய் முற்றிய நிலையில் எலும்புகளை அரித்துக் கெடுத்து விடும்.

இந்நோயின் அறிகுறிகள்: இந்நோய் தன் வன்தன்மைகளை நிலைநாட்டுவதற்கு முன்னர், உடல்நிறை குறைதல், உடல் சோர்வு, உள்ளச்சோர்வு போன்ற அறிகுறிகள் ஏற்படும். இரண்டாந்தன்மை குருதிச்சோகை, நெஞ்சுத்துடிப்பு மிகுநிலை (Tachy cardia) மிகுவெயர்வை நிலை, போன்ற துயர் நிலைகட்கும் ஆளாகக்கூடும். இதன் பின்னர் உள்ளங்கை எலும்புகளின் ( Metacarpalbones ) தலைப்பகுதி மென்மையாவதோடு அல்லாமல் வலியையும் உண்டுபண்ணும் இத்தகைய நிலைக்குப்பின்னர்தான் நோய் மூட்டுகளில் தன்னுடைய வன்தன்மையைக் காட்டத்தொடங்கும். இந்நோயின் தொடக்க நிலையில் இரு கைகளிலும் உள்ள விரலிடை மூட்டுகள் ( Interphalangeal joints ) நன்கு வீங்கித் தோற்றமளிக்கும். இதன்பின்னர் விரல் தசைகளும், உள்ளங்கை தசைகளும் தத்தம் தன்மைகளை இழந்து சிதைவுறத்தொடங்கும் ; தசைகள் சிதைவுறுவதன் காரணமாக மூட்டுகள் அசைவு நிலையை இழந்து விறைத்து விடுகின்றன. விரலிடை மூட்டுகளில் துவங்கும் இத்தகைய சிதைவு மாற்றமானது நாட்கள் செல்லச்செல்ல மணிக்கட்டு மூட்டிற்குப் (Wrist joint) பரவி. அங்கிருந்து, முழங்கை மூட்டு, தோள்பட்டை மூட்டு, தாடை மூட்டு, இடுப்பு மூட்டு, முழங்கால் மூட்டு, கணுக்கால் மூட்டு இவ்வாறு உடலிலுள்ள எல்லாவகையான மூட்டுகளுக்கும் பரவி விடும். கை கால்களில் ஒரு பகுதியிலுள்ள மூட்டைத் தாக்கினால், மறுபகுதியிலுள்ள மூட்டும் தாக்கப்படுவது இந்நோயின் சிறப்பியல்பாகும் சிலபொழுதுகளில் முதுகெலும்பும் அழற்சியினால் தாக்கப்படுவதுண்டு.

சிலகால், உடலிலுள்ள நிணநீர்க்கணுக்கள் (Lymph-glands) வீங்கித் தோற்றமளிக்கக்கூடும். இன்னும் சில பொழுது மண்ணீரல் அளவுக்குமீறி வீங்கிவிடுவதுண்டு. மேலும் குருதியிலுள்ள வெள்ளணுக்களின் எண்ணிக்கை குறைவதும் உண்டு மூட்டழற்சிக்கு ஆளாகும் பிணியாளர்களில் பெரும்பான்மையோர் மூட்டுகளில் ஏற்படும் வலித்தொல்லைக்கும் ஆளாகக் கூடும்; இதன் காரணமாக இவர்கள் இரவில் உறக்கமின்றி மிகவும் அல்லல்படுவர் இந்நோயின் தன்மைகளை நன்கு கவனியாது விட்டுவிட்டால், இந்நோயானது பிணியாளனை முடமாக்கி விடும்.

மருத்துவ முறைகள் : அண்மைக்காலத்தில், மூட்டழற்சி நோயை நீக்கப் பலவகையான மருத்துவமுறைகள்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நோய் முற்றிக்கொண்டு செல்லும் நிலையில் பிணியாளனுக்கு முதல் தேவை படுக்கை ஓய்வாகும்; இதன் மூலமாக மூட்டுகளில் ஏற்படும் வீக்கம் வலி இவற்றின் தன்மையைப் பெரிதும் குறைத்துவிட முடியும்.

உணவு : மருத்துவ முறையில் மிகவும் இன்றியமையாதது பிணியாளரின் உணவைச் சீர் செய்வதாகும். பிணியாளனுக்குக் கொடுக்கும் அன்றாட உணவில் வெப்ப ஆற்றல் (Calories) மிகுதியாக இருக்கவேண்டுவதோடு அல்லாமல் உயிர்ச்சத்துகளும் ( Vitamins ) நிரம்பி இருக்க வேண்டும். சிறப்பாக உயிர்ச்சத்து பீ, சி போன்றவை நிரம்பப் பெற்ற உணவுப்பொருள்களைப் பிணியாளனுக்குக் கொடுக்கவேண்டும். சுண்ணாம்புச்சத்தின் ( Calcium ) அளவை மிகுதிப்படுத்தப் பாலாடை பால் போன்றவற்றைப் பிணியாளனுக்கு மிகுந்த அளவில் தரவேண்டும். பிணியாளனின் உடலின் எடையானது பொதுவான அளவைவிட மிகவும் குறைவாக இருந்தால் மருத்துவர்கள், உணவிற்கு முன்னர் கணையச்சாரத்தை (Insulin) குறைந்த அளவில் பிணியாளனின் உடலில் செலுத்துவார்கள்.

மருந்து வகைகள் : இந்நோய்க்கு ஆளாகும் பெரும்பான்மையான பிணியாளர்கள் குருதிச்சோகை நோய்க்கும் (Anemia) ஆளாகக்கூடும். எனவே மருத்துவர்கள் இரும்புச் சத்தைப் பிணியாளர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக இத்தகைய குறைபாட்டை அகற்ற முயல்வர். இந்நோய்க்கு ஆளாகும் பிணியாளர்களுக்கு ஏற்படும் மற்றொரு தொல்லை, அடிக்கடி மலச்சிக்கல் (Constipation) ஏற்படுவதாகும் ; தக்க மருத்துவ முறைகளின் மூலமாக இத்தகைய சிக்கலையும் நீக்க முயலவார்கள்.

மூட்டுகளில் ஏற்படும் வலியை அகற்றப் பல்வகையான வலிஅகற்றி மருந்துகளைப் பயன் படுத்துகின்றனர். ஆசுபிரின் (Asprin) பினசிடின் (Phenacetin) தோவர் மாவு (Dower's powder) கோடின்பாசுபேட் (Codeinephosphate) குயாயகோல் கார்பனேட் (Guaiacol corbonate) போன்ற மருந்துகள் வலிஅகற்றி மருந்துகளுக்குச் சான்றுகளாகும். வலி அகற்றும் தன்மை பெற்ற மருந்து வகைகளில் சிறந்தது பினைல் பூட்டாசோன் (Phenyl butazone) என்ற மருந்தாகும். மிகவும் கடுமையான நோய் நிலையின் பொழுது இத்தகைய மருந்தை வலி அகற்றியாக மருத்துவர்கள் பயன்படுத்துகின்றனர். நீண்ட காலமாக மூட்டமுற்சி நோய்க்கு ஆளாகும் பிணியாளர்களுக்குப் பொன்னையும் (Gold) மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால்

இந்த மருந்து பிணியாளரின் உடலில் பல்வகையான சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாகப் பெரும்பான்மையான மருத்துவர்கள் இந்த மருத்துவ முறையைக் கையாளுவதில்லை. இந்நோயை நீக்க மருத்துவர்கள் பயன் படுத்தும் மற்றொரு மருந்து கர்டிசோன் (Cortisone) ; கார்டிகோடிராபின் (Corticotrophin) வகைகளைச் சார்ந்த மருந்துகளாகும். இத்தகைய மருந்து வகைகளை நீண்ட நாட்கள் பயன் படுத்தவேண்டும் ; நீண்ட நாட்கள் இந்த மருந்து வகைகளை பயன்படுத்துவதால், பிணியாளருக்கு, உடல்பெருக்கம், நீர்வீக்கம் (Edema) மாதவிடாய் சிக்கல்கள், உறக்கமின்மை (Insomnia) இதயத்துடிப்புமிகுநிலை (Tachycardia) குருதி அழுத்தநோய் போன்ற பல்வகையான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

**காப்புஊசி மருத்துவமுறை:** மூட்டுகளின் புரையோட்டத்தின் காரணமாக மூட்டழற்சி நோய் ஏற்பட்டிருந்தால் காப்புஊசி மருத்துவமுறையை (Vaccine theraphy) மருத்துவர்கள் பயன்படுத்துகின்றனர் ; இத்தகைய மருத்துவமுறை நோயின் வன்தன்மையைக் குறைக்கப் பெரிதும் பயன்படுகிறது. *

குறிப்பு:- இக்கட்டுரையில் கையாளப் பெற்றுள்ள மருந்துப்பெயர்களுக்கான கலைச்சொற்கள், தகுந்த விளக்கக்குறிப்புகளுடன் பின்னர் தென்மொழியில் வெளியிடப்பெறும். (ஆ-ர்.)


## தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7-25 உருபா | 9 உருபா |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம்பக்கம் | (இரு வண்ணம்) | 100 உருபா |
| ,, ,, | (ஒரு வண்ணம்) | 75 உருபா |
| உள்ளே முழுப்பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப்பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தமிழர்களின் கைவேல்!

தமிழ் நாட்டின் விடுதலை முரசம்!

தமிழர்களுக்குக் கிடைத்த உரிமைப் பட்டயம்!

தமிழ் நாட்டில் இயங்கும் ஒரே தனித்தமிழ்த் தாளிகை!

# தென்மொழி

தென்மொழி என்றும் தன் கடமையை ஆற்ற வேண்டாமா? புல்லர்தம் பொய்மைச் சூறுவளிக் கிடையிலும் தமிழ்ப் பகைவர்களின் புரட்டுப் பேச்சுகளுக் கிடையிலும், தென்மொழி தயங்காது பாடாற்ற அதன் அச்சக அமைப்புக்கு உதவுங்கள்.

கடனாகவும், நன்கொடையாகவும், தங்கள் அன்பான, மேலான உதவியை இன்றே அனுப்பி உதவுங்கள்.

தென்மொழி,
கடலூர்-1.


மித்திரா அச்சகம் கடலூர்-1